அறிமுக விலை 20/=

# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

பாதை 01 | யூலை 26-ஒகஸ்ட் 01 - 2013 | பயணம் 02

## சிந்தித்திரு..



உலகையே நகர
வைக்கிறேன்
என்பவனைக்
கூப்பிடுங்கள்.
முதலில் அவன்
தன்னை
அசைத்துக்காட்டட்டும்.

- சோக்கிரட்டீஸ்

மிக விரைவில் புதிய பொலிவுடன்
www.putheyavan.com

## தொடரும் கறுப்பு ஜூலை அவலங்கள்

தமிழ் மக்களின் வரலாற்றில் இரத்தவாடை வீசும் கொடூரங்களை நினைவுபடுத்தும் மாதம் ஜுலை. மூன்று தசாப்த காலத் துயரினை சுமந்து நிற்கும் மாதம். அப்படி ஒரு வரலாற்று அவலம் இனியும் நிகழாது நிகழவிடமாட்டோம் என சூழுரைத்தவர்களே அது நடந்து 26வருடங்களில் அதனை விடவும் பன்மடங்கு கொடுமை மிக்க முள்ளிவாய்க்கால் துயருக்கும் காரணமாக இருந்தார்கள்.

1983-2009 என இடைப்பட்ட காலத்தில் பேரின வாத ஆட்சி தந்த வலியின் வேதனையை அதனை நேரடியாக அனுபவித்தவர்களே அறிவர். இந்த மூன்று தசாப்த காலத்தில் தமிழ்பேசும் மக்களை, சிறுபான்மையிரை நோக்கிய பேரினவாதக்குரல்கள் -

**யுத்தமா சமாதானமா?**
**சமாதானத்திற்கான யுத்தம்!**
**பயங்கரவாதிகளுக்கு எதிரான போர்!**
**மனிதாபிமான நடவடிக்கை !**

என பல்வேறு வாசகங்களில் எழுதப்பட்டாலும் அதன் தொனிப்பொருள் தமிழின அழிப்பு என்பதாகவே இருந்தது என்பதுதான் உண்மை. இல்லையெனில் இலங்கையின் ஆட்சிபீடத்தை அலங்கரித்தவர்களில் எவராவது ஒருவராயினும் தமக்கிருந்த ஆட்சி அதிகார பெரும் பலத்தை வைத்து இந்த நாட்டின் புரையோடிப்போய் இப்போது சீழ் பிடித்து உலகெங்கும் மணக்கும் இனப்பிரச்சினைக்கு பௌத்த தர்மத்தின் பேராலேனும் தீர்வொன்றை கண்டிருக்க முடியும்.

ஆனால் அவர்களால் அது முடியவில்லை. அதற்கு அவர்கள் முயலவுமில்லை.
அமைதி காக்க வருகிறோம் என பிரகடனம் செய்தோர் தந்த அவலம் வேறு. தமிழர்களுக்கு அரசியல் தலைமை தாங்க போட்டியிடுவோர்களின் அற்பத்தனமான சுயநலக் கூத்துகளால் ஏற்படும் அவமானம் வேறு


பாரதி பாடிய பாடல் ஒன்றுதான் இப்போது நினைவுக்கு வருவது.


**"விதியே விதியே தமிழ்ச் சாதியை-நீ என்ன செய்ய நினைத்திருக்கிறாய் ! "**
என்ற வரிகள்தான்.

இன்றும் நூறு ஆண்டு களின் பின்பும் அவசரகால நிலை 1958ஐயும், கறுப்பு ஜுலை 1983ஐயும், முள்ளிவாய்க்கால் அவலம் 2009ஐயும் மாறாவலியுடன் நினைவு கூரும் மக்களாகத்தான் நாம் இருக்கப் போகின்றோமா?

## கதிரைச்சவாரி..........









## மாகாண சபை தீர்வாகுமா?

இளைய தலைமுறையினரின் இதயக்குரல்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அறிவன் பதில்கள்

✪ சு. ராதிகா, கொடிகாமம்
**தேர்தலில் நிற்கலாம் என்று யோசிக்கிறேன்?**
தேறுதல் சொல்ல ஆட்கள் இருக்கிறார்களா?

✪ ஜெ. கோவிந்தன், புதுக்குடியிருப்பு
**குறுகிய காலத்தில் கோடீஸ்வரனாக வழி ஒன்று கூறுவீர்களா?**
விலாசம் மாறி வந்த கேள்வி இது .. யாராவது அரசியல் வாதியாகப் பார்த்துக் கோளுங்கள்!.

✪ ச. கந்தசாமி, அல்வாய்
**தமிழில் புதிது புதிதாக பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளதை கவனித்தீர்களா?**
தமிழர்களை குழப்ப நிலையில் வைத்திருக்க பகிரதப் பிரயத்தனம் செய்கிறார்கள்.
புதியவன் மக்களைத் தெளிவுபடுத்த வந்துள்ளான்.

✪ தி. றொபேட், திக்கம்
**'லீசிங் கொம்பனி' விளம்பரங்களால் கவரப்பட்டு இருப்பதையும் இழப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**
இருப்பதைக் கை விட்டு பறப்பதை பிடிக்க நினைப்பவர்கள்

✪ உ. வின்சன், பாசையூர்
**ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறினால், உலக அதிசயமாக எது இருக்கும் ?**
இலங்கையின் ஜனநாயக சோசலிஷம்!

✪ து. மதுசன், அளவெட்டி
**சமூகத்திற்கு ஆபத்தானவர்கள் யார் என்று தெரியுமா?**
கட்சி மாறிகளும் முடிச்சு மாறிகளும் சோமாறிகளும் தான

✪ வ. ரஞ்சிகா, அராலி
**சுதந்திரத்தின் வரைவிலக்கணம் என்ன?**
அன்னிய வல்லாதிக்கத்திடமிருந்து பெற்றதை உள்ளூர் மேலாதிக்கத்திடம் பறிகொடுத்து விட்டு பரிதவதித்து நிற்பது அல்ல.

✪ பா. அன்பழகன், வவுனியா
**கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றி மூத்த குடி இப்போது என்ன செய்கிறது?**
கல்லறைகளுக்குள் தமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை தொலைத்து விட்டு மணல் வெளியில் மல்லாந்து கிடக்கிறது.

✪ தா. செந்தூரன், மன்னார்
**தமிழர்களின் அரசியல் தற்போது எந்த நிலையில் உள்ளது?**
ஆளுமையற்ற தலைமை, ஒருமைப்பாடற்ற கொள்கை வாதிகளின் கூட்டு, அறிக்கை விடுவோரின் கோமாளித் தன்மை, அந்நிய ஆலோசனைகளுக்கு திட்ட பணியும் அடிமை மனோபாவம்., மேலாதிக்க சக்திகளுக்கு ஆமா" போடும் ஜால்ராத் தனம் இவைகளால் அலமலந்து விழி பிதுங்கிக் கிடக்கிறது.

✪ சி. கீர்த்தி, மல்லாவி
**எந்த நாடு உருப்படாத நாடு?**
மண்வளத்தையும் மனித வளத்தையும் பயன்படுத்த தவறும் நாடு....

✪ வி. அருண், வவுனியா
**தமிழர் தலை நிமிர்ந்து வாழ வழியே கிடையாதா?**
அரசுக்கும் அயலுக்கும் தலையாட்டும் தலைவர்கள் உள்ள வரை சாத்தியமேயில்லை.

✪ ச. மோகன், கொடிகாமம்
**சாதாரண கைதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசம்?**
முன்னவர் தனி மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர், மற்றவர் தேசத்திற்கே பாதிப்பை ஏற்படுத்துபவர்.

✪ ஜெ. கவிதா, மன்னார்
**அடிக்கடி பெருமூச்சு வருகிறதே என்ன காரணம்?**
சுதந்திரமாக மூச்சு விடும் சுதந்திரம் குறைந்து வருவதே..!

✪ மு. ரமணன், மாங்குளம்
**வீதிகள் எல்லாம் 'கார்ப்பெற்' வீதிகளாக மாறி வருவது குறித்து..!**
வாகனதாரிகள் வேகமாக பறக்கப் போகிறார்கள் பாதசாரிகள் வீதிகளில் கிடக்கப் போகிறார்கள்.

✪ லி. மணியம், கொய்யாதோட்டம்
**மதம் அரசபீடம் ஏறினால்?**
ஆட்சிபீடத்தில் உள்ளோர்க்கு மதம் பிடிக்கும்

✪ நா. செந்தில்நாதன், அளவெட்டி
**ஒரு இலக்கியவாதி சந்தர்ப்பவாதியாக மாறினால்...!**
அவர் படைத்த- படைக்கின்ற இலக்கியங்கள், இலக்கற்றவையாகி விடும்

✪ சி. ஜெசிந்தன், குருமன்காடு
**நாட்டில் மதுபானக் கடைகள் அதிமாகி வருகின்றதே?**
ஊக்க 'மது' கைவிடேல் என் உறுதியோடு இருப்பவர்கள் அதிகரித்து வருகின்றனரே..!

✪ கி. சாந்தி, நெல்லியடி
**மனித நேயம் எப்போது தோற்றுப் போகின்றது?**
சர்வாதிகாரம் தலைதூக்கும் போது

✪ ஜெ. தேவகி, முழங்காவில்
**மரணத்தை வெல்ல மார்க்கமே இல்லையா?**
ஜனனம் ஆகாமல் இருப்பதே அதற்கு ஒரே வழி

✪ பூ. சிந்துஜா, அச்சுவேலி
**இன்றைய இளைஞர் யுவதிகளின் பொழுது போக்கு எது?**
காதலிப்பதும், கவிதை எழுதுவதும்

✪ ச. கோபி, மன்னார்
**இன்றைக்கு வளமாக வாழ்பவர்கள் எவர்?**
அரசியல்வாதிகளும், ஆன்மிக வாதிகளும் மட்டுமே... தொண்டர்களும், அடியார்களும் பாவம்!

✪ க. இராமச்சந்திரன், முல்லைத்தீவு
**காதல் போயின் காதல்போயின் சாதல்....சாதல்.... சாதலே தான் முடிவா?**
தமிழ்ப் படங்களைப் பார்க்கும் போது காதல் போயின் காதல் போயின் மோதல் மோதல் மோதல் என்றால் லவ்வு தெரிகின்றது.

✪ ரு. சுதர்சன், பூநகரி
**இன்றைய அரசியல் நிலவரம் எப்படி உள்ளது?**
கலவரம் தருவதாக உள்ளது

✪ செ. மீரா, மல்லாகம்
**ஜனநாயகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவது எது?**
நிறைவேற்று அதிகாரம் ஒருவரிடமே குடி கொண்டிருப்பது.

✪ கீ. துவாரகா, உடுவில்
**பின் தூக்கி முன் எழும் பத்தினிகள் யாரும் இக் காலத்தில் இருக்கிறார்களா?**
ஏனில்லை குடிகார கோமானுக்கு வாழ்க்கைப்பட்டவர்கள் பெரும்பாலும் என்ன செய்கிறார்களாம்?

✪ த. பூஜா, பூவரசங்குளம்
**நமது கவிஞர் பெருமக்கள் என்ன செய்கிறார்கள்?**
முன்னர் தம் வயிற்றுக் கூழுக்காகக் கவி பாடினார்கள் இப்போது பாழும் பதவிகளுக்காக துதிபாடுகிறார்கள்.

---



## எதிர்காலத்தின் மீது ஒரு பார்வை.

நிகழ்காலத்தின் சுவர்களுக்குப் பின்னால் ஒளிக்கும் மானுடத்தின் பாடல்களை நான் கேட்டேன். அழகு என்னும் ஆலயத்தில் ஒலிக்கும் ஆராதனை நேர மணியோசையை கேட்டேன். உணர்ச்சிகள் என்ற உலோகத்தால் வடிவமைக்கப்பட்ட மணிகள் மனித இதயம் என்ற புனித மேடையில் பொருத்தப்பட்டுள்ளன.

இயற்கையின் மார்பின் மீது தொழுகை புரியும் கூட்டத்தை எதிர்காலத்தின் பின்னால் பார்த்தேன் கிழக்கு நோக்கிய அந்த முகங்களில் உண்மை என்ற உதயத்தின் ஒளிப் பிரவாகத்திற்கான எதிர் பார்ப்புகள் அறியாமையின் தோல்வி, பிரகாசத்தின் வெற்றி, ஆகிவற்றைப் பற்றி மனிதனுக்கு எடுத்துக் கூற ஒன்றுமேயில்லாத.

சிதைந்துபோன நகரத்தைப் பார்த்தேன் நான். சுற்றிலும் அமர்ந்தவாறு கவனிக்கும் இளைஞர்களிடம் தமது கடந்தகால கதைகளை சைப்பிரஸ் மரநிழலில் அமர்ந்தவாறு கூறிக்கொண்டிருக்கும் முதியவர்களை பார்த்தேன். மல்லிகை செடிகளுக்கு கீழே தம் இசைக்கருவிகளை மீட்டும் இளைஞர்களையும்.

கருங்கூந்தல் அவிழ நாட்டியமாடும் அழகிகளையும் கண்டேன். அறுபடை செய்யும் கணவர்களையும். இனிய பாடல்களை பாடியவாறு தானியங்களை சேகரிக்கும் மனைவியர்களையும் கண்டேன். லில்லி பூக்களால் கிரீடம் செய்து தன்னை அலங்கரித்துக் கொள்ளும் பெண்ணைப் பார்த்தேன். மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்குமிடையில் உறுதி செய்யப்பட்ட நட்பை பார்த்தேன்,

நம்பிக்கையும் பாதுகாப்பும் கொண்ட பறவைகளும், பட்டாம் பூச்சிகளும் ஓடை நோக்கி பறந்து செல்வதைப் பார்த்தேன். ஏழ்மையையும் பார்த்ததில்லை. செல்வத்தையும் பார்க்கவில்லை. சமத்துவமும் சகோதரத்துவமும் மனிதாகளிடையே நிரம்பியிருப்பதைக் கண்டேன். தம்மை தாமே குணப்படுத்திக் கொள்ளும் நுட்பம் எல்லோருக்கும் தெரிந்திருந்தால்,

மருத்துவரைப் பார்க்கவில்லை. மனச்சாட்சியே மதகுருவாக இருப்பதால் வேறு ஒரு மதகுருவை பார்க்கவில்லை. நட்பும் தோழமையும் இயற்கை என்ற நீதிமன்றத்தில் அழுலாக்கப்பட்டதால் வழக்குரைஞர்களை பார்க்கவில்லை. ஆத்மாவின் விழிகளை மூடியுள்ள குழப்பம் என்ற திரை நீங்கி படைப்புக்களுக்கு தானே ஆதாரம் என்று நினைத்துச் சிறுமைகளில் நின்று மேலோங்கும்,

மனிதனைப் பார்த்தேன். சொர்க்கத்தின் முகத்தில் மேகங்கள் எழுவதை தண்ணீரின் பரப்பிலிருந்து தென்றல் சேகரிப்பதையும், இப்போது ஆன்மா படிக்கிறது. பூக்களின் மூச்சில் மிளிரும் அர்த்தத்தையும், வானம்பாடியின் இசை இராகத்தையும். அது உணர்ந்து கொள்கிறது. நிகழ்காலத்துச் சுவர்களுக்குப் பின்னால் அமைக்கப்பட்ட வருங்காலம் என்ற அரங்கின் மீது, அழகென்னும் மணமகனையும், உணர்ச்சியென்னும் மணமகளையும்

வரம்தரும் கடவுளாய் வாழ்க்கையையும் பார்த்தேன்.

கலீல்கிப்ரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்



"தவறுகளை இனங்கண்டு கொண்ட பின்பும் அவற்றை திருத்திக் கொள்ள முயற்சிக்காமல் இருப்பவன் மிகப்பெரிய தவறுகளுக்கு காரணமாகும் அறிவிலியாவான்."

–கொன்பியூஸியஸ்

## வேட்பாளப் பெருந்தகைகளுக்கு....

நடக்கப்போகும் (அல்லது நடக்காமல் இருக்கவும் கூடும்) வடமாகாண சபைக்கான தேர்தல் குறித்த ஊடகம்சார் பரபரப்புகள்களை கட்டத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக தமிழ் பேசும் மக்களின் மனோநிலை சிதம்பர ரகசியமானது.

ஆனாலும் அவர்கள் உள்ளங்களை ஊடுருவி நோக்குவோர்கள் மட்டும் வெறுப்பும், அலட்டசியமும். கவலை மற்றும் கோபம் நிறைந்த உள்ளக் கிடக்கைகளை அறிவர் தேர்தல் அவர்களின் அடங்காத துயருக்கும், அவலங்களிற்கும் மட்டுமல்லாது அவர்களது ஆத்மார்த்த அபிலாசைகளுக்கும் கூட எவ்வித ஆறுதலான தீர்வை கூட பெற்று தராது என்பதில் அவர்களிற்கு அசைக்க முடியாத நம்பிக்கை. இது வரலாறு கற்றுகொடுத்த கசப்பான பாடமாகும்.

**"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை"** என்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அரூபக் கட்டமைப்பை அவர்கள் தேர்வு செய்ய நினைப்பது **"பேயை விட குட்டிச்சாத்தான்"** பரவாயில்லை என்ற நிலையில் தான் என ஒரு சாமானிய தமிழ் குடிமகன் வீதியில் நின்று பகிரங்கமாகவே கூறியதன் அரசியல் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள முடியாதவர்களல்ல.

சுமார் நான்கு தசாப்தங்களின் முன்னரேயே சிந்தனையாளர் சிரித்திரன் சுந்தர் அவர்கள் அவரது அர்த்தச் செறிவு கொண்ட **"மகுடி"** பதில்களில் உலகத்திலேயே நகைச்சுவையான விடயம் என்னவென்றால் ஒற்றுமை இல்லாத இனம் உரிமைக்காக போராடுவதுதான்– எனக் கூறியிருந்தார்.

நான்கு தசாப்தகால அறிவியல் வளர்ச்சியோ, அரசியல் பட்டறிவோ நம் தமிழ் தலமைகளில் எவ்வித சூடு, சுரணையையும் ஏற்படுத்தவில்லை என்பது அவமானகரமான துயரமாகும். உரிமைகளை கைமாற்றிக் கொடுத்தேனும் கதிரைகளில் இடம்பிடிக்கத் நினைக்கும் தமிழ் அரசியல்வாதிகளை நினைக்க... இவ்வளவு கேவலமானவர்களா இவர்கள் என எண்ணத்தோன்றுவது தலைகுனிய வைக்கும் விடயமே.

உரிமைக்காக உதிரம் சிந்தி மண்ணுக்கு உரமாகிப்போன புனிதர்களான மக்களின் ஆத்மாக்கள் இந்த பதவி நேசர்களை எந்த யுகத்திலும் மன்னிக்காது.

மக்கள் நிவாரணத்திற்கு கையேந்திநிற்கும் அவலத் துயரச் சூழலில் இவர்கள் வாக்குகளுக்காக அம்மக்களிடம் கையேந்தி நிற்கப்போவது பரிதாபகரமான நகைச்சுவை காட்சியாகவே இருக்கப்போகிறது.

ஒரே கொடியின் கீழ், கோட்பாட்டின் கீழ், அமைப்பின் கீழ், உறுதியும், தெளிவும், நேர்மையும் கொண்ட, மேலாதிக்கம், வல்லாதிக்கம் என எதற்குமே சுய கௌரவத்தை விட்டுக் கொடுத்து சேவகஞ் செய்யாத இலட்சியத் தலமையின் கீழ் என்றைக்கு தமிழ் மக்கள் வழிநடத்தப்படுவார்களோ என்ற ஏக்கம் எழுவதும் உண்மையே.

அடிமைகளின் கல்லறைகளை விடவும் தோற்றுப்பானவர்களின் கல்லறைகள சொல்லும் சாதனைக் கதைகளே வரலாற்றின் வெற்றிச் சின்னங்களாகியுள்ளன. எவ்வித அதிகாரங்களுமில்லாத மாகாணசபைத் தேர்தல் பதவிக்கதிரைகளில் அமர்வதற்கான இடம்பிடிக்கும் போட்டியில் சண்டிக்கட்டு கட்டி களம் இறங்கி நிற்போர்களே... ஒருவார்த்தை!

**மக்கள் பாவம் அவர்களை ஏமாளியாக்காதீா** அது மட்டுமல்ல...

தேர்தல் வெற்றியென்பது உங்களுக்கு பதவிகளை பெற்றுத்தரலாம் ஆனால் மக்களுக்கு உரிமைகளை பெற்றுத்தராது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இதுதான் சுதந்திர இலங்கையின் ஜனநாயகம் காலம் காலமாக தமிழ்மக்களுக்கு கற்றுத் தந்துள்ள பாடம்.

நீங்கள் அதனை இதுவரையில் கற்றுக்கொள்ளாதிருந்தால் நீங்கள் தமிழர்களா என்ற சந்தேகம் எழுவதும் இயற்கையே.....!

புதியவன்
இல# 87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி.இல. 023 3233444
E.mail: putheyavan@sltnet

PUBLIC LIBRARY
JAFFNA

## பகிரப்படாத பக்கங்கள






ஆறு தசாப்தத்திற்கு மேலாக தமிழரின் தலைவிதி தமிழ்த் தலைவர்களின். தந்திரோபாயம் இனிமையால் தொடர்ந்து தோற்றுப் போகின்றது. உயிரமிப்புக்களும், புக்களும் வாழ்விடப் பறிப்புக்களும் அடங்குமுறை ஏகாதிபத்தியமும்தான் இன்றைய தளத்தில் மிதமாக எஞ்சியுள்ளன சனநாயகப் போராட்டம் அடக்கப்பட்டும், ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டும், தமிழர் பிரதேசத்திலேயே அவர்களை சிறுபான்மையினராக்கும் திட்டமிட்ட இன ஒடுக்குமுறை இன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இனப்பறிப்பை விட நிலப்பறிப்பு இன அடையாளத்தை நிரந்தரமாக அகற்றுவதற்கான அடிப்படையாக பேரினவாதம் கருதுகிறது.

எனவே இலட்சக்காணக்கான மக்கள் உயிர் அழிந்தும். ஆயிரக்க ணக்கான போராளிகள் தம் உயிர் துறந்தும், முடிவில் விடிவற்ற பயணமாவே தமிழ்தேசிய இன விடுதலை நகர்கிறது...

இன்றைய தமிழ் தேசிய அச்சாணி கூட்டமைப்பு என கின்ற படுத்தப்பதவிப் பகிர்வாளர்களிடம் அகப்பட்டு இன உணர்வு அசிங்கப்படுகிறது. யுத்தம் முடிவுற்று நான்கு ஆண்டுகள் ஆகியும் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுக்கு இதுவரை எந்தவிதமான ஆரோக்கியமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளவில்லை. நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்கள் கூட எந்த வித திட்டமிடலுமின்றி கூட்டமைப்பில் உள்ள அங்கத்துவ கட்சிகளின் நாபன் நோக்கிலும், சில பாராளுமன்ற உறுப்பினர்களின் இருப்பை தக்க வைப்பதற்குமே நடத்தப்படுகிறது. வட கிழக்கில் நில அபகரிப்புத் தொடர்பான எந்த வித புள்ளிவிபரமும் இவர்களிடம் முறையாக இல்லை. யுத்தத்தினால் பெரிதும் அழிவடைந்த மக்களுடைய மீள்வாழ்வு தொடர்பாகவும் அங்கவீனர்கள், அனதைகள், விதவைகள், காணமால் போனவர்களின் எதிர் காலம் தொடர்பிலும் தமிழ் மக்களை வழி நடந்துகிறோம் என உரத்த குரலில் ஓசையிடுபவர்களின் நிகழ்ச்சி நிரல் தான் என்ன? இவற்றுக்கு புலம் பெயர்ந்தவர்களை எவ்வாறு பன்படுத்தினார்கள்? அல்லது அவர்கள் இவா களை நம்பவில்லையா?

ஊடகங்களில் உணர்ச்சிவசமாகவும் அறிக்கைகளோடு, காலம் கடந்துகிறார்கள் இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்ளோ அல்லது அவர்களது குடும்பங்களுக்கோ எந்தபங்கமும் நேரவில்லை.

ஆகவே கூட்மைப்பை விமர்சிப்பது இப்பத்தியின் நோக்கமல்ல. தமிழர் களுக்கு விசுவாசமாக செயலாற்ற வேண்டும் என்பதே நோக்கம். கூட்டமைப்பு பதிவு என சந்தியில் நின்று பந்தாடி ஆளுக்கொரு திசையில் அறிக்கை விட்டு மக்களை உசுப்பேத்தினார்கள். ஆனால் இதெல்லாம் இவர்கள் பதவியை பங்கு போட்டு பல காலம் சுவைப்பதற்கே என அறிவு பூர்வமாக புரிந்து கொண்ட மக்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

மீண்டும் அதிகாரமில்லா மாகாணசபை தேர்தல் சகதிக்குள் பதவி ஆசைக்காக பகலிரவாக ஓடுகின்றா்கள் முதலமைச்சா் கதிரைக்கு நீண்டநாளாய் பலர் கனவு கண்டனர். முடிவில பலருக்கு அது கனவாகவே போய் விட்டது. பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், கல்வியிலாளர்களும், பதவிக்காய் பண்பின்றி ஓடியதை ரசித்தோம் முடிவில் முறையின்றி பின்கதவால் முதலமைசர் வேட்பாளராகினர் சீ.வி.விக்னேஸ்வரன். கொழும்பு தலைமைகளின் ஆசீர்வாதத்துடன் தலைவர் இரா. சம்மந்தனால் உட்கட்சி ஜனநாயகம் இன்றி, கூட்டுக் கட்சிகளின் ஆலோசனை இன்றி ஒரு தசாப்தத்திற்கும் மேலான சும்மந்தன் அவர்களின் தலமைத்துவம் தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனத்திற்கு ஆரம்ப புள்ளியை சுட்டுவதற்கு இலக்கு திட்டமில்லை. முதலமைச்சர் தெரிவின் மூலம் தலைமைத்துவத்தின் இராஜதந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றது என்பதை வெள்ளிடை மலையாக்கி விட்டது. அண்மைக்கால நிகழ்வுகள் மாறாக கூட்டமைப்பின் பதிவிற்காக உரத்த குரலில் வாதிட்டவர்கள் தேர்தலில் ஆசன வசூலில் தமக்கான கேள்வி பங்கை அழுத்தி உயர்த்துகிறார்கள். இப்போது கட்சி பதிவை மறந்துவிட்டு தத்தமது கட்சிவாதத்தை முதன்மையாக்கியிருக்கின்றார்கள். மக்கள் நலனை மறந்து இப்போது அவர்களது மக்கள் நலன்வாதம் எங்கே போய்விட்டது? எனவே தமிழ் தேசியத்தை காட்டிக் கொடுத்த ஆனந்தசங்கரியாரும், கூட்டிக் கொடுத்த சித்தார்த்தனும் கூட்டமைப்பின் போட்டியாளராம். தமிழ்தேசியம் எங்கே போகிறது? கூட்டமைப்பிலுள்ள உதிரிக்கட்சிகளுக்கு கிடைத்த 'வசூலை' நிரப்ப தகுந்த நபர் இல்லை. ஆள் பிடியில் அதிக வேட்டை பாவம் தமிழ் மக்கள். தந்தை செல்வா தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று கூறிய கருத்தியல் வேறொன்றே என எண்ணத்தோன்றுகின்றது. தமிழ் தலைமைகளிடமிருந்து தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறினாரோ யாமறியோம் பராபரமே!.

தமிழ்தேசியத்திற்கு சற்றும் தொடர்பில்லாதவர்களெல்லாம் பதிவிகளை பதம் பார்ப்பதற்காய் பரிதவித்து படியேறுகிறார்கள். இவர்கள் கடந்தகாலம் அரசுக்கு நல்ல ஆசுவாச விசுவாசிகள். ஓய்வூதியம்பெற்ற பின்பு பொழுதைப் போக்குவதற்கு கற்றறிவாளர் என்னும் நாமத்துடன் வழிப் போக்கர்கள் எல்லாம் தேசியம் என்னும் வலைக்குள் உட்புகுந்து விட்டார்கள். இப்போது கூட்டமைப்பின் வேட்பாளருக்குரிய தகைமை தலை நரைத்திருக்க வேண்டும். என்பது மட்டுமே இது மட்டுமா? முதலமைச்சவுப் பதவியை வைத்து கூட்டமைப்பிற்குள்ளேயே இன்னும் சிலர் அரசியல் நடத்துகின்றனர். மறுபுறம் தம்மை வேட்பாளர் என உறுதிப்படுத்தியவர்கள் அமைச்சுப் பதவிக்காய் அலறி ஓடுகின்றனர். பங்கு பேசுதல்களும் நடைபெறுகின்றன.

சுகாதார அமைச்சிற்கு மூன்று வைத்தியர்கள் விடாத போட்டி. கல்வி அமைச்சிற்கு கிளிநொச்சி ஓய்வூதியர் தானே என்கிறார். கொழும்பு வருகையாளரும் இல்லை நானே சிறந்தவர் என்கிறார். இன்னும் சிலர் அமைச்சு இல்லாவிட்டால் வேட்பாளர் பதவி வேண்டாம் என்கிறார்களாகம். பாவம் மக்கள் முள்ளிவாய்க்காலை வைத்து நல்ல வியாபாரம் இலாபம் அடைவது தலைவர்கள். தமிழ் மக்கள் இன்னும் தறப்பாள்களுக்குள். பதவியில் இத்தனை சுகம் என்று எப்படி அறிவார்களோ. அதுான் பத வியிழந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதறி ஓடுகிறார்கள். "பல்லில் பட்டநரி பனையிலும் கிடவாதம்." என்னும் கிராமத்து மொழி உண்மை போலும். எனவே தமிழ் மக்களுக்கு இது மற்றுமொரு முள்ளிவாய்க்கால். வடமாகாணசபை தேர்தல் கூட்டமைப்பு இலாப குழறு படிகளை மறந்து இன விடுதலைக்காய் தேர்தலை எதிர்கொள்வதற்கு வியூகங்களை வகுக்கவேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறவேண்டும். அரசின் கபடத்தனத்தை முறியடிக்க முறையான செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் பரப்புரையை மேற்கொள்ளவேண்டும். கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் தத்தமது ஆசனப் பங்கீட்டின் படி வெற்றி பெற முனைவார்களாயின் கிழக்கின் நிலையே இங்கும் நேரலாம். இது ஏனைய தேர்தல்கள் போல் அல்ல. அதிகாரம் இல்லாவிட்டாலும் தமிழர்களின் எதிர் கால தலைவிதியை சர்வதேச நிலையில் சார்பு நிலை பேசு பொருளாக்குவதற்காக நடைபெறும் இறுதிப் பரீட்சை என்பதை தமிழ் தலைமைகள் இன்னும் உணராமல் இருப்பார்களேயாயின் இவர்களை எதிர் காலம் மன்னிக்கவே மாட்டாது.

# தடம் மாறும் அரசியலில் உருவாகும் புதிய தலைமைகள்

அக்கினீஸ்வரன்.



**மாகாண சபை தேர்தல் 2013**

நீண்டகாலமாகவே நடத்தப்படுமா? நடத்தப்பட மாட்டாதா? என்ற சந்தேகத்திற் குள் தடுமாறிக் கொண்டிருந்த வட மாகாணசபை தேர்தல் நடத்தப்படப் போகிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் வடக்கின் அரசியல் நிலமை சூடு பிடித்துள்ளது. ஐ.ம.சு.மு, ஈ.பி.டி.பி, ஐ.தே.க மற்றும் சுயேட்சை குழுக்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பு என பல தரப்பினரும் இத்தேர்தலை முகங்கொள் வதற்காக தயாரிப்புக்களில் மும்முரமாக இறங்கிவிட்டனர். ஆளும் ஐ.ம.சு.மு சார்பில் முன்னாள் போராளிகள் சிலரை வேட்பாளர்களாக நிறுத்துவதன் மூலம் வெற்றியை பெற்றுவிட முடியும் என்ற கனவுடன் அது செயற்பட்டு வருகிறது. ஐ.தே.க தனக்கென ஒரு உறுதியான ஆதரவுத் தளம் இருப்பதாகவும் அதைப் பேணி பாதுகாக்கும் முகமாக போட்டியிடப் போவதாகவும் தெரிவித்துள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ தான் முதலமைச்சராக வந்தால் 13வது திருத்தச் சட்ட த்தை அமுல் படுத்தப்போவதாக தெரிவித்துள்ளார். அதன் அர்த்தம் தான் முதலமைச்சராக வரா விட்டால் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விடமாட்டேன் என்பதுதான் அர்த்தமாக இருக்குமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

எப்படி இருந்த போதிலும் வடக்கு மாகாணசபை தேர்தலில் த.தே.கூ மிகப்பெரும் வெற்றியைப் பெறும் என்பதே பொதுவான அபிப்பிராயம். அந்த வெற்றியை எவ்விதமான வாக்குறுதிகள் மூலமோ, நாடகங்கள் மூலமோ தில்லு முல்லுகள் மூலமோ, ஏன் படையினரின் தலையீடுகள் மூலமோ கூட தடுத்து நிறுத்திவிட முடியாது என்றே நம்பப்படுகின்றது.

இப்படியான தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு முற்றிலும் சாதகமான சூழ்நிலையில் தான் அதன் முத லமைச்சர் வேட்பாளர் தொடர்பான சர்ச்சைகள் ஆரம்பமாகின. ஆரம்பக் கட்டத்தில் பல்வேறு பெயர்கள் அடிபட்ட போதிலும், சுழற்சி முறையில் பதவி வகிப்பது போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இறுதியில் மாவை சேனாதிராசா, முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகியோ ரின் பெயர்களே நீண்ட விவாதங்களுக்குட்படுத்தப்பட்டன. இறுதியில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனே முதலமைச்சர் வேட்பாளராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டு விட்டதாக தெரி விக்கப்பட்டுவிட்டது.

அவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தி மிகவும் மகிழ்ச்சிக்குரியதும், வரவேற்கக் கூடியதுமாகும். இருந்தாலும் கூட அந்த தெரிவு தொடர்பாக இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களும் கருத்து மோதல்களும், விமர்சனங்களும், ஊடகங்களில் வெளிவந்து சிரிக்க வைத்தமை ஏற்றுக்கொள்ள முடியாத நடைமுறையாகும்.

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு கூட்டமைப்பிற்குள் உட்கட்சிப் போராட்டங்கள் நிகழ்வதும், அதை நீண்டதொரு இலக்கை நோக்கிய விவாதங்கள் மூலம் தீர்க்கப்பட்டு ஒரு முடிவுக்கு வருவதும் தவிர்க்க முடியாத அம்சங்களாகும். அது மூடிய கதவுகளுக்குள் நடைபெறவேண்டும். அங்கு வெளி விடப்படும் முரண்பாடுகள் மக்கள் மத்தியில் வந்து கூத்தாடக் கூடாது. ஆனால் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளிலுள்ள சிலராலேயே இவ்விடயங்கள் ஊடகங்களின் விவாதப் பொருளாக்கப்பட்டமை கவலை யளிக்கும் விடயமாகும். இப்படியான செய்திகளும், அறிக்கைகளும் மக்களை குழப்புவனவாகவும், நம்பிக்கையிழக்க வைப்பனவாகவும் மாறிவிடும் என்பதை சகல தரப்பினரும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

எது எப்படியானாலும் விக்னேஸ்வரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமேயாகும். அவர் தனது தெரிவு தொடர்பாக கருத்து வெளியிடுகையில் நான் அரசியலில் மாவை சேனாதிராசா போன்று அறிவோ, அனுபவமோ அற்றவர் எனவும், நீதி, நிர்வாகத்துறையில் தனக்குள்ள அனுபவத்தைக் கொண்டு தனது கடமையை நிறைவேற்ற முடியும் என தான் நம்புவதாக தெரிவித்தார். அதே வேளையில் மாகாணசபை என்பது அதிகாரமற்ற ஒரு அமைப்பு என்பதையும் அவர் குறிப்பிடத் தயங்கவில்லை.

தமிழ் மக்களுக்கு மாகாணசபைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ; அல்லது சில அதிகாரங்களையாவது கொண்ட அமைப்பாகவோ கருதவில்லை. ஆனால் உரிமைப்போராட்டப் பாதையில் அதுவும் ஒரு ஆயுதம் என்ற மட்டத்தி லேயே கதை நகர்கின்றது. அதை அரசு இன ஒடுக்கு முறையின் ஒரு ஆயுதமாகப் பாவிக்க அனுமதிக்க கூடாது. என்பதற் காகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு அதன் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

அது மிகவும் இடர்மிகுந்த வளைவு, சுழிவுகளைக் கொண்ட ஒரு பாரிய கடமையாகும். இதற்கு விடாப்பிடியான இலட்சிய உறுதியும், தந்திரோபாயமான வியூகங்களை வகுப்பதில் தேர்ந்த ஆற்ற லும், அனுபவமும், அர்ப்பணிப்பும் வேண்டும். இதை நிறைவேற்றுவதில் சி.வீ.விக்னேஸ்வரன் எவ்வளவு வெற்றி பெறுகின்றார் என்பதைப் பொறுத்தே அவருக்கு வழங்கப்படும் முதலமைச்சர் பதவி பொருத்தமானதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய முடியும்.

ஏனெனில் வட மாகாணசபை அதிகாரம் என்பது நிர்வாகத்தை நேர்மையாகவும, சரியாகவும், சட்ட ப்பிரகாரமும், நடத்துவது என்பனவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டு விட முடியாது. அதன் ஒவ்வொரு நகர்வும் எமது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதை தடுப்பதிலும், இழந்த உரிமைகளை பெறும் வகையிலும் அமையவேண்டும்.

இப்படியான ஒரு பாரிய பொறுப்பு முதல மைச்சருக்கு உண்டு என்பது ஒரு சந்தர்ப் பத்திலும் மறுக் கப்பட்டு விடக் கூடாது. அது அவரின் ஆளுமை, ஆற்றல், அர்ப்பணிப்பு உணர்வு என்பவற்றை பொறுத்ததாகும். இதுவரை அரசியலில் எவ்வாறு காத்திர மான பங்களிப்பினையும் வழங்கியிராத அவ ர் தொடர்பாக நாம் எவ்விதத்திலும் அபிப்பிராயங்களை முன்வைக்க முடியாது.

ஆனால் முன்னாள் நீதியரசர் விக் னேஸ்வரன் நீண்ட அரசியல் பாரம்பரியம் வாய்ந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமை முதலமைச்சர் வேட்பாளர் கூட்டமைப்பின் நிலமை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்தமை தொடர்பாக நாம் அதனை விமர்சிக்காமல் இருக்க முடியாது.

1965ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அரசாங்கத்தை அமைக்குமளவுககு பெரும்பான்மையினைப் பெறவில்லை. அந்தச் சந்தர்ப்பதில் ஐக்கியதேசிய கட்சி, தமிழரசு கட்சி உட்பட ஏழு கட்சிகளுடன் சேர்ந்த கூட்டரசாங்கம் ஒன்றைமைத்தது. அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக டட்லி- செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானது. தமிழரசுக் கட்சிக்கு உள்ளுராட்சி அமைச்சுப் பதவியும் வழங்க ப்பட்டது.

அன்று தமிழ் மக்களுடன் நெருங்கி உறவாடி மக்களின் உணர்வுகளைப் புரிந்த கொண்ட ஆற் றல் மிகுந்த தலைவர்கள் மக்களுடன் எவ்வாறான தொடர்புமற்ற, அரசியல் களத்தில் அனுபவமற்ற இராணி சட்டத்தரணி திருச்செல்வம் அவர்களுக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

அவர் நான்கரை வருடங்கள் அமைச் சர் பதவி வகித்த போதும் தமிழ் மக்களுக்கு எவ்வித பணியும் ஆற்ற வில்லை. மக்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவுமில்லை. டட்லி- செல்வா ஒப்பந் தத்தை நிறைவேற்ற அமைச்சரவையில் ஒரு தீர்மானம் கூடக் கொண்டுவரவில்லை. ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஒரு திறமையான அமைச்சராக கடமையாற்றிவர். இறுதியில் திருக்கோணேஸ்வரத்தை புனிதப் பிரதேசமாக்கவில்லை என்று காரணம் கூறி அங்கிருந்து வெளியேறினார்.


அவர் அமைச்சராக இருந்த போது சமர்ப்பிக்கப்பட்ட 5 வரவு செலவுத் திட்டங்களில் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவ 10ரூபா அடையாள மானியமாக ஒவ்வொரு முறையும் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் அத்திவாரம் கூடப் போடப்படவில்லை. இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் உணர்வு நிலையைப் புரிந்து கொண்ட ஒருவரை அமைச்சராக நியமித்திருந்தால் அவர் சில பயனுள்ள காரியங்களை செய்திருக்க முடியும்.

அரசியல் தலைமைகள் தாங்கள் தெற்கிலிருந்து தடம் மாறும்போது உருவாக்கப்படும் நாளைய தலைமுறைகளின் எதிர்கால விளைவு தொடர்பாக எதுவும் சிந்திப்பதில்லை என்பதற்கு இது ஒரு நல்ல அனுபவமாகும். கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் எத்தனையோ தமிழ் உணர்வாளர்களை புறம்தள்ளி விட்டு தமிழ் தேசிய கூ ட்டமைப்பு ஒரு சிங்களவரை வேட்பாளராக நியமித்து அவர் வெற்றி பெற்ற சில காலத்திற்குள் ளேயே அரசாங்கத்தில் இணைந்து கொண்டார்.

தீடீரென உருவாக்கப்படும் தலமைகளின் எதிர்மறையான பயன்களுக்கு இவை நல்ல உதாரணமா கும். காலம் காலமாக தொண்டர்கள் தொண்டர்களாகவே இருக்கும் அதேவேளை சில தலைவர்கள் இறக்குமதி செய்யப்படுவது தமிழ் அரசியலில் ஒரு சாபக்கேடு என்றே கூறவேண்டும். இந்த இடத்தில் நாம் விக்னேஸ்வரன் அவர்களை குறைகூறவோ, குறைத்து மதிப்பிடவோ இல்லை. ஆனால் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள மறுக்கும், தொண்டர்களை என்றுமே தொண்டர்களாக வைத்திருக்க முனையும் தமிழ் தலைமைகளின் தவறான போக்கையே மீள் பரிசீலனை செய்யும் படி கேட்டுக் கொள்கிறோம். ●

## கடவுள் வரும் வழி

ஒருவருக்கு அதிகமான கடவுள் நம்பிக்கை. அருகிலுள்ள அணை உடைத்ததாக செய்தி வந்தது. உடனிருந்தவர்கள் எல்லாம் ஊரைக் காலி செய்தார்கள். "கடவுள் என்னை காப்பாற்றுவார்" என்று சொல்லிப் பிரார்த்திக்கத் தொடங்கி விட்டார். ஒரு படகு வந்தது. அதி லிருந்தோர் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். பிறகு ஒரு மோட்டார் படகு வந்தது. அவர் களும் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். மூழ்கிச் செத்தார். வானுலகம் சென்றதும் கடவுளைக் கேட்டார், "என்னை ஏன் காப்பாற்றவில்லை?" கடவுள் சொன்னார் "இரண்டு படகுகள் அனுப்பினேனே, ஏன் ஏறிக் கொள் ளவில்லை?"வாய்ப்புகள் வழி தான் வருவார் கடவுள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செ.வவுனியன்**

# ஆளுமையை வெளிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பமே வடமாகாணசபைக்கான தேர்தல்

"பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான" கதையாகிப் போய் இருக்கிறது ஈழத்தமிழர் நிலை. ஆயுதமும் அகிம்சையும் ஊறிப்போன தமிழர் வரலாற்றில் அரசியல் சாணிக்கியத்தால் சாதிக்கலாம் என நினைத்திருக்கையில் வேரறுந்த ஆலமரமாய் விழுதுகளில் மாத்திரம் தொங்கி நிற்கும் பரிதாபத்திற்குள்ளாகியிருக்கிறது.

காணாமல் போனோர் குறித்த விடயமும், நில அபகரிப்புகளும் , அரசியல் கைதிகளின் விடயங்களும் காலமோட்டக் கிடைத்திருந்த நிலையில் 'சப்பென்ற வாய்க்கு வெல்லம் கிடைத்ததாய்' வட மாகாண தேர்தல் அறிவிப்பு கிடைத்துள்ளது.

போராட்டங்களும் எதிர்தரப்பின் சவால்களும் நிறையவே இருக்கும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே தமிழர் தரப்பு அரசியலும் களமிறங்கியிருப்பது யதார்த்தம்.

எனினும் அவற்றுக்குமப்பால் தமிழர் தேசியம் எனும் பதத்தை பந்தடிக்காது பாதுகாக்கும் தன்மை நிறையவே காணப்படும் சக்தி வடக்கை ஆளவேண்டும் என்ற விருப்பம் தமிழர் தரப்புக்கு நிறையவே உள்ளது.

தெரிவுகளும் அதனூடான நடைமுறை அரசியல் செயற்பாடுகளுமே ஆளுமைக்கான தரத்தையும் தளத்தையும் இட்டு வைக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.


இவ்வாறான யதார்த்தத்தை புரிந்து கொண்டவர்கள் நாங்கள் எனக்கூறி அரசியல் நடத்தி வரும் பலரும் தம்மால் சாதிக்கக் கூடியவற்றை சிந்திக்கத்தவறியவர்களாகவே காணப்படுகின்றனர்.

தேர்தல் என்றவுடன் வரிந்து கட்டி போட்டியிட விரும்பும் பலரும் அன்றாட வாழ்வில் சமூக வறுமைக்கும் ஏழையின் வயிற்றுப்பசிக்கும் ஈய்ந்தது எதுவென தம்மை தாமே மீளாய்வு செய்து களமிறங்க வேண்டும் என்பது உண்மை.

வெறுமனே நகரசபையாகவோ, பிரதேச சபையாகவோ வட மாகாண சபையை கருதி விட முடியாது என்ற விளக்கம் களமிறங்க கங்கணங்கட்டுபவர்களுக்கு தெளிவாக வேண்டியது அவசியம்.

அரசிற்கு விடுக்கப்பட்ட பல்வேறு அழுத்தங்களுக்கு அப்பால் அறிவிக்கப்பட்டிருக்கும் இத்தேர்தல் தமிழர்களுக்கும் ஆட்சி புரியத் தெரியும் என்ற வெளிப்படையினை உணர்த்துவதாக அமைய வேண்டுமே தவிர மாகாண சபையின் கதிரைகளை நிரப்பவும் பணத்தின் அகங்காரத்தை காட்டிவிடவும் ஏற்ற இடமாக்கிவிடக் கூடாது என்பது பாரம மக்களின் குரலாய் ஒலிக்கும் செய்தி.

இவ்வாறான நிலையில் முன் வீட்டார் சிரித்தார் என்பதற்காவும் சுயலாப அரசியலுக்காகவும் கனிந்துள்ள தேர்தல் களத்தினை பயன்படுத்தும் அரசியல், ஆளுமையற்றதும் நிர்வாகத்திறனின்மை கொண்டது



என்பதனையும் சர்வதேசத்திற்கு உணர்த்துவதாக அமைந்த பின் கவலையடைவதில் அர்த்தமில்லை.

கடந்த கால முரண்பாடுகளும் பிரிவினைகளும் அரசியல் செய்பவர்களுக்கு நன்றாக தோன்றினாலும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் வெறுப்புணர்வையுமே தோற்றுவித்துள்ளது என்பதே உண்மை.

அரசின் கைக்கூலிகளாகி தமிழர் தரப்பு வாக்குகளை சிதறடித்து தமிழர் தரப்பு அரசியல் பலமொன்றை சின்னாபின்னமாக்கி அதனூடு தமது நோக்கங்களை திணிக்க நினைக்கும் பேரினவாத அரசுக்கு எடுபிடியாகியுள்ளவர்கள் எப்போதும் மக்களிடம் இடம் பிடிக்க முடியாது என்பதனை உணர்த்துவதாக இத்தேர்தல் அமைய வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்த கருத்துக்கான விளைவுகளை நடக்கப் போகும் தேர்தல் பறைசாற்றும்.

எவ்வாறிருப்பினும் கருத்துக்களை வீசுபவர்கள் காரியங்களை செய்யத்தவறின் "பூனையில்லாத வீட்டில் சுண்டெலிக்கு கொண்டாட்டம்" என அரசின் சார்பில் உள்வர்கள் களமாடப்போவதை தடுத்துவிட முடியாது.

பாராளுமன்ற தேர்தல் களத்தில் தமிழர் தரப்பு அரசியலினூடாக 400 க்கும் மேற்பட்ட தமிழ் வேட்பாளர்கள் களமிறங்கி எவ்வாறு முட்டாள் தனமாக வாக்கை சிறதடித்து தமது இருப்பையே கேள்விக்குட்படுத்தினரோ அதே நிலை வட மாகாணத்திலும் வந்துவிடாது இருக்க கட்சிகளின் தலைமைகளும் விழிப்பாயிருத்தல் காலத்தின் தேவையாகியுள்ளது.

ஆண்டாண்டு காலமாக எவ்வித தீர்வுமின்றி அரசியல் அநாதைகளாகவும் ஏதிலிகளாகவும் வாழ்க்கை நடத்தும் தமிழர்களுக்கு ஆற்றுப்படுத்துவார்கள் என எண்ணியவர்கள் எல்லாம் ஆற்றில் விழுந்த துரும்பாகிய நிலைதான் காணப்படுகின்றது.

இவ்வாறன நிலை தொடருமாயிருந்தால் வரலாறுகள் மன்னிக்காத மனிதர்களாகி சமூக ஓட்டத்தால் புறந்தள்ளப்படும் நிலை ஏற்படும்.

வடக்கு கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் ஆட்டம் காண வேண்டும் என்பதில் தென்னிலங்கை அரசியலும் பெரும் எடுப்பிலான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பெரும் வாத பிரதி வாதங்களுக்கு அப்பால் தெரிவு செய்திருக்கும் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் தென்னிலங்கை மிரண்டதன் தன்மையை சில இனவாத குழுக்களின் கருத்துக்களில் காணமுடிகின்றது.

அது மாத்திரமின்றி தென்னிலங்கை மக்கள் மத்தியில் வட மாகாணத்தில் தமிழர் தரப்பு மேலும் பல இன்னல்களை ஏற்படுத்த விளைவதாகவும் அவை ஆபத்தானவை எனவும் கிளப்பி விடப்படும் கருத்துக்கள் புரிதலுள்ள சிங்கள மக்களிடம் எடுபடாத விடயமென்பது யதார்த்தம்.

எவ்வாறாக இருந்தாலும் தமிழர் தரப்பிற்கான தேசிய அரசியலில் ஓர் பலமான கட்சியை இல்லாது ஆக்குவது என்ற நோக்கம் சிங்கள ஆட்சியாளர்களிடம் நிறையவே உள்ளமை தெளிவு. ஏனெனில் புதிதாக முளைக்கும் கட்சிகளும் அதனூடாக நடக்கும் பிரசாரங்களும் அதனையே எடுத்துக் காட்டுவனவாக உள்ளது.

இன்று பெரும்பான்மை இனத்திற்கு இரு பெரும் தேசிய கட்சிகள் காணப்படுகின்ற நிலையில் தமிழர்களுக்கு பலமாகவும் தேசிய அரசியலில் பேரம் பேசும் சக்தி கொண்டதாகவும் கட்சிகள் வளர்க்கப்படவேண்டும் என்பது தொடர்பில் தமிழர்கள் கவனம் செலுத்துதல் அவசியமாகியுள்ளது.

அரசின் பின்னால் வால்பிடிக்கும் சில விசமிகள் இதை உணர்ந்து ஐக்கியத்துவத்துடன் ஒன்றிணைந்து செயற்பட முனையும் இத்தருணத்தால் தமிழர் நலன் பேணும் கட்சியால் அனைவருக்கும் ஒன்றிணைந்த ஐக்கியப்பட்ட தமிழினமாகின்ற போது மாத்திரமே எமது அபிலாசைகளை நிறைவேற்றலாமேயன்றி வேறெந்த அரசியல் உத்தியும் பயனற்றதே என்பதை இத்தனை ஆண்டு கால பாடத்தில் ஒரு சான்றாக கொள்ளப்படவேண்டியது காலத்தின் கடப்பாடு.

எனவே வேட்பாளர்கள் என்போர் தனித்து மாகாண சபையினை அடைந்து விட்டால் காரியம் முடிந்தது என்ற நிலைப்பாட்டற்றவர்களாகவும் ஐக்கியப்பட்ட தமிழ் அரசியல் தளத்தை உருவாக்க முனைபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

வெறுமனே ஆக்ரோசமான பேச்சுக்களையும் உணர்ச்சி வயப்படும் கருத்துக்களையும் வீசி விடுவதனால் நாம் வட மாகாணத்தை ஆள்வதாக கருதாது நிர்வாகத்திறன் மிக்கதான ஆட்சியை தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயம்.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கும் போதெல்லாம் தமிழர்கள் சுய கௌரவத்துடன் நடத்தப்படுவதான மாயையை உருவாக்குவதும் இதன் மூலம் தமது சர்வதேச இருப்பை தக்கவைத்துக்கொள்வதும் இன்று நேற்றைய பாணியல்ல ஜே.ஆர் காலம் தொட்டே தமிழன் தெளிவாக உணர்ந்து கொண்ட ஒருவிடயமாகும். எனவே இவ்வாறான போலி முகங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டிய தேவை வட மாகாணத்தை ஆள்பவர்களிடம் விடப்பட்டுள்ள சவாலாகவே கொள்ளலாம்.

ஆகவே அற்ப சொற்ப சலுகைகளுக்காக பின் செல்லும் சமூகமாக தம்மை தமிழன் அடையாளப்படுத்தாது சுய கௌரவத்துடன் சுயாட்சி என்ற பதத்தை தாரக மந்திரமாக கொண்டவனாக வாழ்தலுடன் தேர்தல்களிலும் பறைசாற்றி நிற்க வேண்டும்.

இதன்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு காணப்படுகின்ற பாரிய சவால் எதுவாக இருக்கின்றதை என்பதை அதன் தலைமைப்பீடம் அறிந்து கொண்டு அதனை சீர் செய்வதனூடாக மாகாணத்தை ஆள்பவர்கள் தங்கு தடையின்றி தமது ஆளுமையை கொண்டு செல்ல முற்பட வேண்டும்.

இல்லையேல் எவ்வாறு பாராளுமன்ற கதிரைகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பு படிப்படியாக குறைத்து கொண்டதோ அவ்வாறான நிலை அடுத்தடுத்த மாகாண தேர்தல்களிலும் பிரதிபலித்து நிற்கப் போவதை தடுக்க முடியாது..

எனவே தீர்வுகள் இல்லை எனினும் ஆளுமையை வெளிப்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு புத்திசாதுரியமாக பயன்படுத்தி கொள்ள வேண்டியதே அவர்கள் முன்னுள்ள சவாலாகும். ❍

## பூக்காடு



**இராமகிருக்ஷ்ண பரமஹம்சர் மகத்தான ஞானியே தவிர படிப்பறிவில் சிறந்தவரல்ல. அவரிடம் கேசவசந்திர சென் என்ற அறிஞர் வந்து கடவுள் இல்லை என்று வாதிட்டார். இடையிடையே பரம ஹம்சர் சொன்னார். உங்கள் வாதங்கள் மிக அருமை. அற்புதம். ஆனால் நான் என்ன செய்வேன். கடவுள் இருப்பது எனக்கு நன்றாகத் தெரியுமே. நான் என்ன செய்வேன் என்றார். நம்பிக்கை யைத் தாண்டிய உறுதி இதுதானே.**

**உட்கார்ந்து கொண்டிருக்கும் காகம் பட்டினி தான் கிடக்கவேண்டும்.**

**ரின்சாய் என்ற ஞானியைத் தேடிப் பலரும் வந்தனர். அருகில் வசித்து வந்த ஒருவருக்கு இந்த எளிய மனிதரின் புகழைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு நாள் அவரை அணுகிக் கேட்டார். "எங்களைப் போல்தான் உண்ணவும், உறங்கவுமாய் இருக்கிறீர்கள். உங்களை ஞானி என்கிறார்களே ஏன் என்று சொல்லுவீர்களா?" அதற்கு ரின்சாய் சொன்னார், "நான் உண்ணும் போது உண்ணுகிறேன். உறங்கும் போது உறங்குகிறேன் என்று சொல்லிவிட்டு. ஒன்றை ஒருமித்த உணர்வோடு செய்வதுதானே ஞானம்" என்றார்.**

**டொயோட்டா கார்களின் உற்பத்திப் புதுமைகளை அறிந்து கொள்ள அந்நிறுவனத்தின் முன்னோடி மனிதரான டெய்ச்சி ஓனோவை சந்திக்க அமெரிக்காவிலிருந்து ஒரு குழு பயணமானது. அவரது நடவடிக்கைகளைப் பார்வையிட்டு வியப்படைந்த குழுவினர், அவருக்கு உந்து சக்தியாய் இருந்தது எது என்றனர். அவர் சிரித்தார். பிறகு சொன்னார், "உங்கள் ஹென்றி ஃபோர்டு எழுதிய "இன்றும் நாளையும்" என்ற புத்தகம் தான் எனக்கு முக்கிய உந்து சக்தி என்று. ஜெயிப்பவர்கள் அனைவரும் படிப்பவர்களே**

**புகழ்பெற்ற நாவலாசிரியர் சிங்களர் லூயிஸ், இளம் எழுத்தாளர்கள் மத்தியில் பேசுவதற்கு அழைக்கப்பட்டார். எடுத்த எடுப்பில் அவர் கேட்டார். "உங்களில் எவ்வளவு பேர் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விரும்புகிறீர்கள்?" என்று. அனைவரின் கைகளும் உயர்ந்தன. "அப்படியானால் வீட்டுக்குப்போய் எழுதத் தொடங்குங்கள்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றார் லூயிஸ் திறமைகள் சுய முயற்சிகளாலும். பயிற்சிகளாலுமே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.**

**அதிர்ஷடம் சில சமயங்களில் உதவி செய்யும் ஆனால் உழைப்பு எப்போதுமே துணை நிற்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வட மாகாண சபைத் தேர்தல் நடக்கும் ஆனால் நடக்காது

**கா**ணி,பொலிஸ் அதிகாரங்கள் யாருக்குத் தேவை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். ரம்புக்கன் ஓயா பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது...

வடக்கு கிழக்கு மக்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களையோ அல்லது தனி இராச்சியத்தையோ கோரவில்லை. அரசினால் நாட்டு மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவை ஆற்றப்படுகின்றதா என்பதனையே மக்கள் கருத்தில் கொண்டனர். காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி கவலைப்பட்டதில்லை என்றார்.

வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் காணி, பொலிஸ் அதிகாரங்கள் இருக்கவேண்டும். இருந்தால் தான் வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கு பொருத்தமாக இருக்கும். இல்லாது போனால் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி என்ன பயன். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் காணி,பொலிஸ் அதிகாரங்களை கேட்கவில்லை என்று தெரிவிக்கின்றார்.

மூன்று தசாப்தகாலப் போரில் ஈடுபட்டு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்களையும் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளையும் போரில் இழந்துள்ளோம். தமிழ் மக்களின் போராட்டம் தோல்வி கண்ட நிலையில் காணி, பொலிஸ் அதிகாரத்தை கேட்கவில்லையா என்பது தான் தமிழர்களுக்கு தெரியாமல் உள்ளது.

இலங்கையில் இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தல் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டு வருகின்றன. போர் முடிவடைந்து முதன்முதலில் வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளதால் முக்கியம் வாய்ந்த தேர்தலாகவும் பார்க்கப்படுகின்றது. இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு நன்மைகளை விளைவிக்குதோ இல்லையோ முதன் முதலில் நடத்துவதை கட்டாயத் தேவையாகவும் கருதப்படுகிறது. வன்முறைகள் இல்லாமல் வட மாகாண சபைத் தேர்தல் நியாயமான முறையில் இடம்பெற வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்பொழுதுதான் சுதந்திரமாக வாக்கு நிலையம் சென்று தமது வாக்குகளை பதிவு செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் அரசால் மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களையும் சர்வதேசம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அதே போல் தான் இந்த வடமாகாண சபைத் தேர்தலையும் கண்காணிக்கவுள்ளது. சர்வதேச நாடுகள் இலங்கையை உன்னிப்பாகக் கவனிப்பதற்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்படுகிறது. தமிழர் பிரதேசங்களில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையானாலும் அது விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுவதால் இந்தத் தேர்தலையும் சர்வதேசம் கவனிக்கவுள்ளது. போர் முடிவடைந்தும் படையினர் வெளியேறா பிரதேசங்களாக வடபகுதி காணப்படுகிறது. பெரிய அளவிலான படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் இன்றும் படையினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். தேர்தல் பிரச்சாரத்தில் கூட படையினர் தலைப் போடுகின்றனர். இப்படி படையினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தமிழ் மக்களை அச்சத்தில் வைத்திருக்கிறது.

இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்க முடியாது. அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்ற கருத்தை முன் வைப்பதும் அரசுக்கு சிக்கலானது. ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டதாக அரசு உரிமை கோரியுள்ளது. அதை விட வடக்கில் இராணுவம் எந்த வித தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை, பாதுகாப்பைக் கூட பொலிஸாரே கவனித்து வருகின்றனர் என்று கூறிவருகின்றது. இத்தகைய நிலையில் வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக படையினரை முகாம்களுக்குள் முடக்குவதை மறுப்பதற்கு அரசுக்கு நியாயமான காரணங்கள் இல்லை. ஆனாலும் அரசு அதை செய்ய விரும்புமா? என்பது சந்தேகம் தான் எவ்வாறாயினும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் மட்டுமன்றி அடுத்து வரும் காலப்பகுதியும் கூட அரசுக்கு மிகவும் முக்கியமானது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வரவுள்ளார். அதைபோல் நவம்பர் மாதம் கொழும்பில் நடக்கவுள்ள கொமன் வெல்த் உச்சி மாநாட்டின் போதும் வடக்கில் சிவில் நிர்வாகம் நடக்கிறது. என்பதையும், அமைதி நிலவுகிறது என்பதையும் காட்ட வேண்டிய தேவையும் உள்ளது. இதற்கிடையில் வடக்கில் நியாயமான தேர்தல் நடத்தப்பட்டால் தான் கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா முழு அளவில் பங்கேற்கும் என்று மிரட்டுவதான தகவலும் உள்ளது. இத்தகைய நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் அரசு சர்ச்சைக்குரியதாக மாற்ற விரும்பாமல் போனால் இராணுவத்தின் செயற்பாடுகளை முகாம்களுக்குள் முடக்கி வைக்கும் முடிவை எடுத்தாக வேண்டும். எனினும் இந்த முடிவை எடுக்கும் நிலையில் கொழும்பின் அரசியல் தலமைகள் இல்லை.

அரச தரப்புத் தேர்தலை தேர்தலாக நடத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் நியாயமான தேர்தல் நடப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்க வாய்ப்பிருக்கிறது. தேர்தல் நடைபெறும் போது படையினரை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் அரச படையினரின் விடயத்தில் எந்த விதமான நடவடிக்கைகயையும் அரசு எடுப்பதற்கு பின் நிற்கிறது. இராணுவ ஆட்சியே இடம்பெறுவதாக எண்ணத்தோன்றுகிறது. மூன்று தசாப்த போர் தந்த வலிகள் தோல்வியினால் மேலும் ஏற்படுகிறது. வடமாகாண சபைத் தேர்தலில் பொது வேட்பாளராக வந்தவர் தமிழர்களுடைய பிரச்சினைகளை தெளிவாக அரசுடன் பேசி, தீர்வினை எட்டக்கூடிய அளவில் செயற்படுவாரா என்று மக்கள் கேட்கின்றனர்.

சர்வதேச நாடுகளுக்காகவாவது வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அப்பொழுது தான் ஜனநாயக நாடாக காட்ட முடியும் என்று அரசு நினைக்கிறது. ஆனால் அந்தத் தேர்தலை நேர்மையான வழியில் நடத்துவதற்கு அரசு எந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளது. என்பதை இருந்து தான் பார்க்க வேண்டும். தமிழர்களுக்கு எந்தத் தீர்வையும் வழங்க முன் நிற்காத அரச தரப்பின் வாலைப் பிடித்துக் கொண்டு நிற்பவர்களும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தேர்தலில் இறங்குகிறார்கள். இவர்களால் தமிழ் மக்களுக்கு என்ன பயன். புதிதாகத் கட்டித் திறந்த பழைய கட்டடத்தை மீண்டும் மொரு முறை திறக்கிறார்கள். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடத்தினை மீண்டும் மீளக்குடியமர்த்துகிறார்கள். இருந்த சிலைகளை உடைத்து விட்டு புதிதாகக் கட்டித் திறக்கிறார்கள். இவர்களால் எப்படி தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் ஆணித்தரமாக அரசுடன் பேச முடியும். தமது பெயருக்கும் பிழைப்புக்குமாக அரசை விட்டு வெளியே வர முடியாமல் இருப்பவர்களால் எப்படி தமிழ் மக்களுக்காக உழைக்க முடியும். செய்வதெல்லாம். தமிழர்களுக்கு அநீதிகள், தேர்தல் நெருங்கும் போது தமிழர்களுக்கு நீதி செய்வதாக காட்ட முனைவதை எப்படிப் பார்க்க முடியும். அன்றாட வாழ்வையே நகர்த்த முடியாமல் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தமது சொந்த நிலத்தில் மீளக் குடியமர முடியாமல் படையினர் பிடித்து வைத்திருக்கின்றனர். எப்போது எமது மண்ணை விடுவிப்பார்கள் என்று எதிர்பார்த்த நாள்கள் போய்விட்டன. வடமாகாண சபைத் தேர்தலின் மூலம் அந்த மக்களுக்கு என்ன பிரயோசனம் என்று முதலில் கூறுங்கள். சந்ததி சந்ததியாக வாழ்ந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்த நாளில் இருந்து அடுத்த சந்ததியின் வாழ்வு கேள்விக் குறியாக போய்விட்டது. விடுதலைப்புலிகளின் போராட்டம் மூலம் கிடைக்காத தீர்வு அரசு நடத்தும் வடமாகாண சபைத் தேர்தலில் கிடைக்குமா? தமிழ் மக்களை தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு படையினரைக் கேட்கும் போது அவர்களை பயங்கரவாதத்துக்கு துணை போகின்றார்கள் என்று சொல்லும் அளவுக்கு படையினரும் அரசும் இருக்கும் போது எப்படி அந்த மக்களின் வாழ்வாதாரத்தில் அக்கறை கொள்ளப் போகிறது. இவ்வளவு காலம் நடந்த தேர்தல்களால் தமிழ் மக்களுக்கு சொல்லக்கூடிய விடயங்கள் என்று ஒன்றுமே நடக்கவில்லை. வட மாகாண சபைத் தேர்தல் நியாயமான முறையில் நடக்குமாக இருந்தால் தமிழர்களின் பிரச்சினை மறையக் கூடியதான சாத்தியக் கூறுகள் இருக்கவேண்டும்.

## காதல் பரிசு!



**அரசர்களின் காதல் பரிசுகள் என்னவாக இருந்திருக்கக்கூடும்?**

**தந்தையின் மறைவுக்குப் பிறகு கிரேக்கத்தின் ஆட்சியைப் பிடித்த கிளியோபாட்ரா, சிரியா நாட்டு அரசனால் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டார். மீண்டும் தன் நாட்டைக் கைப்பற்ற ரோம் மன்னரான ஜூலியஸ் சீசரின் ஆதரவு தேவைப்பட்டது. அப்போது, விலை உயர்ந்த பெர்சியத் தரை விரிப்பு ஒன்றை சீசருக்குப் பரிசாக அனுப்பினார் கிளியோபாட்ரா. கிளியோபாட்ராவின் அழகைப்பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டு இருந்த சீசரின், ஆர்வம் அதைப் பிரிக்க.. தரை விரிப்புக்குள் இருந்து வெளியே வந்தார் கிளியோபாட்ரா. பார்த்த உடனேயே 21 வயது கிளியோபாட்ரா மீது காதல் வயப்பட்டார் 52 வயது சீசர். இழந்த ராஜ்யத்தை மீட்டுக்கொடுத்து கிளியோபாட்ராவைத் தன் மகாராணியாகவும் ஆக்கிக் கொண்டார்.**

**புகழ்பெற்ற ஓவியர் வான்கா, தன் காதலி ரேச்சலுக்குக் கொடுத்த பரிசு விசித்திரமானது தன் காதில் ஒரு பகுதியை வெட்டி அதை ஒரு பேப்பரில் மடித்துப் பரிசளித்தார்!.**

**வரலாற்றில் நீண்ட காலம் மன்னராகக் கோலோச்சிய நான்காம் லூயி, நாகரீகம்,மற்றும் ஃபேஷன் விஷயங்களில் ரசனைமிக்கவர். ஏகப்பட்ட காதலிகள், முறையற்ற குழந்தைகள் இருந்தாலும், அழகு கவர்ச்சி வெர்செயல்ஸ் மகாராணி தெரசாவின் மீது எல்லையற்ற அன்பு.**

**அதிகாலை வாக்கிங் போகும்போது வெறும் காலில் நடந்து தெரசாவின் கால்கள் துன்பப்படாமல் இருக்க, லூயி பரிசாக விரித்த உயர்ரக ஃபர் கோட்டின் நீளம் ஒன்றரை கீலோ மீட்டர்!**

**16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரஷ்ய மகாராணி கேத்தரினுக்கு ஏராளமான காதலர்கள், அனைவருக்கும் பரிசுகள் வழங்குவதில் கேத்தரினுக்கு இன்பம். இதற்காக இவர் செலவழித்த தொகை மட்டும் அந்தக் காலத்திலேயே 14 கோடி ரூபாய். கேத்தரினின் அன்பை அதிகம் பெற்றவர் அவரது ராணுவ மந்திரி கிரெகோரி ஆர்லோவ். அவருக்கு செர்ஃப் எனப்படும் 800 அடிமைக் குழுக்களைப் பரிசாக வழங்கினார்!.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் அரசியல் பிரவேசம்...



சரோஜா சிவச்சந்திரன் M.A



பொருளாதார, அரசியல் ரீதியில் விடுதலைபெற்றுள்ள பெண்கள் எப்போதும் விடுதலைபெற்றவர்களாக இல்லை. குடும்பமே இன்று பெண்கள் மீதான சகல ஒடுக்கு முறைகட்கும் மூல காரணமாக இருந்து வருகின்றது. தமிழ்ச் சமூக அமைப்பில் இன்று குடும்பங் கள் சிதைந்து சமூக உறவுகள் குலைந்து பெண்கள் ஆண் துணையற்றவர்களாகவும், சிறுமிகள் பாதுகாப்பற்றவர்களாகவும் வாழ்கின்றனர்.

வடமாகாண எல்லைக்குள் 33 ஆயிரத்து 332 பெண்கள் தனியான குடும்பப் பாரத்தை சுமப்பவர்களாக உள்ளனர். இந்நிலையில் பெண்கள் புதியவர்கள் அல்ல. அரசியல் வாக்காளகர்களாகவும், அரசியல் பிரதிநிதிகளாகவும் பெண்கள் பங்கேற்றுள்ளனர். ஆயினும் இவர்களுடைய முழுமையான பங்களிப்பு அரசியல் தளத்திற்குப் போதுமானதாக இல்லை. பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையம் ஒழித்தல் தொடர்பாக ஐ.நாவின் மரபொழுங்கினை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளபோதும் பெண்கள் சமமான வாய்ப்புகளில் புறக்கணிக்கப்படுவது தொடர்கிறது.

ஆயினும் இன்று பெண்கள் ஓரங்கட்டப்படுவதற்கு எதிராக உலகளாவிய ரீதியில் பெண்கள் அமைப்புகள் பல குரல் கொடுத்து வருவதோடு, பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைககள் மீது ஆழமான கவனத்தைச் செலுத்தி வருகின்றன. பெண்கள் அரசியலில் சாதாரண பங்காளிகளாக வரும் நிலை காணப்பட்ட போதிலும் சிறந்த முறையில் பொறுப்புக்கூறல் தீர்மானம் எடுத்தல் போன்ற அரசியல் பங்குதாரர்களாக உயர்மட்ட அமைச்சுப்பதவிகள். முகாமைத்துவப்பதவிகளில் பெண்களின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. குறிப்பாக ஆசிய நாடுகளின் அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளதுடன், இலங்கையில் அரசியல் என்றால் ஆளப்படுவது பெண்களே என்ற நிலை உருவாகியுள்ளது. போரின் பின்னரான மீள்குடியேற்றம், மோதல்களைத் தடுத்தல், சமாதானத்தை கட்டியெழுப்புதல், பாதுகாப்பு என்பவற்றை சமூக ஒழுங்கமைப்புள் நடத்திச் செல்ல பெண்கள் சமமான பங்களிப்பு மேற்கொள்ளக்கூடிய பங்கினை பெண்களுக்கு வளக்கவேண்டிய தேவை இன்றுள்ளது.

இது எவ்வாறு சாத்தியமாகும்? பெண்களின் பங்களிப்பானது பொறுப்புக்கூறும் வகையில், தீர்மானங்களை எடுத்து நிறைவேற்றக்கூடிய அதிகாரங்களை தாம் வைத்துக்கொள்வதன் மூலமே சாத்தியமாகும். ஆகவே இச்சாத்தியப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு பெண்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபடல் வேண்டும். இலங்கை அரசியல் யாப்பில் பெண்களுக்கு சட்ட சமத்துவம் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அரசாங்கத்தின் பொறுப்பான பதவி நிலைகளில் மற்றும் நிறைவேற்று அதிகார அமைப்புக்களில் பெண்களின் பிரதிநித்துவம் குறைவாகவே உள்ளது. பெண்கள் அரசியலில் ஈடுபட்டு அதிகார உச்சவரம்பினை அடைவதற்கு எவ்விதமான தடைகளும் இல்லை. இருந்த போதிலும் பெண்களின்அரசியல் பங்களிப்பு ஏன் குறைந்த விழுக்காடு அடைந்து வருகின்றது என்பதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களில் 5 வீதமானவர்களே பெண்கள். உள்ளூர் அதிகாரசபைகளில் 3 வீதமானவர்கள் மட்டுமே பெண்கள். இவ்வாறான குறைந்த பங்களிப்பிற்கு சமூக மட்டத்தில் காணப்படும் கலாசார விழுமியங்கள் ஆணாதிக்க அழுத்தங்கள் உள்ளிட்ட சிக்கலான அம்சங்கள் பல காரணமாகின்றன..

சீடோ மரபொழுங்கிற்கு அப்பால் 2000 ஆம் ஆண்டில் பெண்களுக்கென ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட ஐ.நா பாதுகாப்புக் சபை தீர்மானம் 1325 மூலம் பெண்களின் அரசியல் பிரதி நிதித்துவத்தை ஊக்குவித்து பெண்களை அரசியலில் மட்டுமன்றி உயர்மட்ட அதிகாரக் கட்டமைப்புக்குள் ஈர்க்கும் பல உந்துதல்களை பெண்களுக்கு வழங்கியுள்ளது. இத்தீர்மானம் தொடர்பான விளக்கங்கள் பெண்கள் அமைப்புக்களினால் பல்வேறு நாடுகளில் விளக்கமளிக்கப்பட்டு கிராமிய மட்டப் பெண்களுக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியுள்ளது. போரிலிருந்து விடுபட்டு தமது வாழ்வினை மீளக்கட்டியெழுப்பும் பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு உந்து சக்தியாக இவ் ஐ.நா 1325 மரபொழுங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2010 இல் இலங்கையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டது. ஒருசில அரசியல் கட்சிகள் பெண்களுக்கு ஓரளவு பிரதிநிதித்தையும் தேசியப்பட்டியல் மூலம் பெண்களுக்கு முக்கிய இடமும் வழங்கியுள்ளன. குறிப்பாக UPFA தனது தேசிய பட்டியலிருந்து இரு பெண்களை தெரிவு செய்திருந்தது. அயல் நாடுகளில் தேர்தல்களில் பெண்கள் பிரதிநிதித்துவம் குறிப்பிட்ட அளவு உயர்வாக உள்ளது.

2008 இல் நேபாளத்தில் இடம்பெற்ற தேர்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் 33. 02 வீதமாக காணப்பட்டது. பங்களா தேசத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் 18.6 வீதமாகவும், இந்தியாவில் 2009 இல் கீழ் சபையில் பெண்கள் பிரதிநிதித்துவம் 10 .8 வீதமாகவும் மேல் சபையில் 9 வீதமாகவும் காணப்பட்டது. இந்நாடுளை எட்டிப்பிடிக்க வேண்டுமாயின் இலங்கையில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் பெண்களுக்கு கோட்டா முறையில் குறைந்தது 30 வீதமாக பங்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கட்சிகள் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் கட்டாயமாக தேர்தல் தெரிவில் இடம்கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இன்று செயற்படுத்தப்பட்ட போதிலும் கட்சிகள் தெரிவு செய்யும் பெண்கள், கட்டாயத்தின் அடிப்படையில் அவர்கள் தகுதிகள் கணிப்பிடப்படாது தெரிவு செய்யும் முறைகளினால் தெரிவு செய்யப்படும் பெண்கள் கூட தமது நியாயமான பங்களிப்பை வழங்க முடியாதவர்களாக உள்ளனர்.

இலங்கை ஓர் ஜனநாயக நாடு எனக் கூறப்பட்டபோதும் எமது அரசியல் பரப்பானது பெருமளவு ஆண்களாலேயே ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களால் மக்களுக்கு நடத்தப்படும் மக்களின் அரசே ஜனநாயகம் என்பதன் கருதுகோள் ஆகும் இங்கு பெண்கள் அடக்கப்படவில்லையா? என்ற கேள்வி எழுகின்றது. அரசியல் உரிமை என்பது வாக்களிக்கும் உரிமை மட்டுமல்ல, அவை பிரதிநிதிகளாக பங்கேற்கும் உரிமைகளையும் உள்ளடக்கும். இன்று பாராளுமன்ற, உள்ளூராட்சி சபைகளுக்கு ஏராளமான பெண்கள் தேவைப்படுகின்றனர். ஆகவே இப்பங்களிப்பை நிறைவு செய்ய வேண்டியவர்கள் பெண்களே. கட்சிகள் சாதாரண அங்கத்துவ நிலையில் கூட பெண்களை அங்கத்தவர்களாகவும் இளைஞர் குழுக்களில், பெண்கள் குழுக்களின் தலைவிகளாகவும் நியமித்து அவர்களுக்கான அரசியல் பயிற்சியை வழங்க முன்வரவேண்டிய தேவையுள்ளது. தேர்தல் என்று வரும்போது பெண்கள் தேவைப்படுகின்றனர். கட்சிப் பிரசாரங்கள், தேர்தல் பிரசாரங்களுக்கு பெண்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றனர்.

பெண்கள் கட்சிகளில் உள்வாங்கப்படுவதில்லை, பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை அவர்கள் குடும்பத்திற்குள்ளேயே விரும்புவதில்லை. இதனால் ஈடுபடும் பெண்கள் மீது அபாண்டமான பழிகள் சுமத்தப்படுகின்றன. இவற்றை எதிர்க்கும் ஆளுமை பெண்களுக்கு குறைவாகவேயுள்ளது. இதனால் அவர்கள் தாமாகவே தமது அர சியல் ஈடுபாட்டிலிருந்து பின்வாங்குகின்றனர். இவ்வாறான பின் வாங்கல்களைத் தடுக்கும் முகமாக பெண்களுக்கு பேச்சுத் திறன் மற்றும் ஆண்களோடு சமமாக போட்டி போடக் கூடிய ஆற்றல் விருத்திக்கான பயிற்சிகள் வழங்கப்படுவது அவசியமாகின்றது.

இன்றைய அரசியலில் அல்லது ஒரு வேட்பாளராக தேர்தலில் நிற்க பெண்கள் முற்படுவார்களேயாயின் ஆற்றல் மட்டுமல்லாமல், பணபலமும் தேவைப் படுகின்றது. இவ்வகையில் பெண்கள் பெருமளவில் தேர்தலுக்காக, பணத்தை விரயமாக்க தயாராக இல்லை. பெண்களின் சமூக நகர்வு பெண்களை ஊக்கப்படுத்துவதற்கு கட்சிகள் அக்கறை காட்டாமை ஊடகங்களின் ஒத்துழைப்பு இல்லாமை, பால்நிலைக் கொள்கைகளில் காணப்படும் முரண்பாடுகள் போன்றவை தவிர்க்கப்பட்டு பெண்கள் அரசியலில் பிரதான பங்காளர்களாக ஆக்கப்படுவது இன்றைய கட்டாயமாகும்.

# ஊடகங்களின் ஏகாதிபத்தியம்



மனித குலம் தன்னை ஒருபடி உயர்த்திக்கொள்வதற்கு உள்ளும் வெளியும் தொடர்ந்து போராடுகிறது. முதலாளிய சக்திகளின் வலைப்பின்னல்களில் போராட்டத்தின் வேர்கள் சிக்கிக்கிடக்கின்றன. மொழி, கலாசாரம், பண்பாடு, இலக்கியம் போன்ற தளங்களில் ஆதிக்க சக்திகள் பெரும் பலத்தால் அசுரத்தனமாய் வளர்ந்து நிற்கின்றன.

இலக்கியம்; கலை வடிவங்கள் புரட்சிகளை வழி நடத்தும் என்கிற நம்பிக்கையை இன்றைய ஊடகங்கள் அசைத்துப்பார்க்கின்றன. மக்களைச் சுற்றி மாய வலைகளைப் பின்னுகின்றன.

இந்த வடிவங்களில் மக்களின் கூட்டு உழைப்பு, கூட்டு முயற்சி, சமூக எழுச்சி இவை முன்வைக்கப்படாமல், தனிமனித எண்ணம், உழைப்பு, தனிமனிதத் தன்மைகள் தான் காரணம் என்ற கதாநாயக மனப்பான்மை மக்களுக்குள் புகுத்தப்படுகிறது. அதனால் எல்லா சாத்தான்களாலும் சபிக்கப்பட்ட பொதுமக்கள் தம்மை நோக்கி தேவதூதன் வருவான் என கனவுகள் காண்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் பிறக்கவே இல்லை.

எந்தப் புத்தகங்கள் சந்தையில் விற்பனை என்று ஆராய்ந்து பார்த்தால், தனிமனித வளர்ச்சி, தனிமனித மேம்பாடு, 30 நாட்களில் கோடீஸ்வரன், 60 நாட்களில் பில்கேட்ஸ்.. இப்படி எங்கு திரும்பினாலும் தனிமனித முன்னேற்ற கருத்தரங்குகள், சுய முன்னேற்றப் பயிலரங்கங்கள்.. ஒவ்வொரு தனிமனிதன் முன்னேறினால் நாடு முன்னேறும் என்ற புதிய பகவத் கீதைகள் இப்படிச் சமூகத்தின் பொதுத் தன்மையை ஆட்டுவிக்கிற கூட்டு வெற்றியை உரசிப் பார்க்கிற விடயங்களை எப்போது நிறுத்தப் போகின்றன. ஏகாதிபத்திய ஊடகங்கள்?

வீட்டின் வரவேற்பறைகளில் கலாசார சீரழிவின் விதைகளைத் தூவி மனித குலத்தை இருட்டை நோக்கி அழைத்துச் செல்லும் தொலைக்காட்சி ஊடகங்கள், அழுகை, குமுறல், பொறாமை, ஆசை, கள்ள உறவு, அவை குறித்த நியாய தர்மங்கள், பெண்களின் உழைப்புத் தன்மையைக் குறைத்து சமூக அழுக்குகளால் அவர்களை நிறைத்து நல்ல விடயங்களை மறைத்து, ஆதிக்க சக்திகளின் வளர்ச்சிக்கு அவர்களை அடிமைப்படுத்தும் அவலங்கள்...

சூரியப்பொழுதில் வீட்டின் வாசல்படிகளில் வீசிச்செல்லப்படும் காலை இதழ்களில் தொடங்கி, வார, மாத இதழ்கள் வரை ஆளும் வர்க்கத்தினருக்கு இவர்கள் அடிக்கும் ஜால்ராக்களின் சப்தம் காதைப் பிளக்கிறது. ஜனநாயகத்தின் தூண்களாக விளங்கவேண்டிய பத்திரிகைகள் ஆளும் வர்க்கத்தின் ஆட்டாங்கல்லைப்போன்று மாறிய அவலங்கள். புரட்சிகர எண்ணங்களை, சமூக வளர்ச்சியின் தடை என்று மக்களுக்குச் சொல்கிறார்கள். போராட்ட உரிமைகளை நடைமுறை வாழ்வின் சிக்கல் என்று பிதற்றுகிறார்கள்.

தொழிற்சங்கங்களின் உரிமைக் குரல்வளைகளை நசுக்குகிறார்கள். உரிமைக்குரலுக்கு வீசப்படும் பருக்கைச் சோறுகளை, கொடை வள்ளல்களின் முகங்களாகச் சித்தரிக்கிறார்கள். உழைப்பின் வேர்வையால் நிரம்பும் அரசாங்க கருவூலத்தின் வெள்ளிக்காசுகளை அள்ளி இறைத்து வாக்குப் பொறுக்குவதை, கர்ண பரம்பரைக் கதைகளாகக்கட்டியங் கூறுகிறார்கள்.

மனித இனத்தைத் துண்டாடும் ஜாதி, மத, இன, மொழி நெருப்புகளுக்கு நாள்தோறும் இவர்களால் நெய் ஊற்றப்படுகிறது. எல்லா ஊடகங்களும் ஆன்மீகத்தை நிரப்புவதாக, பரப்புவதாக கங்கணம் கட்டிப்புறப்பட்டிருக்கின்றன. ஆயிரம் ஆன்மீக போளார்கள் வந்தாலும் ஏமாளித்தனத்தை, கோமாளித்தனத்தை பொதுஜனம் விடுவதாக இல்லை. அதனால் ஊடகம் தோறும் ஆன்மீக விற்பனை பல்வேறு ஆசாமிகளின் வடிவங்களில், மூடநம்பிக்கை வடிவங்கள் அழியாமல் புதுப்பிக்கப்படுகின்றன. பகுத்தறிவு இங்கே சிம்மாசனத்தில் கும்பகர்ணனாய் உறங்கிக் கிடக்கிறது. இலட்சம் பெரியார்கள் சூரியனாய் உதித்து வந்தாலும் இந்த உறக்கம் எப்போது கலையப் போகிறது?


நுகர்வுக்கலாசாரத்தின் இரும்புப் பிடியில், இயந்திரத்தனமான வேகத்தில் மக்களின் ஒற்றுமை உணர்வைப் பிரித்து துண்டாடுவது, ஊடகங்களுக்கு எளிது. கஞ்சி குடிப்பதற்கிலார்... அதற்கு என்ன காரணம் என்ற அறிவுமிலார்; என்ற பாரதியின் வரிகளாய் பொது ஜனத்தின் வாழ்க்கை

மக்களுக்காக, மனித வரலாற்றை முன்னோக்கிச்செலுத்துவதற்காக, யுகப்புரட்சியை தோற்றுவிப்பதற்காகப் போராட வேண்டிய ஊடகங்கள், முதலீடுகாக்க, முதலீடு திரட்ட இலாபம் அடைய உண்மையான கௌரவ கிரீடத்தைக் கழற்றி விட்டுப் பயணிக்கின்றன.

ஊடகங்களின் இயல்பை, இலக்கை, இலட்சியத்தை ஆதிக்க சக்தியை வேரறுக்க, மக்கள் சுய சிந்தனையோடு ஓரணியில் திரண்டு, மக்களையும் திரட்டிப் போராடுவதன் மூலம் தான் எல்லோருக்கும் விடியும்.

பாரதி நேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாகாண சபை தேர்தல் 2013

# மாகாண சபைத்தேர்தலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும்

எஸ்.பாலா

அறுபது வருடகால போராட்ட வரலாறுடைய தமிழினத்திற்கு இன்று ஜனநாயக ரீதியில் இருக்கின்ற தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது வெறுமனே ஒரு கட்சியல்ல.அது இன விடுதலைக்கு உழைத்த ஆயிரமாயிரம் தேசிய உணர்வாளர்களுடைய மூச்சில் இருந்து பிறந்த தேசியக் குழந்தை என்பது யாவரும் அறிந்த உண்மை.

தற்போதைய காலச்சூழலில் அதிகமான வாய்களில் உச்சரிக்கப்படும் சொற்றொடர் வடமாகாண சபைத் தேர்தலாகும். இதற்கு காரணமும் இருக்கத்தான் செய்கின்றது. இதன் முக்கியத்துவம் என்ன என்பது பற்றிய சந்தேகமும் சிலருக்கு எழலாம். இலங்கை அரசியலமைப்பைப் பொறுத்தவரை மாகாண சபை என்பது அதிகாரம் இல்லாத ஒன்று பச்சையாக சொல்வதானால் அது உள்ளுடன் இல்லாத மோதகம். மாகாண அதிகாரங்கள் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமல்லாத காரணத்தினால் மேலும் இதுபற்றி இங்கு விபரிக்கவில்லை. அதிகாரம் இல்லாத மாகாண சபைத் தேர்தலுக்கான எதிர்பார்ப்பு அதிகரிப்பதற்கு மூன்று முக்கிய காரணங் களை குறிப்பிடலாம்.

**1. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வட கிழக்கானது இலங்கை நீதிமன்றத் தீர்ப்பு மூலம் பிரிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது வட மாகாணத்திற்கான தேர்தல்**

**2. முப்பது வருடமாக நடைபெற்று வந்த விடுதலைப் போராட்டமானது முள்ளி வாய்க்காலுடன் மௌனிக்கப்பட்ட சூழலில் தமிழர்கள் எத்தகைய நிலைப்பாட்டில் இன்னமும் இருக்கின்றார்கள் என்பதை சர்வதேசம் பரீட்சித்துப்பார்க்கக்கூடிய களம்.**

**3.வடக்கு மாகாணசபையை இயன்றளவு வன்முறையின்றி நடாத்தி தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கி விட்டோம் என உலகெங்கிலும் பிரசாரம் செய்வதற்கான வாய்ப்பினை இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொள்ள நினைத்து நடத்தும் தேர்தல்.**

போன்ற விடயங்களாலே அதிகம் வட மாகாண சபை தேர்தல் தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் அத்தேர்தலில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றப் போகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பாகவும் சில விடயங்களை ஆராய முன்னர் வடக்கும் கிழக்கும் இணைந்து நடாத்தப்பட்ட வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலையும் அத்தேர்தல் நடைபெறுவதற்கு தோற்றுவாயாக இருந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அத்தேர்தலை புறக்கணித்தமைக்கான காரணத்தையும் சற்று அலச இருபத்தாறு வருடங்கள் பின்னோக்கி செல்வது அவசியம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இலங்கைத் தீவின் மீது இந்தியா ஆதிக்கம் செலுத்தியது அல்லது செலுத்த முற்பட்டது. இச் செயலானது இந்தியாவின் புவிசார் அரசியல். பிராந்திய தேவைகட்கு ஏற்ப விடயமாகும்.1983 இற்குப்பின்னர் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையில் இந்தியா தலையிட்டது இதன் அர்த்தம் தமிழர்களுக்கு ஒருநாட்டைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் அல்ல அப்படி ஒரு ஆர்வம் இருந்ததுமில்லை இருப்பதாகவும் இல்லை இருக்கப்போவதுமில்லை இதுவே உண்மை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கான காரணத்தை நோக்குவோமாயின் 1987 மே மாதம் 26ம் திகதி ஜே.ஆர்.ஜெய வர்த்தனாவின் அரசானது ஊரடங்கைப் பிரகடனப் படுத்தி "ஒபரேசன் லிபரேசன்" என்ற இராணுவ நடவடிக்கையை வடமராட்சி மீது ஆரம்பித்தது. இந்நடவடிக்கை தொடங்கி ஒன்பது நாட்களில் இந்திய அரசு ஐந்து இந்திய விமானங்ளின் மூலம் 24 தொன் எடை கொண்ட நிவாரணப் பொருட்களை இராணுவ முற்றுகைக்குள்ளிருந்த மக்களிற்கு போட்டது இதற்கு அவர்களால் சூட்டப்பட்ட பெயர் "ஒப்பரேசன் பூமாலை" என்பதாகும்.

ஒப்பரேசன் லிபரேசன் மூலம் உற்சாகமடைந்திருந்த இலங்கை அரசாங்கம் ஒப்பரேசன் பூமாலையைக் கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தது. இதைச் சாதகமாகக் கொண்ட இந்திய அரசாங்க இராயதந்திரிகள் தமது பிடிக்குள் இலங்கையை கொண்டு வந்தார்கள். ஜே.வி.பி கிளர்ச்சியாலும், தமிழ் போராளிகளது போராட்டத்தாலும் குழம்பிப் போயிருந்த ஜே.ஆரின் அரசு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஒப்பந்தத்திற்கு இணங்கியே இவ் ஒப்பந்தத்தில் ராஜீவுடன் கையொப்பமிட்டது.இவ் ஒப்பந்தமானது தமிழ்மக்களின் பிரச்சனைகளோடு நெருக்கமான தொடர்புடையதாக காட்டிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் தமிழ்ப்பிரதிநிதிகள் எவரும் இவ் ஒப்பந்தத்தில் சம்மந்தப்பட்டிருக்கவில்லை.செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப் படவேண்டும் என்பதைத்தவிர வேறு எவையும் உருப்படியானவையில்லை.

1987 இல் இலங்கைப் பாராளுமன்றம் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தையும் அத்துடன் அமைந்த மாகாணசபைகள் சட்டத்தையும் நிறைவேற்றியது. இச்சட்டங்களின் ஆதிக்கம் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதென்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியதென இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறு இணைக்கப்பட்ட வடகிழக்கிற்கான தேர்தலை நடாத்த இருப்பதாக அறிவித்தது.தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தேர்தலை முழுமையாக புறக்கணித்தார்கள். அவர்கள் இத்தேர்தலைப் புறக்கணித்தமைக்கு வலுவான காரணமும் இருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழர் நலனை அடிப்படையாகக் கொண்டோ அல்லது அவர்களது கருத்துக்கள் கேட்கப்பட்டோ கொண்டு வரப்படவில்லை பதிமூன்றாவது திருத்தத்தில் சொல்லப்படுகின்ற மாகாண ஆட்சி தமிழ்மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வாகப் போவதுமில்லை என்பதே ஆகும். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் இத்தேர்தலை பகிஸ்கரிக்க, E.P.R.L.F என்ற ஈழுமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி கட்சி தனது செல்வாக்கைப்பெறும் நோக்கில் தேர்தல் களத்தில் குதித்து வரதராஜப்பெருமாளை முதலமைச்சராக்கி இந்திய அரசாங்கத்திற்கு நன்றியுள்ளவர்கள் நாங்களே என்பதை வெளிப்படுத்தினார்கள்.

தமிழர்களுடைய [illegible] அதன் தளத்தையோ கண்டுகொள்ள முடியாமல் இந்தியாவின் கைப்பாவையாக இயங்கிய மாகாண சபையானது சிறிது காலத்திலேயே சிதறுண்டு போனது.

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட மாகாண சபைத்தேர்தல் இன்று இரண்டு மாகாணங்களும் பிரிக்கப்பட்டு கிழக்குக்கான தேர்தல் இரண்டாவது முறையாகவும் நடாத்தப்பட்டு இம்முறையும் ஆளும் கட்சியே ஆட்சியமைத்துள்ளது. வடமாகாண சபைக்கான தேர்தல் அது கிழக்கிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக நடைபெற இருக்கின்றது என்ற காரணத்தினால் விமர்சனமும் எழவே செய்கின்றது.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் வெற்றி பெறும் என்பதை ஜனாதிபதி நாசுக்காக கடந்த வாரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரை சந்தித்த போது கூறியுள்ளார். இது ஒரு புறம் இருக்க மறுபுறம் கூட்டமைப்பானது வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டால் வடகிழக்கு மாகாணங்கள் பிரிந்ததை ஏற்றுக்கொள்வதுடன் ஒற்றையாட்சி முறைமையின்கீழ் அதிகாரமில்லா மாகாணசபை முறைமையை அங்கீகரிப்பது போன்ற இரு விடயங்கள் பாதகமாக அமையும். இருந்த போதிலும் வடமாகாண சபையை கிழக்குப் போல் ஆளுங்கட்சிக்கு தாரை வார்த்து விட்டால் முள்ளிவாய்க்காலில் நாம் கொடுத்த பல்லாயிரம் உயி ருக்கான சர்வதேச நீதி என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிடும்.



இலங்கை அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற்று விட்டால் தமிழ் மக்கள் தங்களுடனே இருக்கின்றார்கள் என்ற மாயத்தோற்றத்தை சர்வதேச நாடுகளிடம் ஏற்படுத்த முனைவார்கள் என்பதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிவாகை சூட வேண்டும் என்பது கணிசமான தமிழ்த் தேசிய உணர்வாளர்களுடைய அவாவாக வுள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு தொடர்பில் சகல தமிழ் ஊடகங்களும் காரசாரமாக விமர்சித்திருந்தன. விமர்சனம் எமது இனத்திற்கு இப்போதுள்ள சூழலில் தேவையான ஒன்றாக இருந்தாலும் சில விடயங்களை விமர்சித்து எங்களுடைய பலவீனாங்களை வெளியில் காட்ட முனைவது பாரதூரமான மாபெரும் விளைவை ஏற்படுத்திவிடும். நீதியரசர் விக்கினேஸ்வரனை முதலமைச்சராக தெரிந்ததில் கணிசமான தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்கு உடன்பாடில்லையாயினும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எடுத்த முடிவுக்கு எதிராக செயற்பட்டு இப்போதிருக்கின்ற ஜனநாயக ரீதியான தமிழ்மக்களின் கட்டமைப்பை கேள்விக்குரியதாக்கிவிடக் கூடாது என்பதற்காக மௌனம் காக்கவும் கூட்டமைப்பின் முடிவை ஆதரிக்கவும் செய்கின்றார்கள். தமிழ்த்தேசிய எண்ணப்பாடுகள் சிதைந்து விடாது தடுப்பதற்கு கூட்டமைப்பு எடுக்கின்ற முடிவுகளுக்கு கணிசமான மக்கள் ஆதரவு தெரிவித்து வருவதை கூட்டமைப்பின் தலைமை கவனத்தில் எடுத்து எதிர்காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளை மக்கள் விருப்பத்திற்கு ஏற்றாற் போல் எடுப்பது அதன் ஜனநாயக பண்புத் தன்மையையும் கட்சி மீதான நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தும்.

வடமாகாண சபைக்கான உறுப்பினர்கள் தெரிவில் சகல கட்சிகளும் மும்முரம் காட்டி வரும் நிலையில் கூட்டமைப்பும் இத்தேர்தலில் தமிழ்த்தேசியம் தொடர்பான உறுதியான கொள்கையும் அரசில் ஞானமும் உள்ள கணிசமான இளம் வேட்பாளர்களை சமய,சமூக வேறுபாடின்றி இத்தேர்தலில் களமிறக்க வேண்டும். இதனால் கிடைக்கக்கூடிய ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். கூட்டமைப்பின் வடமாகாண உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்கள் தான்பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேசம் சார் அபிவிருத்தி. மக்களுடைய துன்ப துயரங்கள் என்பவற்றில் பங்கு கொள்ள வேண்டும். தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் மத்தியில் தோன்றாமல் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் இல்லாமல்) தமது பிரதேச மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடவேண்டும். அப்போதே அரசியல் மீதான நம்பிக்கை அதிகமாகும்.

இன்று பத்திரிகைகளில் அதிகம் வருகின்ற பழமொழி வேட்டி கட்ட ஆசைப்பட்ட தமிழர் இப்போது கோவணத்திற்குப் போராட நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதாகும். உண்மையில் தமிழர்கள் வேட்டி கட்டத் தகுதியானவர்களே. விடுதலைப்புலிகள் அமைப்பு படை வலுச்சமநிலையை தம்பக்கம் கொண்டு வந்து நிழல் அரசாங்கத்தை நிறுவி வடகிழக்கை நிர்வகித்து வந்தார்கள் அப்போது அதற்கான சூழலும் எமக்குச் சாதகமாக இருந்தது. இன்று விடுதலைப் புலிகளது மௌனத்துடன் வேட்டிக் கனவு பின்தள்ளப்பட்டுள்ளதே தவிர அச்சிந்தனை நீங்கிவிடவில்லை. எனவே கூட்டமைப்பு தற்போதுள்ள சர்வதேச, உள் நாட்டு அரசியல் நகர்வுகளை உன்னிப்பாக அவதானித்து வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதுடன் கிடைக்கின்ற கோவணத்திலிருந்து (மாகாண ஆட்சியிலிருந்து) வேட்டியைப்பெற முயற்சிக்கவேண்டும் அதற்கு நமது முதலமைச் சரின் சட்ட நுணுக்கங்கள்.ராஜதந்திரம் எத்தகைய பங்களிப்பை செலுத்தப் போகின்றது என்பதை காலம் வெகுவிரைவில் கதைத்துச் செய்யும் அதற்காக சில நாட்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப் பெருங்கடல் பகுதியில், சீனாவின் ஆதிக்கத்தை வலுவான அச்சுறுத்தலாக நோக்கும் இந்தியா, இலங்கையுடன் தனது விரோதியான பாகிஸ்தான், நெருக்கம் கொள்வதை சற்று நிதானமாகவே கையாண்டு வருகிறது.



# விட்டுப் பிடிக்கிறதா இந்தியா?

பல்வேறு விவகாரங்களில் கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலானது, பாகிஸ்தான் விடயத்தில் சற்று விட்டுப் பிடிக்க இந்தியா முடிவெடுத்துள்ளதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

புதுடெல்லிக்கு மனக்கசப்பை ஏற்படுத்தும் வகையில், அண்மையில் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதிலும், இந்தியா அதை வெளிப்படுத்திய விதம் இந்தக் கேள்வியை எழுப்ப வைத்துள்ளது.

அண்மை காலத்தில், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு களும் ஒத்துழைப்புகளும் வலுவடைந்து வருகின்றன.

வர்த்தக, பொருளாதார, அரசியல், இராஜதந்திர உறவுகள் என்பதற்கு அப்பால், பாதுகாப்பு ரீதியாகவும் இருநாடுகளுக்கும் இடையில் உறவுகள் விரிவடைந்து வருகின்றன.

இலங்கைக்கு மிகவும் முக்கியமான தருணங்களில், கைகொடுத்துக் காப்பாற்றி விட்டது பாகிஸ்தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு இந்தியா பயிற்சி அளித்தபோது, 1985ம் ஆண்டு இறுதியில் கொழும்புக்கு பயணம் மேற்கொண்ட பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ஷியா- உல்- ஹக், இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதற்கு முன்வந்தார்.

உடனடியாகவே பிரிகேடியர் தாரிக் மொஹமட் என்ற சிறப்புப் படை அதிகாரியை கொழும்புக்கு அனுப்பி, சாலியபுர முகாமில் வைத்து இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார்.

அதுதான், கெரில்லா முறியடிப்புப் போர் முறை குறித்து இலங்கைப் படையினருக்கு அளிக்கப்பட்ட பெருமெடுப்பிலான முதலாவது பயிற்சித் திட்டமாகும்.

அந்தப் பயிற்சிகள், வடமராட்சியை இலங்கை இராணுவத்தின், ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கைக்குப் பெரிதும் கைகொடுத்தது.

பின்னர், 2000ம் ஆண்டில், விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்- 3 படையணிகள், அரியாலை தனங்களப்பு ஊடாக, தென்மராட்சிக்குள்ளேயும், கொழும்புத்துறை, செம்மணி வரையிலும் முன்னேறிய போது, ஒரு பெரும் இராணுவ வீழ்ச்சி நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அப்போது, பாகிஸ்தான் அனுப்பி வைத்த பல்குழல் பீரங்கிகள் தான், போர்க்களத்தின் போக்கை மாற்றியமைத்தது.

அதன் பின்னர், நான்காவது கட்ட ஈழப்போரில், விடுதலைப் புலிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அரச படையினருக்கு, 2008ம் ஆண்டு தொடக்கத்தில் பாரிய ஆயுத தளபாட தட்டுப்பாடு ஏற்பட்டது.

ஆட்டிலறிக் குண்டுகளுக்கும், கனரக மோட்டார் குண்டுகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்ட போது, போரைத் தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டது.

அப்போது, பாகிஸ்தான் இராணுவத்தின் தேவைக்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த, ஆட்டிலறிக் குண்டுகளையும், மோட்டார் குண்டுகளையும் கொழும்புக்கு அள்ளி அனுப்பியது அந்த நாடு.

இவையெல்லாவற்றையும் பாகிஸ்தான் ஒன்றும் சும்மா கொடுத்து விடவில்லை.

காசுக்குத் தான் கொடுத்தது என்றாலும், முக்கியமான தருணத்தில் கைகொடுத்து உதவியது என்பதே கவனத்துக்குரியது.

இவ்வாறு மிகவும் சவாலான நேரத்தில், இலங்கையின் பாதுகாப்புக்கு கைகொடுத்து உதவிய பாகிஸ்தானுடன், இப்போது நெருக்கம் அதிகமாகியுள்ளது ஆச்சரியமானதல்ல.

அதுவும், பாகிஸ்தானுக்கு நெருக்கமான சீனாவுடன் இலங்கை கொஞ்சிக் குலவுகின்ற சூழலிலும், பாகிஸ்தானின் பரம எதிரியான இந்தியாவுடன் கொழும்பு முரண்போக்கை கடைப்பிடிக்கின்ற சூழலிலும், இந்த நெருக்கத்துக்கு புதிய பரிமாணம் ஒன்று காணப்படுகிறது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில், சீனாவின் ஆதிக்கத்தை வலுவான அச்சுறுத்தலாக நோக்கும் இந்தியா, இலங்கையுடன் தனது விரோதியான பாகிஸ்தான், நெருக்கம் கொள்வதை சற்று நிதானமாகவே கையாண்டு வருகிறது.

வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் ஒரு ஆண்டு பயிற்சிநெறிக்காக அனுப்பி வைக்கப்பட்ட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர், விமானப்படையைச் சேர்ந்த விங்கொமாண்டர் தர அதிகாரிகள், தமிழ்நாட்டின் எதிர்ப்பை அடுத்து அண்மையில் திருப்பி அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் இருவருமே, பாகிஸ்தானில் உள்ள குவேட்டா நகரில் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இதுகுறித்து, வெளிப்படையாக இந்தியா வாய் திறக்கவேயில்லை.

இரகசியமாக ஏதேனும் கவலைகள் பரிமாறப்பட்டதாகவும் தகவல் இல்லை.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புகள் கிளம்பிய போது, அவ்வாறு பயிற்சி அளிக்காது போனால் அவர்கள் பாகிஸ்தான், சீனாவின் பக்கம் சென்று விடுவார்கள் என்று நியாயப்படுத்திய இந்தியா, இந்த விடயத்தில் சும்மா இருந்து விட்டது.

ஆண்டுக்கு 800இற்கும் அதிகமான இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கும் இந்தியாவினால், அந்த உரிமையை வைத்துக் கொண்டு, இந்த இரு அதிகாரிகளையும் பாகிஸ்தானுக்கு அனுப்பாமல் தடுத்திருக்க முடியும்.

ஆனால் இந்தியா அதைச் செய்யவில்லை.

அடுத்து, அணுசக்தி தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பாக இந்தியாவுடன் ஒரு உடன்பாட்டைச் செய்து கொள்ளத் திட்டமிட்டிருந்த இலங்கை, திடீரெனப் பாகிஸ்தானின் பக்கம் ஓடிப் போனது.

இந்தியாவின் காலை வாரி விட்டு, பாகிஸ்தானுடன் அணுசக்தி தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்யும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக, இந்திய ஊடகங்கள் அபாயச் சங்கு ஊதிய போதும், புதுடெல்லியின், வெளிவிவகாரக் கொள்கை மையமான சவுத் புளொக் அமைதியாக இருந்தது.

இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, தேவையில்லாமல் இதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று மிகவும் அலட்சியமாகப் பதிலளித்திருந்தார் அவர்.

இலங்கை அரசின் சார்பாக தன்னால் கருத்து வெளியிட முடியாது என்று குறிப்பிட்ட அவர், இலங்கையுடன் நல்லுறவு இருப்பதாகவும், எல்லா விடயத்திலும் மூக்கை நுழைத்து அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சல்மான் குர்ஷித்திடம் இருந்த செய்தியாளர்கள் இத்தகைய கருத்தை எதிர்பார்த்திருக்கவில்லை.

அவர்கள் எதிர்பார்த்தது, ஆவேசமான ஒரு பதிலைத் தான்.

ஆனால், அதற்கு மாறாக அவர் கருத்து வெளியிட்டது, பாகிஸ்தான், இலங்கை உறவுகள் விடயத்தில், இந்தியா நிதானத்தைக் கடைப்பிடிக்க முனைகிறது என்பதை உணர்த்தியுள்ளது.

ஏற்கனவே பல்வேறு விவகாரங்களில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ள நிலையில், எல்லா விவகாரங்களுக்குள்ளேயும் மூக்கை நுழைத்து வாங்கிக்கட்டிக் கொள்ளக் கூடாது என்று அமைதியாக இருக்க இந்தியா முடிவு செய்து விட்டதா என்ற கேள்வியையும் இது எழுப்பியுள்ளது.

அதேவேளை, இன்னொரு தரப்பினரோ இது இந்தியாவினது அமைதியான இராஜதந்திர நகர்வு என்கின்றனர்.

இந்தியாவுக்குப் பிடிக்காது என்று தெரிந்து கொண்டே தான், பாகிஸ்தானுடன் கொழும்பு உறவாடுகிறது என்பது இந்தியாவுக்குத் தெரியும்.

இந்தக் கட்டத்தில், இந்தியா வெளிப்படையாக ஏதாவது கருத்தைக் கூறினால், அது கொழும்பின் அச்சத்தைப் போக்கி விடும்.

இந்தியா அமைதியாக இருந்து கொள்வதால், எப்போதும் ஒரு பயம் அதற்கு இருந்து வரும்.

அதையே இந்தியா விரும்புகிறது என்கின்றனர் அவர்கள்.

எது எவ்வாறாயினும், இந்தியாவின் கண்ணுக்கு முன்னாலேயே, பாகிஸ்தானும், சீனாவும் இலங்கையுடன் ஒத்துழைப்புகளை விரிவாக்கி வருவதை இந்தியாவினால், தடுக்க முடியவில்லை.

பெருமூச்சுடன் அந்த ஆவேசத்தை அடக்கிக் கொள்ளக் வேண்டிய நிலையில் தான் அது உள்ளது என்பதே உண்மை நிலை.

**நவரத்தினம் கண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை



# யாரோ இட்ட தீயில்...

மூன்று தசாப்தங் களுக்கு முன் நிலவிய இயற்கைச் சூழல் இன்றில்லை. பார்க்குமிடமெல்லாம் பற்றைக்காடு. எங்கும் எதிலும் தன்னிச்சையாய்ப் படர்ந்து தாவியிருக்கும் காட்டுக் கொடிகள். அவற்றில் அழகழகாய் மலர்ந்திருக்கும் சிறுபூக்கள். பாதையின் குறுக்கே கற்குவியல்கள். அவற்றை மூடி வளர்ந்திருக்கும் எருக்கலை, கள்ளி, மெலிங்கி, காஞ்சான்கோரை. வேருடன் சாய்ந்து விட்ட பாரிய மருதமரம். உடைந்த வீடுகள், கடைகள், கோயில்கள், பாடசாலைகள். மயானத்தின் நடுவே நடப்பதுபோன்ற பிரமை.

கவனம் கால் என எச்சரிக்கும் தெருக்கற்கள், சோலைவனம் சூழ்ந்திருந்த அம்மன் கோயில் இன்று பாலைவனச் சூழலில், அழிவுக்குள்ளாகித் தெரிகிறது.

கருவறை முதல் வெளிமண்டபம் வரை புனரமைப்பு வேலைகளுக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. தப்பிப் பிழைத்த ஒரு தூணில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பை வாசித்தேன். புனருத்தாரண பணிக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் இங்கே கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்; என இருந்தது. அந்தத் தூணில் பின்புறம் சாய்ந்திருந்த ஒருவரிடம் கேட்டேன் தாடி ஐயர் இருக்கிறாரா;;

அவர் இறந்திட்டாரே!....;; என்றவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மகன் ஐயர் இருக்கிறார்... அதுதான் வீடு;; என தெற்கு வீதியில் ஒரு படலையைச் சுட்டிக் காட்டினார். படிகளில் மிதந்து சென்று இடப்பக்கம் இறங்கி அவ்வீட்டின் கதவைத் தட்டினேன். அம்மா வந்து கதவைத் திறந்தார். அதே கேள்வியை அம்மாவிடம் கேட்டேன்.

அவர் போய் ஆறு வருசமாச்சு... நீங்கள் ஆர்....? எங்கேயிருந்து வாறியள்...?

முன்னாளில் பார்த்த சிவந்த தாமரை இதழ் முகம். இன்று வயதாகி வடிவு மாறிய விதவை. அன்னை உருவம். கனிவான வார்த்தை.

இங்கே ஐயாவுக்கு உதவியாக இருந்தாரே அருள்சாமி எண்டு ஒரு ஊமை... அவருடைய மாமன் நான்....;;

வாருங்கோ இருங்கோ... பார்த்த ஞாபனம் இருக்கு...;; அம்மா எடுத்து வந்த கதிரையில் அமர்ந்தேன். ஐயா எப்பிடி?... என்ன வருத்தம்?...

மாரடைப்பு....;;

கொழுகொழு என்றிருந்த அவருடைய பொது நிறமேனியும் சிறுதாடியும் என் கண்முன் தோன்றின. அழகிய இளம் மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் செல்லும் காட்சியும் மனதில் தோன்றியது. இன்று அந்த இளமை இல்லை. ஐயாவும் இல்லை. ஊமை அருள்சாமியின் சுகம் பற்றிக் கதைத்தால் நன்றாய் இருக்கிறார்.... கோயில் வேலைகளில் கைதேர்ந்த கலைஞன் என்பார். காலில் ஒரு புண்... சுகமாகுதில்லை... ஒழுங்காய் ஆசுப்பத்திரிக்குப் போய் மருந்து கட்டிக்கொண்டு வருவார்...;; என முடிப்பார்.

அவருக்குப் பொருத்தமான தொண்டு...;; நான் பதிலுரைப்பேன்.

கேளுங்கோ...;; என என் கவனத்தைத் தன்பால் திருப்பினார் அம்மா.

நல்ல மனுசன் அய்யா... இங்க பாருங்கோ... இந்த விறாந்தைலதான் படுப்பார் ... நித்திரை வரும் வரையும் கதைப்பார் ... ஊமை எண்டு சொல்லேலாது... அல்லப்பல்ல... அல்லப்பல்ல... ஆ... ஓ... என்பார்... அதுவும் தமிழ் தானே எண்டு ஐயா சொல்வார். ஏதோ யோசிப்பது போலவும் கேள்வி கேட்பது போலவும் அவற்றை முகபாகம் இருக்கும்.... காலில் ஒரு புண் ... அது மாறேல்ல... தனியாவே பஸ் ஏறி ஆசுப்பத்திரிக்கு போய் மருந்து கட்டிக்கொண்டு வருவார்...

நான் பேச்சற்று இருந்தேன்.

அம்மா தொடர்ந்து சொன்னார். புண் கொஞ்சம் பெரிசாயிட்டுது... காலும் வீங்கிப் போச்சு.... ஆசுப்பத்திரிக்குப் போய் வாறனெண்டு சொல்லிவிட்டு போனவரை பின்னேரம் அஞ்சு மணியாகியும் காணேல்ல... சில நேரம் வாட்டில தங்கி சுகமான பிறகு வாறவர் ... அண்டைக்கு ஐயாவும் ஒரு அலுவலாய் யாழ்ப்பாணம் போனவர் இருட்டின பிறகுதான் வந்தார்... வந்ததும் அருள்சாமி மருந்து கட்டப்போனவர் இன்னும் வரேல்ல ... எண்டு நான் சொல்ல அவர் ஏதோ கவலைப்படுவது போலத் தெரிஞ்சுது... பிறகு சொன்னார் ... ஆசுப்பத்திரியில் ஒரு கொடுமை நடந்திட்டுதாம் ... இந்தியப் படை சுட்டதாம் ... சந்தேகத்தின் பேரில ... டொக்ரர், நேர்ஸ், நோயாளிகள் உட்பட இருபத்திரண்டு பேர் மரணமாம்... என்டார். ஊமையை ஏன் சுடப்போறாங்கள் அவர் வருவார் எண்டு நான் சொல்ல... எதுக்கும் காலைல போய் பார்த்துவரவாம் ... இப்ப இரவில... தெருவெல்லாம் அவன்கள் நிக்கிறான்கள்... நூறு கேள்வி கேட்பான்கள்... என்றிட்டு படுத்துக்கொண்டார். அடுத்த நாள் காலமை போய் ஆசுப்பத்திரிக்குள்ள காலடி வச்சால் அங்கே வாடின முகத்தோட தான் ஆட்களப் பாத்தாராம்... கந்தோருக்குள்ள போய் ஒரு ஊமை மனுசன் வார்ட்ஸ் இருக்கிறாரா? எண்டு விசாரித்தார் ... தெரியாது;; எண்டு அடித்தால்போல் பதில் சொன்னாராம் ஒருத்தர்.

கொஞ்ச நேரம் நிண்டிட்டு ஒரு பெரிய மேசையருகில் இருந்த உத்தியோகத்தரட்ட தயவாய் கேட்டாராம்... காலில் புண்ணுக்கு மருந்து கட்ட வந்த ஒரு ஊமை மனிசன்... எந்த வாட்ல இருக்கிறார்?... எண்டு அவர் ஒரு தாதியை அழைத்து விசாரித்தாராம். ஓ தெரியும் அந்த ஊமையும் சுடப்பட்டார் எண்டு நேஸ் சொல்ல... ஐயா.. கண்கலங்க வெளியில வந்திட்டார். ஊமையை ஏன் சுட்டான்கள் எண்டு வெளியில் நின்ற ஒருவரிடம் ஐயா பேச்சுக் கொடுக்க ஊமைபோல நடிக்கிறான் எண்டு நினைச்சிருப்பான்கள் பாவிகள் எண்டாராம் அவர். அமைதி காக்க வந்த படை செய்த அட்டூழியம் இம்மட்டா... எல்லா உடலையும் அள்ளிப்போய் ஒண்டாய்ப் போட்டு நெருப்பு வைச்சானாம்...;;

ஓ... அந்தச் செய்தியை நானும் பத்திரிகையில் பார்த்தனான்... சிலபேற்றை பெயரும் இருந்தது. அருள்சாமி எண்டு பெயர் இல்லை... அதுக்கு மேல விசாரிக்கவும். இயலாத நிலை பிறகு... கனநாளைக்குப் பிறகுதான் அருள்சாமியைக் காணேல்லை எண்டு தெரிய வந்தது... அப்பிடித்தான் நடந்திருக்கும் எண்டு தீர்மானிக்கவும் முடியேல்ல... தீராத கவலையோடதான் காலம் போய்க்கொண்டிருந்தது.

இருங்கோ வாறன்;; சொல்லிக்கொண்டே அம்மா எழுந்து உள்ளே போனார். நான் யன்னலூடாக அம்மன் கோயில் அழிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கையில் தேனீர்க் கோப்பையுடன் அம்மா வந்தார்.

தேனீரை வாங்கிப் பருகிக்கொண்டே அருள்சாமியின் வரலாற்றை அம்மாவுக்கு சொல்லவேணும்... சொன்னால் எனக்கு ஓரளவு மன ஆறுதல் கிடைக்கும்:: என்றேன்.

ஓ... சொல்லுங்கோ....;; என்றவாறு அவர் எதிர்க்கதிரையில் இருந்தார். அவருடைய குழந்தைப் பருவமும் வளர்ச்சியும் நினைவொழியா நிகழ்வுகளாய் என் நெஞ்சை வதைக்கிறது... ஒரு தெய்வத் தொண்டனாக வாழ்ந்து மறைந்த அருள்சாமி என்ற தனிமனிதன், மனைவி, பிள்ளைகள் என்ற பந்தமில்லாதவன். அனாதையாய் யாரோ இட்ட தீயில் சாம்பராகிப் போனானே... குழந்தையை சில நாளே அவனுக்குப் பாராட்டினாள்... பின்னர் காயாசுவாதம் என்ற நோயினால் இறந்துபோனாள்... தாயை இழந்த குழந்தை மாமன் மாமியாரின் அரவணைப்பில் வளர்ந்தது... இரண்டு வயதான பின்னும் அவன் வாயிலிருந்து அம்மா... அப்பா ... மாமா தம்பி எனும் வார்த்தைகள் அரை குறையாகவே பிறந்தன. அதற்கு மேல் எச் சொற்களையும் அவன் உச்சரிக்கவில்ல ... என்ன ஊமையா? என்ற அச்சம் குடும்பத்தில் அனைவரையும் கவலைப்பட வைத்தது.

இந்த வயதாயிற்று அவன் வாய் திறந்து எங்களுடன் கதைக்கவில்லை. பள்ளியில் சேர்த்துவிட்டால் பிற பிள்ளைகளுடன் பேசிப் பழகிவிடுவான் என்றெண்ணி

**– வேரற்கேணியன்**

அவ்வூரில் இருந்த தமிழ்ப் பள்ளியில் அவனைச் சேர்த்துவிட்டோம்... ஆனால் ஆறு வயதாகியும் அவன் ஏனைய பிள்ளைகளைப் போல் பேசவேயில்லை... பாடசாலை அதிபர் எங்களை அழைத்து அருள்சாமி வாய் பேசும் திறனற்ற பிள்ளை போல் தெரிகிறது... இனியும் இந்தப் பிள்ளையை பள்ளியில் வைத்திருப்பதில் பயனில்லை... கூட்டிப்போய் ஒரு சிறுவர் இல்லத்தில் சேர்த்து விடுங்கோ;; என அறிவுரை சொன்னார். அது கேட்டு நான் வருத்தப்பட்டேன்... அப்பிடி ஒரு இடத்தில் அவனை சேர்த்துவிடுவதில் எங்களுக்கு விருப்பமில்லை... அவன் வீட்டில் இருக்கட்டும் என்றே விரும்பிறோம்.

பத்துக்கு மேற்பட்டவர்கள் வசித்த பெரிய வீடு அது. அருள்சாமி அனைவருக்கும் செல்லப்பிள்ளை. ஒருவர் மாறி ஒருவர் ஏந்தி மகிழ்ந்தார்கள். தங்கக் காப்பு, சங்கிலி, மோதிரம் அணிந்தவனாய் ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவான்... அல்லப்பல்ல... அல்லப்பல்ல.. அ... ஓ.... ஓ.... ஏ என அவர்களுக்கு விளங்காத வார்த்தைகள் சொல்லிச் சிரிப்பான்... அது கண்டு கூட்டாளிகள் அவனைக் கட்டித் தழுவி விளையாடுவார்கள். அவர்களுடன் கோயிலுக்குப் போவான். திருநீறு சந்தனம் கொடுக்கும்போது வாங்கி நெற்றி நிறைய வைத்து நெஞ்சிலும் பூசி குட்டிச் சாமியார் போல் வீட்டுக்கு வருவான். என்னுடன் வயலுக்கு வருவான்... வயலில் வேலை செய்கிறவர்களுடன் வலிந்து கதை கொடுப்பான். கண்களாலும் கைகளாலும் பேசி அதென்ன? இதென்ன? என கேள்விகளை அடுக்குவான்... தோட்ட நிலத்தில் மண்வெட்டி பண்படுத்தும் வேலையாட்களிடம் போய் அருகில் நின்று தாங்க நான் வெட்டுகிறேன்;; என்றாற்போல் கை நீட்டுவான்... தூரத்துப் புல்வெளியில் கூட்டமாய் போகும் ஆடுகளை சூ... சூ என விரட்டி அதுகள் ஓடுவதைப் பார்த்து கை தட்டிச் சிரிப்பான் அங்குமிங்கும் புல் மேய்ந்து நகரும் மாடுகள் மேல் அமைதியாய் குந்தியிருக்கும் வெள்ளைக் கொக்குகளுக்கு கல் எடுத்து எறிவான். வயல் நடுவே இருக்கும் குளத்தில் அல்லிப்பூ பிடுங்க இறங்குவான். அங்கே நீராடும் மனிதர் பூக்களைப் பிடுங்கி கொடுக்க வாங்கிக் கொண்டு ஓடிவருவான்.

நாளடைவில் அவன் தந்தை மற்றொரு பெண்ணை மனைவியாகக் கொண்டிருந்த போதிலும் கூட்டுக் குடும்பம் வாழ்ந்திருந்த அந்த வீட்டில் அருள் எந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியாகக் கொண்டிருந்த போதிலும் கூட்டுக் குடும்பம் வாழ்ந்திருந்த அந்த வீட்டில் அருள் எந்தக் குறையும் இல்லாதவனாக வளர்ந்து வந்தான். வயதேற ஏற சுதந்திரமாகச் சுற்றி வந்தான். இனத்தவர், அயலவர் வீடுகளுக்குப்போய் வந்தான். எல்லாருக்கும் செல்லப்பிள்ளையாகவே இருந்தான். எழுபத்திரண்டு வயதில் தந்தை ஆறுமுகம் இறந்துபோனார். அதன் பிறகு அருள்சாமி கோயில்களில் கூடுதல் நேரத்தைச் செலவிட்டான். கோயில் பூசை, கிரிகைகளைப் பார்த்து பூசகருக்குத் தேவையான உதவிகளை செய்தான்.

இறுதியாக உங்களிடம் வந்து சேர்ந்தான். நீங்களும் அவரை அன்பு பாராட்டி ஆதரித்து வைத்திருந்தார்கள். ஐயாவைத் தெருவில் காண்கிற நேரம் சுகமாக இருக்கிறாரா? எண்டு கேட்டுக்கொண்டு போவேன். எப்போதாவது எங்கள் வீட்டுக்கு வருவார். ஊர்ப்புதினங்கள் சொல்லிச் சிரிப்பார். அவருடைய சைகைமொழி எங்களுக்குப் பழக்கப்பட்ட சங்கதி. எப்ப வந்தது? என ஒருவர் கேட்டால், ஒ.... இப்ப இப்ப... என்பது போல கையை தரையில் அமர்த்திக் காட்டுவார்... மாலை நேரம் திரும்பிச் செல்வார். நிண்டிட்டு நாளைக்குப் போ;; என யாரும் சொன்னால், அவர் ஐயா பார்த்துக்கொண்டிருப்பார்;; என்றதை உணர்த்தி தன் நெஞ்சில் விரலால் பூனூல் போட்டுக் காட்டிவிட்டுப் புறப்படுவார்.

எல்லாருக்கும் ஒரு மனநிறைவு. தாய் தந்தையை இழந்த பிள்ளை யாருக்குச் சுமை என்று இல்லாமல் ஒரு தெய்வத் தொண்டனாக அவர் மாறிவிட்டமை கண்டு காணாமல் போனான் என்ற செய்தி ஊரெல்லாம் பரவிய நேரம் நான் எங்கோ தொலை ஊரில் இருந்தேன். இருந்தேனா! பல ஊர்களில் நடந்தேன், பாதுகாப்புத் தேடி பதுங்கு குழியில் இருந்தேன் உயிர்பிழைக்க எல்லாம் எல்லாரும் அனுபவித்த சங்கதிதான் போகட்டும்.

இங்கே என்னைச் சந்திக்கிறவரென்றெலாம் முதலில் கேட்டும் கேள்வி அருள்சாமி எங்கே? உண்மையில் என்ன நடந்தது? அந்த மருத்துவமனையில் நடந்த சூட்டுச் சம்பவத்தைச் சொல்லி அதில்தான் அகப்பட்டிருக்க வேணும் எண்டு சொல்வதைத் தவிர வேறெதைச் சொல்லி உறுதிப்படுத்த முடியும்? அருள்சாமி காணாமற்போய் முப்பதாண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அவன் இளமை நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக... இந்த நினைவுக்கு, சாட்சியாக ஒரு பொருள் வாங்கி அவர் பெயர் பொறித்து அம்மனிடம் கையளிக்க விரும்புகிறேன்... சொல்லுங்கோ கோயிலுக்கு என்ன தேவை? ....

ஐயாவோட ஆலோசியுங்களேன்;; என்றார் அம்மா எப்போ சந்திக்கலாம்?;;

இப்ப வருவார்... வர்ற நேரமாச்சு...;;

மகன் ஐயருடன் பேசி, அவருடைய ஆலோசனைப்படி ஒரு தொகுதி பொன்வண்ணக் குடங்கள் வாங்கி அன்பளிப்பு ஆறுமுகம் அருள்சாமி (ஊமை) நினைவாக என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு கோயில் வாசலில் வைத்து ஐயரிடம் கையளித்தேன். அவற்றைப் பார்த்த அம்மா நெகிழ்வுடன் உங்கள் பிள்ளையின் பெயர் அம்பாளின் நைவேத்திய பாத்திரங்களில தெளிவாக எழுதியிருக்கிறீங்கள்... இது எத்தனை ஆண்டுகளானாலும் அழியாது... அம்பாள் தொண்டன் அருள்சாமியை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும்;; என்றார்.


அம்மா எனும் அன்னையின் பொன்மனசு கண்டு என் மனம் மகிழ்ந்தது.

### மின்னல் வரிகள்

ஒரு புத்தகத்தை உங்களது அடுத்த விட்டக்காரருடன் ஒப்பிடலாம். நல்லதாக இருந்தால் வெகு நாள் உங்களிடம் தங்காது மோசமானதாக இருந்தால் உங்களை விட்டு அவ்வளவு சீக்கிரம் பிரியாது.

-ப்ருக்

# மண் மூலம்



மரம் பெரிதாக நின்றது
கிளைகள் அதிகமிருந்தன
இலைகள் சடைத்து பசுமை காட்டியது
பூக்கள் இதழ் விரித்து பரப்பும் நறுமணம்
அந்த பகுதியை ஆக்கிரமித்திருந்தது
மரம் நிறையப்பறவைகளும் அவற்றின் ரீங்ககாரமும்

ஒரு மனிதன் அந்த ரம்மியமான சூழலை ரசித்து நின்றான்

மரம், கிளை, மலர், மணம்,ரீங்கரம், இவற்றுள் எது முக்கியத்துவமானது

ரீங்கரிக்கும் பறவைகள், வசீகரிக்கும்' வண்ண மலர்கள் அது தரும் நறுமணம் பசுமை கொட்டும் இலைகள்

அவற்றை ஏந்தி நிற்கும் கிளைகள், இத்தனைகளைத் தாங்கி நிற்கும் மரம்.....எது பிரமிப்பை ஏற்படுத்துகிறது?

இவையெல்லாவற்றையும் நிமிரவைத்து நிறைகுடமாக, மண்ணில் புதைந்து கிடந்து மௌனம் காக்கிறதே வேர்...

அதுதான் பிரமிப்பை தரும் விடயம் ஏனென்றால்

வேரில்லாமல் மரமில்லை மரமில்லாமல் கிளையில்லை கிளையின்றி இலையில்லை.. இலையின்றி பசுமையில்லை.. பசுமை மலரவைக்கின்றது... மலரோ மணம் கொட்டுகிறது... மணம் உயிரினத்தை வசீகரிக்கிறது... முழுமையான மரம் பறவைகளின் புகலிடமாகின்றது...

பிரமிப்பு நினைப்புகளின் தடம் தொடர்ந்து விஸ்வரூபம் காட்டியது.

மாரி ,கோடை, வசந்தம், இலையுதிர்காலமென பருவ காலப் பரிமாணம் மரத்தை இயல்புறச் செய்கிறது.

இலையுதிர்ந்த மொட்டை மரத்தில் எதுவுமில்லை...
பிரமிப்பு கலைவது போன்ற உணர்வு...
காய்ந்து கிடந்த மரத்தின் அடியில் சிறுமுளைகள்
புதிய மரங்கள்

பூத்துதிர்ந்த மலர்களில் இருந்து எவருக்கும் தெரியாமல் வீழ்ந்து புதையுண்ட சிறிய சிறிய விதைகள் அதே மரத்தின் காய்ந்து சருகாகி உதிர்ந்து உக்கிய இலைகளின் உரத்தில் அவை உயிர்த்து நின்றன.

வேரும்-வித்தும் மரமே மரத்துள் மறைந்திருந்தாலும் பிரமிப்பைமீள உயிர்ப்பித்தது.

வித்துள் ஒளிந்திருந்த மரம் உயிர்தெழும்போது கூறியது.

வெறும் விதைக் கருவை, விருட்சமாக எழ ஆதாரமான பூமித்தாயே... உன்னை வணங்குகிறேன்.

அந்தக்கணத்தில் பிரமிக்கவைத்தது வெறும் மண் மட்டுமே.

# உன்னில் உறைந்து போனேன்.



-டானியல் ஜீவா-

ஊசிக்குளிர்
வந்தென்னை
உரசித்தாக்க
உறை நிலைப் படலமாய்
நீ எந்தன்
நெஞ்சில்...

வாழ்வு
வறுமையின்
கரு முகிலாய்
உன் திருவுருவம்
மனத் திரையில்
தோன்றும் வேளை
வெண்ணிலவாய் மாறும்-

இடுப்புடைய
இடர் வந்து
நொகுமெந்தன்
மெய்யில்
என் நிழல் பார்க்க
எனக்கேது நேரம் -

இன்னும்
எனக்குள்
உன் வாசனை...

நீயும் நானும்
வெயில் சாய
வீதியில் நடந்தோம் -
கவிதையில்
பகிடி பண்ண
காற்றோடு உன் சிரிப்புதிர
எச்சி முறிகள்
என்முகத்திற்கு
சொந்தாகும் ...

இன்புற இடம் தேடி
பண்ணைப் பக்கம்
போகாமலே பக்கத்து வீடே
நமக்கு பாலூட்டும்
நிலவாகும் -

குளிர் காற்றும்
கொளுத்தும் வெயிலும்
கவி சொல்லும்
கனத்த மழையும்
நம் மகிழ்விற்காய்
வசப்படுத்தினோம் -

வெள்ளம்
வரமுன்
வள்ளம்
கரை சேரும்
வீடு வந்ததும்
உன் தெருவுக்கு
ஓடி வருவேன் -

காற்றில்
கடிப்புதற
சாதாளையோடு
சுங்கான் மீன் கிடந்து
சுள் என்று குத்த
உன் புன்னகையை
ஒரு கணம் கண்டால்
விண்ணென்ற நோவெல்லாம்
விரல்களிலிருந்து
விடுதலையாகும் -

அன்றும்
பின்னிரவும்
பேசாமல்
புலர்ந்து போனது
உன் வரவிற்காக
என் உயிர்த்தீ
உருக்குலைந்து
காத்துக் கிடந்தது -

தொடும் தூரம்
நின்று நீ
இன்று
நெடும் தூரம்
சென்று விட்டாய் -

நீ நினைத்தாலே
உன் வேலிச்சிறகு
விரிந்து கொடுக்கும்
காதல் உட்புகுந்து
உள் சதைவரை பாயும் -

நானோ
ஒரு மழையின்
வருகைக்காக
வெண் பனித்தூறலில்
காத்துக் கிடக்கின்றேன் -

ஆயினும்
உன் உதடு தந்த
ஈரத்தை
எப்படி உலர
வைக்கமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## தேளை உணவாக உட்கொள்ளும் விநோத மனிதன்

இவ்வுலகில் எத்தனையே உணவு வகைகள் காணப்பட்டாலும், அவற்றினையும் தவிர்த்து கொடியவிஷத் தன்மை கொண்ட உயிரினங்களின் உணவினையும் விரும்பி உண்ணும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவ்வாறாக கொடிய விஷத்தன்மை வாய்ந்த தேளினை உயிரோடு உண்ணும் மனிதரும் உள்ளனர்.

## கையடக்கத் தொலைபேசி மூலம் மேகங்களை நகர்த்தலாம்.



விளையாட்டு மைதானங்களை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக, செயற்கை மேகத்தை கல்லூரி பேராசிரியர் ஒருவர் உருவாக்கியுள்ளார். இந்த செயற்கை மேகம், 2022ல் நடக்க உள்ள உலக கோப்பை கால் பந்து போட்டியில் பயன்படுத்தப்பட உள்ளது. கத்தார் பல்கலைக்கழகத்தில், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறை பேராசிரியராக பணியாற்றி வருபவர் சாவூத் அப்துல் கனி. இவரது தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினர், திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில், வெயில் மற்றும் வெப்பத்தை தடுத்து, குளுமையாக வைத்திருப்பதற்காக, செயற்கை மேகத்தை உருவாக்கி வருகின்றனர். இது குறித்து, சாவூத் அப்துல் கனி கூறியதாவது: திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில், வெயிலை தடுப்பதற்காக, செயற்கை மேகத்தை உருவாக்கி வருகிறோம். இது, 100 சதவீத கார்போனிக் பொருட்களாலானது.

இந்த செயற்கை மேகத்தை, ரிமோட் கன்ட்ரோல் மூலம் இயக்க முடியும். இதனால், நாம் விரும்பும் இடத்தில், இந்த மேகத்தை நகர்த்தி வைத்து கொள்ளலாம். 2022ம் ஆண்டில், தோகா நாட்டில் நடக்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் போது, இந்த செயற்கை மேகம் பயன்படுத்தப்பட உள்ளது. மேலும், கடற்கரை, கார் நிறுத்துமிடங்கள் போன்ற இடங்களில் பயன்படுத்தும் விதத்தில், செயற்கை மேகங்களை உருவாக்கி வருகிறோம். இதை, மொபைல் போன்கள் மூலம் இயக்கலாம். இதன் துவக்க விலை, 23 லட்ச ரூபாய். எனினும், இது விற்பனைக்கு வரும் போது, இதன் விலை, கூடவோ, குறையவோ செய்யலாம். இவ்வாறு சாவூத் அப்துல் கனி கூறினார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்காபுரம்-02

ஓர் ஆய்வுத்தொடர்



# அடங்காப்பற்றும் இராவணனும்.

ஓர் கண்ணோட்டம்

-அருணா செல்லத்துரை-

தென்னிந்தியாவிலிருந்து இலங்கை சிறிய நீரிணையால் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரிக்கப்பட்ட இலங்கையில் இருந்து கொண்டு தென்னிந்தியாவின் சில பகுதிகளையும் தனது ஆட்சியின் கீழ் இராவணன் வைத்திருந்தான் என்பது இராமாயண காவியத்தின் மூலம் நிரூபணமாகிறது. இராம காவியத்தை நாம் வரலாற்று ரீதியாக உற்று நோக்கினால் ஒரு வட இந்திய நாட்டு படையெடுப்பினால் முதன் முதலில் இலங்கையும் தென்னிந்தியாவும் ஆக்கிரமிக்கப்பட்டன என்று கருதுவதற்கு வலுவான பல காரணிகள் இருக்கின்றன. இராவணன் பற்றிய வரலாற்றுக்கான ஆதாரங்களைத் தேடியபோது இலங்கையின் வட பகுதியில் உள்ள அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் இராவணன் பரம்பரையினர் வாழ்ந்ததிற்கான ஆதாரங்களும் வெளிவருகின்றன.

மனித குலத்தில் இரண்டு வகையான நிறமுடையவர்கள் வாழ்கிறார்கள். இதற்கு இயற்கையின் அமைப்பும் அந்தந்தப் பிரதேசத்தின் சுவாத்தியமும் காரணமாக அமைந்து விடுகின்றன. புவியியல் ரீதியாக மத்திய தரைக்கோட்டுக்கு கீழ்ப்பகுதியில் இருந்தவர்கள் அதிக வெப்பநிலையின் காரணமாக நிறம் குறைந்தவர்களாகவும், மேல் பகுதியில் இருந்தவர்கள் வெள்ளை நிறமாகவும் இருக்கின்றனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இரண்டு நிறத்தையுடைய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். வட இந்தியாவில் இருக்கும் வெள்ளை நிறத்தையுடையவர்கள் ஆரியர்கள். இவர்கள் தங்களை ரிஷிகளாக்கி தர்மத்தின் பிரதிநிதிகளாக்கி தம்மை "தேவகுலம்" என்று அழைத்துக் கொண்டனர். தென்னிந்தியாவில் இருந்தவர்கள் நிறம் குறைந்தவர்கள். இவர்கள் இயக்கர்கள் - நாகர்கள் என்றும் திராவிடர் என்றும் அழைக்கப்பட்டனர். தென்னிந்தியாவில் இருந்த கறுப்பு நிறத்தைக் கொண்ட இயக்கர்கள், (திராவிடர்) மற்றும் நாகர்கள் வட இந்தியாவில் இருந்த வெள்ளை நிறத்தைக் கொண்ட ஆரியர்களுக்கு எதிரானவர்களாக இருந்தார்கள் என்பது நிதர்சனம்.

பெருகி வந்த வட இந்திய சமூகத்தினர் தம்மை உயர்த்திக் கொள்வதற்காக சமய ரீதியாக பாளி, சமஸ்கிருதம், ஆகிய மொழிகளில் பல இலக்கியங்களையும், மந்திரங்களையும் இயற்றினர். ஆரியர்கள் தமக்குரிய முழுமுதற் கடவுளாக மகா விஷ்ணுவை ஏற்றுக் கொண்டு அவரை மேம்படுத்துவதற்காக பல காவியங்களை இயற்றினர். அவ்வாறு வடஇந்திய மொழியில் எழுதப்பட்ட காவியங்களுள் இராமகாதையையும், மகாபாரதத்தையும் தென்னிந்தியாவில் மனு தர்ம காவியங்களாக தென்பிராந்திய மக்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். இதனால் விஷ்ணு வழிபாடு பெருகத்தொடங்கியது. இதனைத் தடுப்பதற்கு நாயன்மார்கள் பல திருமுறைகளைப் பாடினர். "தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பிரசித்தி பெற்றிருந்த சிவலிங்க வழிபாட்டினை மாற்றி, விஷ்ணு வழிபாட்டினை மேம்படுத்தும் நோக்கத்தோடு வட இந்திய காவியமான இராமாயணமும், மகாபாரதமும் எழுதப்பட்டுள்ளன" என்று ஆய்வாளர்கள் கூறும் கருத்தை நாம் புறம் தள்ளி விட முடியாது.

அக்காலத்தில் சைவம், சமணம், வைஷ்ணவம், போன்ற சமயங்களுக்கிடையே பெரிய போட்டிகள் நிகழ்ந்திருப்பதையும் எமது திருமுறைகளிலுள்ள தேவாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

கடல்கோள் காரணமாக இலங்கையும் இந்தியாவும் இரண்டாகப் பிரிந்திருந்தன. 12ம் நூற்றாண்டில் இராமகாதையை கம்பர் தமிழில் எழுதிய காலத்தில் இலங்கை தனிநாடாக இந்தியாவில் இருந்து பிரிந்திருந்தது. சிவலிங்க வழிபாடு, விஷ்ணு வழிபாடு ஆகியவற்றிற்கான போட்டியும் குறைந்து இருந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன.

இலங்கை தனிநாடாகப் பிரிந்திருந்த காரணத்தினாலும், இலங்கையில் இருந்த இயக்கர், நாகர்களின் அரசனான, அரக்கர் குலத்தைச் சோந்த இராவணனை, துஷ்டன் பிறன்மனை கவர்பவன் போன்ற கருத்துக்களை மேலோங்கிய கருத்துக்களாக முன்வைத்து கம்பர் இராமகாதையை மாற்றியமைத்தார் என்று கூறுவாருமுண்டு.

இராமகாதையை எழுதிய கம்பரும் இலங்கைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அவருக்கு இலங்கையின் புவியியல் அமைப்பு தெரிந்திருக்க நியாயமில்லை என்று ஆங்கில ஆய்வாளர்கள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்வதில் எந்த வித தவறுமில்லை.

ஏழாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட திருமுறைகள் மற்றும், 12ம் நூற்றாண்டில் அரங்கேற்றப்பட்ட இராமகாதை (இராமாயணம்) ஆகியவற்றின் மூலம் இலங்கை தனிநாடகப் பிரிந்திருந்தது என்பது தெளிவாகிறது.

இராவணனுடைய வரலாறு இராமாயணத்தில் வரும் கூற்றுக்களுக்கு மேலதிகமாக முழுமையாக தேடப்பட்டாலும் அதற்கு முழுமையான அந்தஸ்து இன்னமும் கிடைக்கவில்லை என்று கூறலாம். இராவணன் சிவனை லிங்க வடிவில் வணங்கிய சிறந்த பக்தன்.

சிவனையும், விஷ்ணுவையும் வணங்குபவர்களுக்கு இடையில் ஏற்பட்ட போட்டியின் வெளிப்பாடே திருமுறைகளும், இராமாயணமும் ஆகும். நல்ல தமிழ் புலமை கொண்ட கம்பருடைய பாடல்கள் தமிழ் ஆர்வலர்களை, பல விடயங்களை மறக்கச் செய்துள்ளது. இராவணனுடைய தலைசிறந்த சிவ லிங்க பக்தி, போர் புரிவதில் இருந்த வீரம் மற்றும் தலைசிறந்த சங்கீத ஞானம் மற்றும் ஏனைய திறமைகள், இலக்கிய விரிவுரையாளர்களால் பின் தள்ளப்பட்டுள்ளன. கதாசிரியர் பாத்திரப்படைப்பிற்கு வலு சேர்ப்பதற்காக இராவணனை காமநோய் பலவீனம் கொண்டவனாக மேம்படுத்தி காவியத்தில் காட்டியுள்ளமையை இதற்கான காரணமாகக் கொள்ளலாம்.

## உருவ அமைப்புகள்:

இராவணன் - இராமன் ஆகியோரைக் கதாநாயகர்களாகக் கொண்ட இராமாயண காவியத்திலே தாடகை, சூர்ப்பனகை, கும்பகர்ணன் போன்றவர்களையும் மற்றும் பல கதாபாத்திரங்களையே விகார உருவமுடையவர்களாக கம்பர் வர்ணித்திருப்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் அனைவரும் இராவணனைச் சார்ந்தவர்கள். ஆனால் இராவணனுடைய துர்நடத்தைக்கு ஏதுகோலாக இருந்தவர்கள் என்ற காரணத்தினால் கதாசிரியர் இவ்வாறான பாத்திரங்களை விகாரமாகப் படைத்திருக்கலாம்.

சிங்கள மொழி வரலாறான மகாவம்சம் போன்ற நூல்கள் "யக்சய" என்ற பேய்கள் வாழ்ந்ததாகவும் அவர்களுடைய உருவம் விகாரமாக இருந்ததாகவும் தெரிவிக்கின்றது. வேடர்கள், "யக்சய" "பேய்கள்" என்ற உருவங்களை வணங்கியதாக கூறப்படுகிறது. இதனையே பிற்காலத்தில் அசுரர் குலத்தவர்களென சில தமிழ் இலக்கியங்களும், ஆங்கில நூல்களும் மொழிபெயர்த்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். "அசுர குலத்தவர்கள், பலம் பொருந்திய பெரிய உருவத்தையுடையவர்களே ஒழிய பேய்கள் போன்றவர்கள் அல்ல."

## இராவண-இராம அடையாளங்கள்:

இலங்கையின் வடபுலத்தில் திருகோணமலை [illegible] உள்ள இராவணன் வெட்டு, கன்னிகா என்ற இடத்தில் உள்ள வெந்நீரூற்றுக் கிணறுகள், மன்னார் மாதோட்டம், மாந்தையிலுள்ள திருக்கேதீஸ்வர ஆலயம், போன்றவை இராமாயண காவிய நாயகனான இராவணன் வாழ்ந்தமைக்கு ஆதாரமாக இருக்கின்றன.

அடங்காப்பற்றுப் (வன்னி) பிரதேசத்தில் கும்பகன்னன் மலை, குருந்தனூர் மலை என்பனவும் மேற்கு மூலை, கிழக்கு மூலை மற்றும் அடங்காப்பற்று என்ற இடப் பெயர்களும், மன்னார்ப் பகுதியில் மாளிகைத்திடல், வங்காலை, பாப்பாமோட்டை, கோயில் குளம் போன்றவையும் இருக்கின்றன. இளவாலையில் மாரீசன் கூடல் என்ற காரணப் பெயரைப் போன்று இராவணனுக்குரிய அடையாளப் பெயர்கள் பல வட பிரதேசத்தில் இருக்கின்றன. இவற்றுள் சில இராவணனுடைய காலத்திற்குப் பின்னர் இராம கதையின் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்ட பெயர்களாகும்.

சீதை சிறைவைக்கப்பட்டதாகக் கூறப்படும் சீதா எலிய, மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கேணி, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள இராமர் அணை, இராவண-இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் தென்னிந்தியாவில் இராமர் வணங்கியதாக கூறப்படும் இராமேஸ்வரம் கோவில், போன்றவை இராமருக்கான சில வரலாற்றாதாரங்களாக இருக்கின்றன.

## இராவணனுக்குப் பின்னர் அசுரர்:

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் ஒன்றாக இருந்த வட இலங்கை, இராமாயண காலத்தின் பின்னர், யாழ்ப்பாண இராஜதானி, இலங்காபுரம் இராஜதானி என்று பிரிக்கப்பட்டது. இலங்காபுரம் இராஜதானிக்குள் அடங்கிய ஒரு பகுதி "அடங்காப்பற்று" என்று அழைக்கப்பட்டுள்ளது. இராவணன் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இராவணன் பரம்பரையினரான அரக்கர்கள் இயக்கர்கள் நாகர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் முழுமையாக அழிக்கப்பட்டனரா? இராவணனுடனிருந்த இயக்கர்களும் நாகர்களும் என்ன ஆனார்கள், எங்கே இருந்தார்கள்?

தற்போது வன்னி என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் அடங்காப்பற்றான மேற்கு மூலை கிழக்கு மூலைப் பிரதேசத்தில் அவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் யாருக்கும் அடங்காமல் இருந்த காரணத்தால் இப்பகுதி "அடங்காப்பற்று" என்று அழைக்கப்பட்டது.

தற்போது சிவ வழிபாடும், விஷ்ணு வழிபாடும் ஒன்றாகி போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவிலும், இலங்கையிலும் பரவி வருகின்றது. இராமயணத்தில் வரும் கதாபாத்திரமான அவதார புருஷராகிய இராமரை வழிபடுவதும், இராமருக்கு உதவியாய் இருந்த இராமபக்த ரனுமானை ஒரு அவதாரமாக்கி வழிபடும் முறையும் இந்தியா, இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் வேகமாகப் பரவி வருவதினால், மீண்டும் ஒரு இராம ராஜ்ஜியம் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் நம்பிக்கையாக வளர்ந்து வருகின்றது.


முதன் முதலில் இலங்கையில் ஒரு அந்நிய நாட்டு ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராட்டம் நடத்திய அரக்கர் குல அரசனும், இயக்கர் குலத்தில் திருமணம் செய்து இலங்காபுரத்தை தலை நகராகக் கொண்டவரும், ஈழநாட்டின் தேசிய வீரனுமான இராவணனுடைய வரலாற்றையும் பெருமைகளையும் மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான ஆதாரங்களைத் தேட வேண்டியது அவசியமாகின்றது. அசுரர் குல இராவணன் பரம்பரையினருக்கும் இயக்கர் மற்றும் நாகர் குலத்தவருக்கும் இராவண - இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் என்ன நடந்தது?

இலங்கையில் தமிழர்களுடைய பூர்வீகம் என்ன என்பதனையும் அதற்கு ஆதாரபூர்வமான இராவணன் பற்றி நாயன்மார் பாடிய திருமுறைகளையும், இராமாயணத்தையும், இதுவரை வடபுலத்தில் செய்யப்பட்ட புதைபொருள் ஆய்வின் வெளிப்பாடுகளையும், ஆய்வாளர்கள் பதிவு செய்த ஆய்வுக் கருத்துக்களையும், கிழக்கு மூலை, மேற்கு மூலை தட்டயமலை மற்றும் மன்னார் போன்ற இடங்களில் ஆய்வு செய்த போது எனக்குக் கிடைத்த புராதன சின்னங்களையும், தமிழர்களின் தாயக ஆதாரத்திற்காக தொகுப்பதே எனது முயற்சியாகும்.

(தொடரும்.......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில எழுத்துக்களை எழுதும் போதோ அல்லது அவற்றினை பயன்படுத்தி சொற்களை உருவாக்கும் போதோ ஏற்படும் தவறுகளை அதிர்ச்சியின் மூலம் சுட்டிக் காட்டும் பேனா சில மாதங்களுக்கு முன்னர் அறிமுகமாகி இருந்தது. இந்நிலையில் மேலும் சில தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாக மற்றுமொரு பேனா உருவாக்கப்பட்டுள்ளது. இது பொருத்தமான அதிர்ச்சிகளின் மூலம் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடியதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. Lernstift எனப்படும் இப்பேனாவானது கற்றலில் ஈடுபடும் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் போன்றவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தவறுகளை சுட்டிக் காட்டும் பேனா அறிமுகம்

# புதியவன் தொழில்நுட்பம்

## இங்கிலாந்தில் சாரதி இல்லாத கார் அடுத்த ஆண்டு அறிமுகம்



பிரிட்டனில் சாரதி இல்லாத காரின் முதல் சோதனை நடக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், ஜப்பனீஸ் பன்னாட்டு வாகன தயாரிப்பாளரான நிசான் தொழில்நுட்பத்தை கொண்டு, ஏற்கனவே ஒரு தனியார் சாலையில் ஓட்டுநர் இல்லாத கார் ஓட்டி சோதனை செய்துள்ளனர். பிரிட்டனில் மற்ற போக்குவரத்து கொண்ட சாலைகளில் இந்த காரை சோதனை செய்ய போக்குவரத்து துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், கார்கள் தானே இயக்கி ஓட்டும் போது பாதுகாப்பு நடவடிக்கைக்காக உள்ளே ஒரு ஓட்டுநர் அமர்ந்து இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஓட்டுநர் இல்லாத கார்கள் ஆரம்பத்தில் கிராமப்புற மற்றும் புறநகர் சாலைகள் சோதனையிட வேண்டும் என்று 'டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இணைய தேடல் நிறுவனமான கூகுள் ஏற்கனவே சான் பிரான்சிஸ்கோ சாலைகள் 1,60,934 கிலோமீட்டர்கள் ஓட்டுநர் இல்லாத காரை சோதனை செய்தது என்று அறிக்கையில் கூறியுள்ளது. ஓட்டுநர் இல்லாத கார்கள் கேமராக்கள், ரேடார் மற்றும் லேசர் சென்சார்கள் மூலம் இயங்கிக் கொள்ளும்.

## "வேர்ட்" விற்பனையை நிறுத்த மைக்ரோசாப்ட்டுக்கு கோர்ட் உத்தரவு!


மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் வேர்ட் சொப்ட்வேரை அமெரிக்காவில் விற்பனை செய்யக் கூடாது என்று அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்காக 2 மாத அவகாசத்தையும் அது கொடுத்துள்ளது. இந்த சொப்ட்வேர் தொழில்நுட்பம், காப்புரிமையை மீறும் வகையில் இருப்பதாக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றம் இந்த அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது. உலக அளவில் மிகவும் பாப்புலரான எம்.எஸ். ஆபிஸ் சொப்ட்வேர் உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் இந்த சொப்ட்வேர் உலகளவில் 3 பில்லியன் டாலர் அளவுக்கு விற்னையானது. இந்த நிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் வேர்ட் மற்றும் எக்ஸ்எம்எல் சொப்ட்வேர்கள் தங்களது தயாரிப்புகளை பிரதி செய்து உருவாக்கப்பட்டவை என்று கனடாவைச் சேர்ந்த i4i என்ற நிறுவனம் கூறி வருகிறது. இதுதொடர்பாக அது அமெரிக்காவின் டெக்சாஸ் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி லியோனார்ட் டேவிஸ், எம்எஸ்வேர்ட் 2003, வேர்ட் 2007 மற்றும் அதன் அடுத்தடுத்த பதிப்புகளை வெளியிட தடை விதித்து உத்தரவிட்டார். 2 மாதங்களுக்குள் இதை அமல்படுத்த வேண்டும் எனவும் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு அவர் உத்தரவிட்டுள்ளார். மேலும், கனடா நிறுவனத்திற்கு 200 மில்லியன் டொலர் இழப்பீட்டை மைக்ரோசொப்ட் செலுத்த வேண்டும் எனவும், அந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்காக மேலும் 40 மில்லியன் டாலர் அபராதத்தை செலுத்த வேண்டும் எனவும் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த தீர்ப்பு குறித்து i4i நிறுவனத்தின் தலைவர் லௌடன் ஓவன் கூறுகையில், மைக்ரோசொப்ட் நிறுவனத்தை நாங்கள் மதிக்கிறோம். அதேசமயம், காப்புரிமை பெறப்பட்ட சொப்ட்வேரை இன்னொரு நிறுவனம் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்றார். இந்த தீர்ப்பு குறித்து ஏமாற்றம் தெரிவித்துள்ள மைக்ரோசொப்ட் நிறுவனம் மேன் முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

## Windows XP இயங்குதளம் பயன்படுத்துபவர்களுக்கு மேம்படுத்தல் செய்யுமாறு அறிவுறுத்தல்

கணினிகள் மற்றும் மடிக்கணினிகளில் இயக்க அமைப்பில் பிரபலமான 'விண்டோ எக்ஸ்பி பயன்படுத்துபவர்களுக்கு எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், Windows XP மென்பொருள்களுக்கு எதிராக ஹேக்கிங் முயற்சிகள் ஊடுருவதால் 'உடனடியாக' மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர். மைக்ரோசொப்ட் நிறுவனமும் Windows XP-க்கான உதவிகளை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தவுள்ளது. இதனால் Windows XP-க்கான பாதுகாப்பு மேம்படுத்தல்கள் மைக்ரோசொப்டிடம் இருந்து கிடைக்காமல் போகும் நிலை உருவாகிவிடும்.


இதனையடுத்து Windows XP இயங்குதளத்தை பயன்படுத்தும் அனைத்து பயனர்களையும் மற்றும் நிறுவனங்களையும் உடனடியாக ஏப்ரல், 2014 முன் அவர்களின் மென்பொருள் பயன்பாடுகள் இயக்க மேம்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படுகிறது. மைக்ரோசாப்ட் ஆரம்பத்தில் 2001 ல் Windows XP இயங்குதளத்தை வெளியிடப்பட்டது. தற்போதைய வெளியீட்டில் Windows XP பதிப்பு Windows XP சேவை பேக் 3 அழைக்கப்படுகிறது. பின்னர், மைக்ரோசாப்ட் வாடிக்கையாளர்களுக்காக அடுத்த மூன்று பதிப்புகளான 8 நவம்பர் 2006 ல் Windows Vista, ஜூலை 2009 ல் Windows 7 மற்றும் ஆகஸ்ட் 2012 ல் Windows 8 வெளியிட்டது. இந்நிலையில் மைக்ரோசாப்ட் நிறுவனத்திடம் இருந்து இறுதியாக வெளிவந்த பாதுகாப்பான இயங்குதளமாக Windows 8 கருதப்படுகிறது.

## ஒரே மின் வயரில் 'பிளஸ், மைனஸ்'



நேர், எதிர் என இரு வகை மின்சாரங்களையும் ஒரே கேபிள் வயரில் கடத்தும் புதிய வயரை, கலசலிங்கம் பல்கலைக்கழக மாணவி கண்டுபிடித்து சாதித்துள்ளார். அவரது கண்டுபிடிப்புக்கு மத்திய அரசு காப்புரிமை வழங்கியுள்ளது. தமிழகத்தில் விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகேயுள்ள கலசலிங்கம் பல்கலைக்கழக இன்ஜினியரிங் மாணவி ராக்கி ஷெனாய். மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையில் இறுதியாண்டு படித்து வருகிறார். மின் உற்பத்தி பிரிவில் புதிதாக சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் புரொஜக்ட் செய்து வந்தார். அதன்படி, மின்சாரத்தைக் கடத்தும் நேர் (+) எதிர் (-) என்ற இரு கேபிள்களுக்கு பதிலாக ஒரே கேபிளை உருவாக்கினார். அதில் அனைத்து மின் கம்பிகளையும் உள்ளடக்கி, ஒன்றோடு ஒன்று உராய்வு செய்யும் போது தீப்பற்றி விடாமல் தடுக்க மின்தடை கம்பி ஒன்றையும் நடுவில் உண்டாக்கினார். பின்னர், இந்த கேபிளை ஒசூரில் உள்ள அசோக் லேலண்ட் சென்று, அங்கு வெல்டிங் மூலம் முறையாக பொருத்தும் பணியை செய்து முடித்தார். இந்த புதிய கேபிள் வயர் மூலம் 25% அளவுக்கு மின் இழப்பு, செலவு குறைகிறது. பேட்டரி கேபிள்ஸ், பஸ்கள், ஜெனரேட்டர்கள் ஆகியவற்றில் பயன்படுத்தும் வகையில் இந்த கேபிள் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கண்டுபிடிப்பு குறித்து மாணவி ராக்கி ஷெனாய் கூறுகையில், "இந்த கேபிள் வயரை பயன்படுத்தும் போது மின்சாரம் அதிகமாக, அதாவது 14, 15 ஆம்பியர் அதிகமாக கிடைக்கும். இவ்வாறு அதிகமாக வருவதால் எந்த ஆபத்தும் இல்லை. இது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனது கண்டுபிடிப்புக்கு காப்புரிமைக்காக டெல்லியில் உள்ள கன்ட் ரோலர் காப்புரிமை வணிகம் மற்றும் தொழிற் துறை அமைச்சகத்துக்கு விண்ணப்பித்தேன். அதற்கு, மத்திய காப்புரிமை கழகம் சார்பில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய காப்புரிமைக் கழக மலரில் வெளியாக உள்ளது" என்றார்.

## அதி நவீன ஸ்மார்ட் கைக்கடிகாரம் அறிமுகம்




ஸ்மார்ட் கைப்பேசிகள் மக்கள் மத்தியில் பலமான வரவேற்பைப் பெற்றதை தொடர்ந்து அதே தொழில்நுட்பத்தினை உள்ளடக்கிய கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் பல்வேறு நிறுவனங்கள் களமிறங்கியுள்ளன.

இப்போட்டியில் Emopulse எனும் நிறுவனம் ஏனைய நிறுவனங்களினது ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை விடவும் முற்றிலும் வித்தியாசமான கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தியுள்ளது.

இது Linux AI இயங்குதளத்தினைக் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதுடன் அப்பிளின் iPhone 4S இன் திரைக்கு நிகரான தொடுதிரையினைக் கொண்டுள்ளது. மேலும் இதில் 2 GB பிரதான நினைவகம் காணப்படுவதுடன் 128 அல்லது 256 GB கொள்ளளவுடைய சேமிப்பு வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய கமெராவினையும் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மன்னன் படத்துக்காக வாலி எழுதிய, அம்மா என்றழைக்காத உயிரில்லையே பாடலின் வரிகள், தாய்மையின் மேன்மையை உணர்த்துகிறது. திருச்சியிலுள்ள ஒரு கோவிலில் இந்தப் பாடல் கல்வெட்டாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.”



# வாலி

## காலத்தை வென்று வாழும் காவியக் கவிஞர்

**15** ஆயிரம் பாடல்களை எழுதிக்குவித்த காவியக்கவிஞன் வாலியின் இறுதிச்சடங்கில் பல ஆயிரம் இரசிகர்கள் கண்ணீர் மல்க கலந்து கொண்டு இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொண்டனர். வாலிக்கு வயது 82. உடல் நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு நுரையீரல் தொற்று நோய் இருந்ததை கண்டறிந்த வைத்தியர்கள் அவரை தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதும் வாட்டுக்கு மாற்றப்பட்டார். பின்னர் அவர் உடல் நிலையில் மாற்றம் ஏற்படாத நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மீண்டும் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தும் சிகிச்சை பலனின்றி அவரின் உயிர் பிரிந்தது.

இதை அறிந்த ஏராளமான ரசிகர்களும், திரையுலகினரும், மருத்துவமனை வளாகத்தில் சோகத்துடன் குவிந்தனர். பின்னர் அவரது உடல் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. திரையுலகினர் அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். தமிழ் நாட்டில் உள்ள பெசன்ட் நகர் மின் மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. மறைந்த வாலிக்கு, பாலாஜி என்ற மகன் உள்ளார். வாலியின் மனைவி ரமணத்திலகம் ஏற்கனவே இறந்துவிட்டார்.

காவியக் கவிஞர் வாலி திருச்சி ஶ்ரீரங்கத்தை சேர்ந்தவர். இவரது இயற்பெயர் டி.எஸ்.ரங்கராஜன். கவிஞர், பாடலாசிரியர், நடிகர், இயக்குனர்,ஓவியர் என பன்முக ஆற்றல் கொண்டவர். தமிழ்த் திரையுலகில் கவிஞர். கண்ணதாசன் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் வாலியும் சிறப்பான பாடல்கள் எழுதி தன்னை சினிமாத்துறையில் நிலை நிறுத்தியவர். நடிகர் எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல், விஜய், அஜீத், தனுஷ், சிம்பு என பல தலைமுறைக்கு பாட்டு எழுதிய பெருமை இவரையே சேரும். எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் உட்பட பல இசையமைப்பாளர்களின் இசையில் பாடல் எழுதியுள்ளார்.

வாலிக்கு 2007,ல் பத்மஶ்ரீ விருதைக் கொடுத்து மத்திய அரசு கௌரவித்தது. 1970ல் எங்கள் தங்கம், 79ல் இவர்கள் வித்தியாசமானவர்கள், 89ல் வருஷம் 16 மற்றும் அபூர்வ சகோதரர்கள், 90ல் கேளடி கண்மணி, 2008ல் தசாவதாரம் படங்களில் பாடல்கள் எழுதியதற்காக, தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதுகளையும் பெற்றார். மேலும் தமிழக அரசு வழங்கிய கலைமாமணி விருதையும் பெற்றார். ஆனால், 73ல் பாரத விலாஸ் படத்தில் அவர் எழுதிய இந்திய நாடு என்வீடு என்ற பாடலுக்கு மத்திய அரசு வழங்கிய தேசிய விருதை வாங்க மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

1958ல் அழகர்மலை கள்ளன் என்ற படத்தில் பாடல் எழுதத் தொடங்கிய வாலி, கடைசியாக வசந்தபாலன் இயக்கும் காவியத் தலைவன் என்ற படத்துக்காக எழுதியுள்ளார். வாலியை சினிமாவுக்குப் பாட்டு எழுத அழைத்து வந்தவர், சமீபத்தில் மறைந்த பின்னணிப் பாடகர் ரி.எம். சவுந்தரராஜன். தபால் மூலம் வாலி எழுதி அனுப்பிய கற்பனை என்றாலும், கற்சிலை என்றாலும், கந்தனே உனை மறவேன் என்ற பாடலுக்கு ரி.எம்.சவுந்தரராஜன் இசையமைத்து பெயர் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வாலிக்கு 2007,ல் பத்மஶ்ரீ விருதைக் கொடுத்து மத்திய அரசு கௌரவித்தது. 1970ல் எங்கள் தங்கம், 79ல் இவர்கள் வித்தியாசமானவர்கள், 89ல் வருஷம் 16 மற்றும் அபூர்வ சகோதரர்கள், 90ல் கேளடி கண்மணி, 2008ல் தசாவதாரம் படங்களில் பாடல்கள் எழுதியதற்காக, தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதுகளையும் பெற்றார். மேலும் தமிழக அரசு வழங்கிய கலைமாமணி விருதையும் பெற்றார். ஆனால், 73ல் பாரத விலாஸ் படத்தில் அவர் எழுதிய இந்திய நாடு என்வீடு என்ற பாடலுக்கு மத்திய அரசு வழங்கிய தேசிய விருதை வாங்க மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

ஏராளமான நூல்கள் வாலி எழுதியுள்ளார். நானும் இந்த நூற்றாண்டும் என்ற சுயசரிதையை எழுதினார். இவர் எழுதிய நூல்களில் அவதார புருஷன், பாண்டவர் பூமி, ராமாநுஜ காவியம், கிருஷ்ண விஜயம், கலைஞர் காவியம், கிருஷ்ண பக்தன், வாலிப வாலி, அம்மா, பொய்க்கால் குதிரைகள், நிஜ கோவிந்தம் போன்ற நூல்கள் வரவேற்பு பெற்றவை. சிறுகதை, கவிதை, உரைநடைக் கவிதை என வாலி ஆயிரக்கணக்கான படைப்புகளை வழங்கியுள்ளார். கலியுக கண்ணன், காரோட்டி கண்ணன், ஒரு செடியின் இரு மலர்கள், சிட்டுக்குருவி, ஒரே ஒரு கிராமத்தில் உட்பட 17 படங்களுக்கு திரைக்கதை, வசனமும் எழுதியுள்ளார். வடைமாலை என்ற திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

1966இல் மணி மகுடம் படப்பிடிப்பில் கலைஞர் கருணாநிதியை சந்தித்துப் பேசியது முதல், தனது இறுதிக்காலம் வரை அவரது நெருங்கிய நண்பராக இருந்தார் . வாலியை என்ன ஆண்டவனே என்று எம்.ஜி.ஆரும், என்ன வாத்தியாரே என்று சிவாஜியும் அன்புடன் அழைப்பார்கள். வாலி வீட்டின் தோசையும், மிளகாய்ப் பொடியும் சினிமா வட்டாரத்தில் பிரபலம். எம்.ஜி.ஆர் உட்பட பல பாடலாசிரியர்கள் தோசைக்கு வாடிக்கையாளர்களாக இருந்தார்கள். பல முன்னணி நடிகர்களுக்கு முதல் பாடல் எழுத வைப்பது பல இயக்குநர்களின் ஆசை . இன்றைக்கும் இளமையான பாடல் வரிகளை எழுதியதால் அவர் எப்போதும் வாலிபக் கவிஞர் என்றே அழைக்கப்பட்டார்.

பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளில் பேசியிருந்தாலும், இதுவரை வாலி வெளிநாடு சென்றதில்லை. இந்த சினிமா வாழ்க்கை, எம்.எஸ்.வி போட்ட பிச்சை என்று அடிக்கடி நன்றி மறவாமல் குறிப்பிடுவார். மன்னன் படத்துக்காக வாலி எழுதிய, அம்மா என்றழைக்காத உயிரில்லையே பாடலின் வரிகள், தாய்மையின் மேன்மையை உணர்த்துகிறது. திருச்சியிலுள்ள ஒரு கோவிலில் இந்தப் பாடல் கல்வெட்டாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காதல், நகைச்சுவை, வாழ்க்கை தத்துவம், கலகலப்பு, காதல் தோல்வி, பக்தி என பல்வேறு நிலைகளில் 15 ஆயிரம் பாடல்களுக்கு மேல் எழுதி சாதனை படைத்தவர். கிட்டத்தட்ட அரைநூற்றாண்டு காலமாக பாடல் எழுதியவர், சினிமா வாய்ப்புத் தேடி அலைந்த காலகட்டத்தில், தொடர்ந்து ஏற்பட்ட தோல்விகளால் ஊருக்குத் திரும்ப முயன்ற போது, **மயக்கமா, கலக்கமா** என்ற பாடலைக் கேட்டு, நம்பிக்கையோடு வீடு திரும்பினார். இயக்குநர் கே.பாலசந்தரும், கமலும் கேட்டுக் கொண்டதற்காக பொய்க்கால் குதிரை, சத்யா, பார்த்தாலே பரவசம், ஹேராம் ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

# ரெஞ்சன் மணியம்



“உந்த பெட்டையள் குறுக்க மறுக்க தெரிய சின்னத் துண்டை சட்டையாக போட்டுக் கொண்டு திரியுதுகள். உதுகளின்ர கொம்மா கொப்பர் உதுகளை பாப்பது இல்லையா? உந்தப் பெட்டைகளை பார்த்து மற்ற பெட்டையளும் பழகப் போகுதுகள் எல்லோ.” பஸ்ஸிற்குள்ளையும், கோயிலுக்குள்ளையும் மெல்லோ அரை குறை உடுப்புகளுடன் திரியிதுகள். பிறகு அவன் நுள்ளிப்போட்டான், அவன் கிள்ளிப் போட்டான் என்று பெரிதாக பிரச்சனையும் எடுக்கினம். அரை குறை உடுப்புடன் பெட்டையள் வீதியில் போனால் பெடியழுக்கு சுண்டி இழக்கும் தானே. இது தெரியாதா. அடக்க ஒடுக்கமாக எமது பண்பாட்டோடு ஒட்டிய உடைகளை அணிந்தால் பெட்டையளை பார்த்து பெடியள் கும்பிடு போடுவாங்கள். இதனை உந்தப் பெட்டையள் உணருவார்களா? படிக்கப்போறன், வேலைக்குப் போறன் என்று சொல்லி அரைகுறை சட்டையுடன் போய் பிரச்சனையை எல்லோ எடுக்குதுகள். பிறகு பெண்மை பற்றி பேசுதுகள். இதுகளை என்னவென்று சொல்ல. சினிமா படத்தைப் பாத்துப் போட்டு, அந்த நடிகை போடுகின்ற உடுப்பு மாதிரி தாமும் போட்டுக்கொண்டு திரியிதுகள். நடிகைகள் பணம் சம்பாதிப்பதற்காக அரைகுறை உடுப்புடன் நடிக்குதுகள். அடுத்தது அவர்கள் தமிழ் பெண்கள் அல்ல வேறு மாநிலத்து இனப் பெண்கள். அவர்களுடைய கலாச்சாரமும், வெள்ளைக்காரர்களுடைய கலாச்சாரமும் ஒன்றுதான். பணத்திற்காக திரைப்படத்தில் நடிக்கும் போது அரைகுறை ஆடையுடன் நடிப்பதற்கு அவர்கள் சங்கடப்படமாட்டார்கள். அவர்களுடைய வாழ்வில், சினிமா திரைப்பட கதை போல மாறி மாறி ஆண்களுடன் துணை சேர்வார்கள். ஆனால் தமிழ் பெண்களின் கலாசாரம் அப்படியல்ல. புடவைகட்டி தலைக்கு பூ அணிந்து செல்வார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு காணப்படுகின்றது. எங்கட பெடியள் விடுதலை வேண்டி போராடேக்க தமிழ் கலாச்சார பண்பாடு உச்சத்தில் இருந்தது. போராட்டம் தோல்வி கண்ட நிலையில் தமிழர்களுடைய பண்பாடு கடைசி இடத்துக்கு வந்து விட்டது. அரை குறையுடன் திரியும் உந்தப் பெட்டையளை பார்கின்றபோது தெரிகின்றது. எமது மண்ணில் தமிழ் பெண்களின் கலாசாரத்தை குலைப்பதற்கு மேல் மட்டத்தில் இப்பொழுது பல பேர் இருக்கினம். எனவே தமிழ் ப்பெண்கள் இதனை உணர்ந்து உங்கள் உடை நடை பாவனையில் பாதுகாப்பாக இருங்கள். நீங்கள் படிக்கின்ற பாடசாலைகளிலும், ரியூசனிலும் வேலைத்தளங்களிலும் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

அரை குறை ஆடைகளைத் தவிர்த்து முழு ஆடை அணிந்து உங்களை கௌரவப்படுத்திக் கொள்ளுங்கள். இல்லாது போனால் ஆசை வார்த்தை கூறி உங்களை படுகுழியில் கொண்டுபோய் விழுத்தி விடுவார்கள். பிறகு நீங்கள் சமூகத்திலையே தலை காட்ட முடியாமல் போய்விடும் என்பதை உணருங்கள். உங்களிற்கு கல்வியை கொடுப்பதிலும், உங்கள் திறமைக்கு ஏற்ப வேலையை கொடுக்கின்ற போதும், உங்களை பாலியல் ரீதியாக துன்பப்படுத்தும் அதிகாரிகளிற்கு செருப்பால் அடியுங்கள். வாழ்வுக்காக நீங்கள் அடங்கிப் போனால், விட்டுக்கொடுத்துப் போனால் இந்த சம்பவங்கள் அதிகரிக்குமே ஒழிய ஒரு போதுமே குறையாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். கண்ணகி போல் இருங்கள். திருமணம் செய்து இரு மாதங்களில் பிள்ளையை பெற்றாள், பெற்ற குழந்தையை மண்ணில் புதைத்தாள், பெற்ற குழந்தைக்கு தகப்பன் யார் என்று தெரியாமல் உள்ளாள் போன்ற இழிவு பட்டத்தைப் பெறாதீர்கள். உங்களை இந்த சமூகம் ஒதுக்கி வைப்பதுடன் உங்களின் சந்ததியே இல்லாமல் போய் விடும். சிந்தித்து செயற்படுங்கள். அரை குறை ஆடை பெண்களுக்கு அழகாக இருகின்றது என்று சொல்வார்கள். ஆனால் அந்த ஆடையால் ஏற்படும் அசௌகரியங்கள் பெண்களிற்கும் ஏற்படுகின்றது. **வெள்ளைக்காரிகளே புடவை கட்ட ஆசைப்படும் போது தமிழ் பெண்கள் புடவை கட்ட மறுக்கலாமா?.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மற்றும் யாழ்நகரில்....
## Diploma in Mass Media

உலகை ஆளும் ஊடகத்துறையில் நீங்களும் ஒருவராகுங்கள்!

### அறிவிப்பாளர் பயிற்சி



வானொலி,தொலைக்காட்சி அறிவிப்பாளராக,தயாரிப்பாளராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா?

இதோ...

வடமாகாணத்தில்(திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா Sun British College in Media Uit வழங்கும் அறிவிப்பாளர் பயிற்சி நெறி( Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை செய்தி வாசிப்பு இன்னும் பல (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மறை FM இல் அறிவிப்பாளராகும் சந்தர்பம்)

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சி மேற்கொண்டோர் அரச,தனியார் வானொலி தொலைக்காட்சி நிறுவனங்களில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றனர்.

பதிவுகளுக்கு விரையுங்கள். அழையுங்கள் கீழ் வரும் அலைபேசி இலக்கத்திற்கு... அனைத்து வகுப்புக்களும் இம்மாதம் ஆரம்பம்.

வவுனியா.முல்லைத்தீவு.மன்னார்.யாழ்ப்பாணம்.

3 மாதம் Full time. Part Time

**Sun British College**
No :- 26 Appalo Hospital Upstair Building.
Station Road Vavuniya.
Tp : 077 792 9475. 024 222 6649

**IISEEES NALLUR CAMPUS**
No :- 762.Point Petro Road
Nallur.Jaffna
Tp : 077 792 9475.021 222 4728

## புதியவன்
## Advertising unit


**விளம்பர தொடர்புகளுக்கு**

மன்னார் - 0777446094
யாழ்ப்பாணம் - 077 849 5861
கிளிநொச்சி -071 679 2692

புதியவன்
இல-87 பிரதான வீதி
மன்னார்
Mail :-putheyavan2013@gmail.com

www.putheyavan.com





## சோபனாஸ் ஸ்ரோர்ஸ்

735,மானிப்பாய் வீதி, ஆலடிச்சந்தி
யாழ்ப்பாணம்.

T.P.No. 0779969098

**யாழ் நகரில் முதல் முறையாக கிருபா லேணர்ஸ் வழங்கும் இரவு நேர சாரதி பயிற்சி நெறி.**
**தொடர்புகளுக்கு- 0714546959**

**தலைமைக் காரியாலயம்**
226.கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
T.P : 0214923200,0212224353
0714546952,0777225292

குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

வான்.முச்சக்கர வண்டி.உழவு இயந்திரம்(டெக்ரர்)அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் 2 வருடம் பூர்த்தியானால் கனரக வாகன(AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.

கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக்லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்

பெண்களுக்கு நவீனகாரில் பயிற்சி வழங்கப்படுகிறது

தவணை முறைக் கட்டணம்

எழுத வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை







## KirupaLearners
# கிருபா லேணர்ஸ்

| பருத்தித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | விசுவமடு | சுன்னாகம் | மன்னார் |
|---|---|---|---|---|---|---|
| T.P : 0214923201 | T.P : 0214923202 | T.P : 0212285505 | T.P : 0213006550 | T.P : 0213201515 | T.P : 0212242022 | T.P : 0719887699 |
| 0714546958 | 0212270700 | 0714546955 | 0714546957 | 0714546955 | 0714546955 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண்கள் மற்றும் பெண்கள் பெரிதும் அவஸ்தைப்படும் சரும பிரச்சனைகளில் ஒன்று தான் முகப்பரு. இத்தகைய முகப்பருக்களானது முகத்தின் அழகைக் கெடுக்கும். முகப்பரு தாடைகளில் வந்தால், மேக்கப் செய்து மறைக்க முயற்சிப்போம். இருப்பினும், அந்த முகப்பருக்களானது மேக்கப் பொருள்களில் உள்ள கெமிக்கல்களால் உடைந்து, முகம் முழுவதும் பரவி பெரும் தொல்லையைக் கொடுக்கும். பருக்கள் முகங்களில் மட்டுமின்றி, உடலில் பல இடங்களில் வரும். முகப்பருக்கள் எதனால் வருகிறது? தூசிகள், பக்றீரியா மற்றும் இறந்த செல்களின் கலவையானது, சரும எண்ணெய் சுரப்பிகளில் தங்கி புரப்பியோனி பாக்றீரியாவை (Propionibacteria) வளர்ச்சி அடையச் செய்து, பருக்களாக வெளிப்படுகின்றன. அதுமட்டுமின்றி, வேறு சில சரும பிரச்சனைகளையும் உண்டாக்கி விடுகின்றன. மேலும் பி.சி.ஓ.எஸ், கர்ப்பம் மற்றும் எண்ணெய் சருமம் கூட முகப்பருக்களை உண்டாக்கும். இத்தகைய பருக்கள் தாடைகளில் வந்தால், அவை முகத்தின் அழகையே பாழாக்கிவிடும். இவற்றைப் போக்குவது மிகவும் கடினம். இருப்பினும், ஒருசில இயற்கைப் பொருள்கள் மூலம் தாடைகளில் வரும் பருக்களை போக்க முடியும். சரி, இப்போது தாடைகளில் ஏற்படும் பருக்களை போக்கும் சில இயற்கை சிகிச்சைகளைப் பார்ப்போம்.



## முகப்பருவை இல்லாமல் செய்யலாம்

➢ உடலின் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளைப் போக்க ஆவி பிடிக்க வேண்டும். ஏனெனில் ஆவி பிடித்தால், தோல் துளைகள் திறந்து, தோல் துளைகளில் தங்கியுள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்களை தளர்த்துவிடும். இதனால் ஆவி பிடித்த பின் கொட்டன் துணி கொண்டு முகத்தை துடைத்தால், பருக்களை உண்டாக்கும் மாசுக்கள் மற்றும் இறந்த செல்கள் முற்றிலும் வெளிவந்துவிடும்.

➢ கிராம்பும் பருக்களை போக்கக்கூடிய பொருள்களில் ஒன்றாகும். அதற்கு கிராம்பை நீரில் போட்டு கொதிக்க வைத்து குளிர வைத்து, பின் அதனை அரைத்து, பருக்கள் உள்ள இடங்களில் தடவி, 20 நிமிடம் ஊற வைத்து, குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும்.

➢ அடிக்கடி முகத்தை கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் படியும் அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள், எண்ணெய் சுரப்பிகளில் இருந்து வெளியேறும். முகப்பரு மற்றும் பிம்பிளை உருவாக்குவதில் இருந்து தடுக்கலாம்.

➢ சந்தனப் பொடியுடன், தயிர், கடலை மாவை மற்றும் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி ஊற வைத்து முகத்தை கழுவினால், பருக்கள் நீங்குவதோடு, முகமும் பொலிவோடு காணப்படும்.

➢ தேனைக் கொண்டு பருக்கள் உள்ள இடங்களில் மசாஜ் செய்து, 20 நிமிடம் ஊற வைத்து, பால் கொண்டு முதலில் முகத்தை கழுவி, பின் நீரில் கழுவினால், சரும வறட்சியை தவிர்ப்பதோடு, பருக்களையும் போக்கலாம்.

➢ எலுமிச்சையின் சாற்றினைக் கொண்டு, பரு உள்ள இடத்தில் தேய்த்து சிறிது நேரம் மசாஜ் செய்து, குளிர்ந்த நீரில் கழுவினாலும், பருக்கள் நீங்கிவிடும்.

➢ பேக்கிங் சோடாவை, எலுமிச்சை சாறு மற்றும் தேன் சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் பருக்கள் எளிதில் போய்விடும்.

➢ தக்காளியும் சருமத்தை சுத்தப்படுத்தி, அழகாக வைத்துக் கொள்ள உதவும் சிறப்பான ஒரு பொருள். எனவே தினமும் தக்காளித் துண்டைக் கொண்டு, சிறிது நேரம் மசாஜ் செய்து கழுவினால், முகப்பருக்கலும், அதனால் ஏற்பட்ட தழும்புகளில் இருந்தும் விடுபடலாம்.

➢ வாழைப்பழத்தின் தோலை அரைத்து, அதில் சிறிது தயிர் சேர்த்து முகத்திற்கு தடவி ஊற வைத்து கழுவினால், முகப்பரு மற்றும் சருமப் பிரச்சனைகளான பழுப்பு நிற சருமம் மற்றும் கரும்புள்ளிகளில் இருந்து விடைபெறலாம்.

➢ சருமம் பொலிவோடு இருக்க வேண்டுமெனில், உடலில் உள்ள நச்சுக்களை முழுவதும் வெளியேற்ற வேண்டும். அதற்கு தினமும் தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். இதனாலும் பருக்களை இல்லாமல் செய்யலாம்.

## கருக்கலைப்பின் பின் மலச்சிக்கலா?

அறுவை சிகிச்சையின் மூலம் கருக்கலைப்பு செய்வது சிலருக்கு அதிர்ச்சிகரமான அனுபவமாக இருக்கும். எதிர்பாராதவாறு கர்ப்பம் அடைந்துவிட்டால், அதனை மருந்தின் மூலம் கலைத்து விடுகின்றனர். உடல் நலத்திற்காக கருத்தரித்த பெண்களை அறுவை சிகிச்சையின் மூலம் கருக்கலைப்பு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு அறுவை சிகிச்சையின் மூலம் கருக்கலைப்பு செய்வதால் பெண்கள் மலச்சிக்கல் பிரச்சனைக்கு ஆளாவார்கள். இதற்காக பயப்பட வேண்டாம். ஏனெனில் இது பொதுவான ஒரு பிரச்சனை தான். இவ்வாறு அறுவை சிகிச்சையின் மூலம் கருக்கலைப்பு நடந்த பின்னர் மலச்சிக்கல் ஏற்பட பல காரணங்கள் உள்ளன. காரணங்கள் என்னவென்று பார்ப்போம்..

➢ கருக்கலைப்பு செய்தால், கருப்பையில் உள்ள சிசு மட்டும் தான் வெளியேற்றப்படுமே தவிர, கர்ப்பத்திற்கு வழிவகுக்கும் ஓமோன்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கும். இதனால் கர்ப்பத்தின் போது ஏற்படும் மலச்சிக்கல் பிரச்சனை, கருக்கலைப்பிற்கு பினனா் ஏற்படுகிறது. ஆனால் நாளடைவில் இந்தப் பிரச்சனை குணமாகிவிடும்.


➢ வயிற்றில் மேற்கொள்ளும் அறுவை சிகிச்சையின் போது, அடிவயிற்றில் கடுமையான அதிர்வு ஏற்படும். இதனால் அறுவை சிகிச்சைக்கு பின் அடிவயிற்றில் உள்ள தசைகளானது அதிர்விலிருந்து மீளாமல் இருப்பதால், குடலியக்கத்தின் செயற்பாடானது குறைந்து, மலச்சிக்கலை ஏற்படுத்துகிறது.



➢ கருக்கலைப்பு நடந்தால், சிறிது நாள்கள் ஓய்வு எடுக்க வேண்டும். இந்த நேரத்தில் அதிகமாக வேலை செய்யக்கூடாது. இவ்வாறு வேலை செய்யாமல் இருப்பதால், மலச்சிக்கலை ஏற்படுத்தும். ஆனால் மலச்சிக்கல் ஏற்படுகிறது என்பதற்காக, உடனே எழுந்து வேலைகளைச் செய்யாமல், முடிந்த அளவு ஓய்வு எடுப்பதே நல்லது.

➢ அறுவைச் சிகிச்சையின் போது அதிகப்படியான இரத்தத்தை இழக்க நேரிடும். இதனால் உடலில் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படும். எனவே மருத்துவர்கள் உடலில் இரத்தத்தை அதிகரிப்பதற்கு, மருந்துகளைக் கொடுப்பார்கள். இந்த மருந்துகளை உட்கொள்வதால், மலச்சிக்கல் பிரச்சினையை சந்திக்க நேரிடுகிறது.

மலச்சிக்கலில் இருந்து விடுபட, நார்ச்சத்துள்ள உணவுப் பொருள்களை அதிகம் உட்கொள்ளுங்கள்.

பெண் பூவே பகுதியில்

உங்களுக்கு தெரிந்த சமையற்குறிப்புக்கள். அழகுக்குறிப்புக்கள். மருத்துவக்குறிப்புக்கள் மற்றும் பெண்கள் பற்றிய ஆக்கங்களை இன்றே அனுப்புங்கள்.
பெண் பூவே. புதியவன். இல87 பிரதான வீதி மன்னார்.

## கூந்தல் வளர ஓயில் மசாஜ்



ஓயில் மசாஜ் செய்தால், கூந்தலின் வளர்ச்சி அதிகரிப்பதோடு, ஸ்காப்பில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் வறட்சியான கூந்தலில் இருந்து விடுபடலாம். ஆனால் அவ்வாறு மசாஜ் மேற்கொள்ளும் போது, சரியான எண்ணெய்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இதனால் கூந்தல் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுவது நன்கு தெரியும். பெரும்பாலும் ஓயில் மசாஜ் என்றால் தேங்காய் எண்ணெயைத் தான் பயன்படுத்துவோம். ஆனால் ஓயில் மசாஜ் செய்வதற்கு நிறைய எண்ணெய்கள் உள்ளன. அதில் விளக்கெண்ணெய், பாதாம் எண்ணெய் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மேலும் இது போல வேறு சில எண்ணெய்களும் உள்ளன. இத்தகைய எண்ணெய்களில் நிறைய நன்மைகள் நிறைந்துள்ளன. அதுவும் இந்த எண்ணெய்களுடன் செம்பருத்தி, தயிர் அல்லது எலுமிச்சை சாறு போன்றவற்றை சேர்த்து கூந்தலுக்கு பயன்படுத்தினால், இன்னும் நல்ல பலனைப் பெறலாம். சரி, இப்போது தலைக்கு ஓயில் மசாஜ் செய்வதற்கு எந்த எண்ணெய்கள் சிறந்தது என்று பார்ப்போம்.

தேங்காய் எண்ணெய் கொண்டு தலைக்கு மசாஜ் செய்தால், கூந்தலின் வளர்ச்சி அதிகரிப்பதோடு, கூந்தல் உதிர்தல், ஸ்கால்ப் வறட்சி மற்றும் அரிப்பு போன்றவை நீங்கிவிடும். அதிலும் வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெயை தலைக்கு தேய்த்து மசாஜ் செய்து, 1-2 நிமிடம் ஊற வைத்து, பின் குளிக்க வேண்டும். பொடுகுத் தொல்லை இருந்தால், அந்த எண்ணெயுடன் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, கூந்தலுக்கு தடவலாம்.

பாதாம் எண்ணெயும் கூந்தல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். குறிப்பாக இந்த எண்ணெய் கொண்டு தலைக்கு மசாஜ் செய்தால், கூந்தலானது நன்கு அடர்த்தியாக மற்றும் நீளமாக வளரும். அதற்கு இந்த எண்ணெயை இரவில் படுக்கும் முன் தலைக்கு தடவி மசாஜ் செய்து, காலையில் எழுந்து குளிக்க வேண்டும். இதனால் கூந்தல் வளர்ச்சி அதிகரிப்பதுடன், ஸ்காப்பில் ஏற்படும் பிரச்சனைகளை யும் தவிர்க்கலாம்.

அக்காலத்தில் எல்லாம் கூந்தலுக்கு விளக்கெண்ணெயைத் தான் பயன்படுத்துவார்கள். அதனால் தான் அப்போதுள்ள பெண்களுக்கு கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் இருக்கிறது. எனவே கூந்தலின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கு விளக்கெண்ணெய் கொண்டு மசாஜ் செய்து ஊற வைத்து குளிக்கலாம்.

அதிகமான கூந்தல் உதிர்தல் பிரச்சனை இருந்தால், கடுகு எண்ணெயை வெது வெதுப்பாக சூடேற்றி, தலைக்கு மசாஜ் செய்தால், கூந்தல் நன்கு கறுப்பாகவும், நீளமாகவும் வளரும்.

வாரம் ஒரு முறை தலைக்கு நல்லெண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, தலையில் தடவி மசாஜ் செய்து வர, கூந்தல் நன்கு ஆரோக்கியமாக வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிகாரமற்ற மாகாணசபையில் இருக்கைகளை பெற நடக்கும் போட்டி




இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான மாகாணசபை ஓர் ஆரம்ப புள்ளியாகக்கூட கருதமுடியாத தீர்வென அடிக்கொருதரம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாகாணசபையின் முதலமைச்சர் ஆசனத்திற்காயினும் சரி நடக்கின்ற வேட்பாளர் தெரிவுக்காயினும சரி முட்டி மோதல்கள் நடப்பது அவர்கள் சொல்வதொன்று செய்வதொன்று என்பதனை துலாம்பரமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

கூட்டமைப்பின் பாகப்பிரிவினை வாரகணக்கினில் நீடிக்கின்றது. கதிரைகளிற்கான பேரங்கள் கொழும்பு - வவுனியா - யாழ்ப்பாணமென நீடித்தது. பலவேளைகளினில் அயல்நாட்டு தூதுவராலயங்களும் சிலவற்றை திணித்தன. சில கட்சிகள் வேட்பாளர்களை தயாராக வைத்துக் கொண்டு இட ஒதுக்கீடு கோரின இனனும் சிலவோ இட ஒதுக்கிட்டை கோரிப்பெற்ற பின்னர் வேட்பார்களை தேடின.

கதிரைப் போட்டிக்காக பெரும்பாலும் தேடிக்கண்டுபிடிக்க முடியாதிருந்த பல தலைகளும் ஊர்ப்பக்கம் எட்டிப் பார்த்திருந்தன. இனி வாக்களர்களுடன் உறவு கொண்டாட சாதாரணமாக பலரையும் வீதிகளிலோ, சந்திகளிலோ தேர்தல் முடியும் வரை காணமுடியும்.

இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வரையில் ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு முழுமையான முடிவு எட்டப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் முதலாம் திகதியினுள் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட வேண்யிருப்பதால் எப்படியோ விட்டுக் கொடுப்புகளுடன் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் முடிவினை எட்ட வேண்டியிருக்கும். ஆனாலும் வாக்குக் கேட்பது வீட்டிற்காக இருப்பினும் விருப்பு வாக்குப் புள்ளடிகளுக்காக நிச்சயம் ரணகள மொன்று தயாராகவே இருக்கின்றது.

## வேட்பாளர் தெரிவு

கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு பெரும்பாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், கட்சித் தலைவர்களினதும், தனிப்பட்ட முடிவாகவே இம்முறையும் இருந்துள்ளது. பெரும்பாலானவர்களது மனக் கண்ணில் அடுத்த வருட பாராளுமன்றத் தேர்தல், அதற்கான தூரநோக்கம் அப்பட்டமாகவே தெரிகின்றது. அனைவருமே அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலில் தமக்கு போட்டியாக யாரேனும் முளைத்துவிடக் கூடாதென் பதில் தெளிவாக இருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். அடுத்த பாராளுமன்ற தேர்தலில் பிரதேசவாரியாக வாக்குகளை அள்ளி வரக்கூடியவர்களாக வேட்பாளர்கள் இம்முறையும் இருந்தால் போதுமென்ற நிலையே தொடர்கின்றது.

சிவில் சமூக அமைப்புகள் ஆகக் குறைந்தது துறைசார் அனுபவமுள்ள புத்திஜீவிகளையாவது களமிறக்க கோரின. பெருமபாலும் ஓய்வு பெற்றுவிட்டலும், அதே இராணுவ கட்டளைப்பீட முனைப்போடு செயற்பட்டுவரும் ஆளுநர் அதேக திரையில் தொடர்வது உறுதியாகத் தெரிகின்றது. அவரால் இயக்கப்பட்டுவரும், கைப்பொம்மைகளை பெரும்பாலும் கொண்ட மாகாணசபை, தேர்தலின் பின்னரும்கூட மாற்றமடையப்போவதாக தெரியவில்லை. உத்தரவுகளை பிறப்பிப்பவராக தானே இருப்பேன் தேர்தல் அறிவிப்பின் பின்னரும்கூட கூறப்பட்டுள்ளதாக உள்வீட்டு தகவல்கள் கூறுகின்றன.

அவ்வகையினில் தெரிவாகப் போவது கூட்டமைப்பின் மாகாணசபை ஆட்சியானால் வடக்கு ஆளுநரினதோ வடக்கு மாகாண சபையினது நிர்வாக கட்டமைப்பினதோ உதவிகள் பெரும்பாலும் கிட்டப் போவதில்லை. அவ்வகையினில் தெரிவாகும் முதலமைச்சராயினும் சரி, ஏனைய அமைச்சர்களாயினும் சரி தனித்து நின்று சுயமாகச் சித்தித்து முடிவெடுக்க வேண்டியவர்களாகவே இருத்தல் வேண்டும். இல்லாவிடின் சாதாரண பிரதேச சபைகளோ, நகரசபைகளோ செயளலார்கள் ஒத்துழைப்பதில்லையெனக்கூடி முடங்கிக் கிடக்கும் கூட்டமைப்பின் பொரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களது நிலை மாகாணசபைக்கும் தோன்றலாம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பெருவாரியாக வெற்றியைத் தட்டிப் பறித்திருந்தது. ஆனாலும் தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டமைப்பின் ஆளுமைகள், நடந்து முடிந்த இரு வருடங்களுள் சாதித்தென்று சொல்லிக் கொள்ளத்தக்கதாக ஏதுமில்லை. பரஸ்பரம் உள்வீட்டு பங்காளிச் சண்டைகளை சந்திக்கு எடுத்து வந்து சிரிக்க வைத்ததே மிச்சமாகும். ஆளுநர் முதல் எதிர்க்கட்சி வரைக்கும் சிலவேளைகளில் பங்காளிக் கட்சிகளை கூட குற்றஞ்சுமத்தி தமது கையாலாகத்தன்த்தை தலைமைகள் மூடி மறைக்கப் பார்க்கின்றன.

அதே கதைதான் மாகாணசபை நிர்வாகத்திற்கும் வருமானால் கதை கருதறுந்த கதையாகியே விடும். வடமாகாண சபையின் கதிரைகள் பெரும்பாலும் சொகுசானவையாக இருக்கப்போவதில்லை. இணங்கிச் செல்லும் அரசியல். கூட்டமைப்பிற்கு ஆகாதென்பதால் முதலமைச்சரும் அவ்வாறானதொரு சூழலுக்கே தள்ளப்படலாம். ஆரம்பத்தினில் மாவைக்காக கத்தித்தீர்த்த அனைவருமே இப்போது சீ.வி.விக்கினேஸ்வரனிற்கு ஒரு சந்தர்ப்பத்தையேனும் வழங்கிப் பார்க்கலாமே யென்ற மனோநிலைக்கு வந்துள்ளனர்.

தமிழ் மக்களிடம் அரசியல் ரீதியாக நல்லபிள்ளை பேறெடுப்பதற்கான முனைப்பு சீ.வி.விக்கினேஸ்வரன் அவர்களிடம் வெளிப்படையாகவே தெரிகின்றது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியெல்லாம் அவர் மனம் திறந்து கருத்துக்களை வெளிப்படுத்தியே வருகின்றார்.

## ஓய்வு அரசியல்

வடமாகாண சபைத் தேர்தலுக்கான கூட்டமைப்பு வேட்பாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞரணி விடுத்துள்ள அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது. வழமைபோன்று கதிரைக்காக வீசும் சூறைக்காற்றின் முன்னால் இவையெல்லாம் எடுபடாதே போய்விடுவது மிகவும் பரிதாபகரமானது. ஆயுதப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதெல்லாம் பேசப்பட்ட இளம் சந்ததி இப்போது வழமைபோலவே சுவரொட்டி ஒட்டும் பணிக்கு திரும்பப் போகின்றது.

கூட்டமைப்பின் இளம் தலைமுறையினரின் தகவல்களின்படி, வேட்பாளர்களுள் 80 சத வீதத்திற்கும் மேல் கட்டாய ஓய்வு பெறவேண்டிய அரசியலாளர்களால் நிரம்பிப் போயிருப்பதாக கூறப்படுகின்றது. கதிரைகளை அலங்கரித்த வேளைகளிலெல்லாம் ஒரு தும்பைக்கூட தூக்கிப்போட முடியாது பேசாமலிருந்த இவர்களால் என்ன செய்ய முடியுமென்பது பெருங் கேள்வி. வழமைபோன்றே உத்தரவுகளுக்கு மடங்கி, வாலாட்டும் நல்லபிள்ளை நாய்க்குட்டி பேறெடுத்த இத்தரப்புகள் தலைமையை விரும்பியிருப்பது போன்று, கதிரைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டே கவனமாக இருப்பார்களென்பது நிச்சயம்.

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

சுதந்திரக்கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் பற்றிய சர்ச்சைக்கு கொழும்பு முடிவுகட்டிவிட்டது. முதலமைச்சர் வேட்பாளரென எவரையும் முன்னிறுத்தப்போவதில்லையென திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டு விட்டது. எனினும் சர்வதேச ஊடகமொன்றிற்கு செவ்வியளித்த சுதந்திரக்கூட்டமைப்பின் வடக்கிற்கான பிரதான பங்காளியான டக்ளஸ் தேவானந்தாவோ தானே முதலமைச்சர் பற்றிய முடிவை எடுக்க முடியுமென கூறியுள்ளார். புதிதாக களத்தினில் குதித்த தயா மாஸ்டரோ முதலமைச்சர் பற்றி கொழும்பே தீர்மானிக்குமென அடித்துக் கூறுகின்றார்.

எது எவ்வாறிருப்பினும் வடக்குத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக டக்ளஸ் தேவானந்தா குதிக்கப் போதில்லையென்றே கூறப்படுகின்றது. கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக சீ.வி. விக்னேஸ்வரன் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், டக்ளஸ் தேவானந்தாவை போட்டியிலிருந்து விலகிக் கொள்ள கொழும்பு கேட்டிருந்ததாக கூறப்படுகின்றது. இக்கதைகளது உண்மைத்தன்மைகள் பற்றி அடுத்து வரும் நாட்கள் நிச்சயம் பதிலைத் தருமென எதிர்பார்க்கலாம்.

எனினும், வடக்கு மாகாண சபை, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியேயுள்ளது என்பதால் யாழ்ப்பாணத்தில் மட்டும் நிலையாக அவரிடம் இருக்கும் வாக்குவங்கி, ஒர கட்டத்திற்கு மேலாக எதனையும் செய்து தீர்மானிக்கப் போவதில்லையென்பது அனைவருக்கும் நன்கு தெரியும். மன்னாரிலும், வவுனியாவிலும் குறைந்த மட்டத்திலேனும் ஆதிக்கம் செலுத்தும் அரச பங்காளிகளும், புதிதாக அரிதாரம் பூசி களமிறங்கும் அரசியல் வாதிகளும் மக்கள் ஆணையைப் பெற்றால் மட்டும் இப்போர்தைக்கு பேசமுடியும்.

எது எவ்வாறாக இருப்பினும் இந் நிமிடம் வரை நடக்குமா? இல்லையாவென்பது பற்றி நிச்சயமற்றிருக்கும் வடக்குத் தேர்தல் அறிவிப்பினூடாக நில ஆக்கிரமிப்பு இனப்படுகொலை, குடியேற்றம், பௌத்த மயமாக்கலைனப் பேசிக்கொண்டிருந்தவற்றின் மூச்சை நிறுத்த வைத்த வகையினில் மகிந்த அரசிற்கு வெற்றியே.

### மின்னல் வரிகள்

**ஜீன்கோர்ட் என்ற பிரெஞ்சு எழுத்தாளரை அதிர்ஷ்டத்தில் உள்ள நம்பிக்கையைப்பற்றிக் கேட்ட போது "நிச்சமாக எனக்கு அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கையிருக்கிறது. இல்லையென்றால் எனக்குப் பிடிக்காதவர்கள் பெறும் வெற்றிக்கு என்ன காரணம் சொல்லுவேன்" என்றாராம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**15.07.2013 மன்னாரில் நடைபெற்ற**

**புதியவன் வெளியீட்டு விழா நிகழ்வுகள்.**




இப்பத்திரிகை # 87,பிரதான வீதி,மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 26.07.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org